வென்றவைம்புலன்கட்கம்மை விலக்குத்தற்குரியீரெல்லா
ஈன்றவநாரணனொடு நான்முகனடிக்காணக்குற
றன்றவர்க்கரியார்போலு மதிகைவீரட்டனாரே. (௯)

தடக்கையாலெடுத்துவைத்துத் தடவரைகுலுங்கவார்த்துக்
இடக்கையாலிடர்களோங்கக் கிளர்மணிமுடிகள்சாய
முடக்கினார்திருவிரலான் முருகமர்கோதைபாகத்
தடக்கினொன்னையாளு மதிகைவீரட்டனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆகப்பதிகம்.௨௫

* உத்தரமலையென்பது - கயிலாயமலை

திருவதிகைத் திருவீரட்டானம் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

நம்பனேயெங்கள்கோவேநாதனேயாதிமூர்த்தி
பங்கனேபரமயோகியென்றென்றேபரவிநாளுஞ்
செம்பொனேபவளக்குன்றேதிகழ்மலர்ப்பாதங்காண்பா
னன்பனேயலந்துபோனேனதிகைவீரட்டனாரே. (௧)

பொய்யினான்மிடைந்தபோர்வைபுரைபுரையழுகிவீழ
மெய்யனாய்வாழமாட்டேன்வேண்டிற்றொன்றைவர்வேண்டார்
செய்யதாமரைகளன்னசேவடியிரண்டுங்காண்பா
னையநானலந்துபோனேனதிகைவீரட்டனாரே. (௨)

நீதியால்வாழமாட்டேனித்தலுந்தூயேனல்லே
னோதியுமுணரமாட்டேனுன்னையுள்வைக்கமாட்டேன்
சோதியேசுடரேயுன்றன்றூமலர்ப்பாதங்காண்பா
னாதியேயலந்துபோனேனதிகைவீரட்டனாரே. (௩)

தெருளுமாதெருளமாட்டேன்றீவினைச்சுற்றமென்னும்
பொருளுளேயழுந்திநாளும்போவதோர்நெறியுங்காணே
னிருளுமாமணிகண்டாநினிணையடியிரண்டுங்காண்பான
அருளுமாறருளவேண்டுமதிகைவீரட்டனாரே. (௪)

அஞ்சினாலியற்றப்பட்டவாக்கைபெற்றதனுள்வாழு
மஞ்சினாலடர்த்தப்பட்டிங்குழிதருமாதனேனை
யஞ்சினாலுய்க்கும்வண்ணங்காட்டினாயக்கச்சந்தீர்ந்தே
னஞ்சினாற்பொலிந்தசென்னியதிகைவீரட்டனாரே. (௫)

உறுகயிறூசல்போலவொன்றுவிட்டொன்றுபற்றி
மறுகயிறூசல்போலவந்துவந்துலவுநெஞ்சம்
பெறுகயிறூசல்போலப்பிறைபுல்குசடையாய்பாதத்
தறுகயிறூசலானேனதிகைவீரட்டனாரே. (௬)

கழித்திலேன்காமவெந்நோய்காதன்மையென்னும்பாச
மொழித்திலேனூனகத்தேயுணர்வெனுமிமைதிறந்து
விழித்திலேன்வெளிறுதோன்றவினையெனுஞ்சரக்குக்கொண்டே
னழித்திலேனயாத்துப்போனேனதிகைவீரட்டனாரே. (௭)

மன்றத்துப்புன்னைபோலமரம்படுதுயரமெய்தி
யொன்றினாலுணரமாட்டேனுன்னையுள்வைக்கமாட்டேன்
கன்றியகாலன்வந்துகருக்குழிவிழுப்பதற்கே
யன்றினாலஞ்சிட்டேனதிகைவீரட்டனாரே. (௮)

14 பிணிவிடாவாக்கைபெற்றேன் பெற்றமொன்றேறுவானே
பணிவிடாவிடும்பையென்னும் பாசனத்தழுந்துகின்றேன்
றுணிவிலேன் றூயனல்லேன் றூமலர்ப்பாதங்காண்பா
னணியனாயறியமாட்டேன திகைவீரட்டனாரே. (௯)

15 திருவினாள்கொழுநனாருந் திசைமுகமுடையகோவு
மிருவருமெழுந்தும்வீழ்ந்து மிணையடிகாணமாட்டா
ரொருவனேயெம்பிரானேயுன் றிருப்பாதங்காண்பா
னருவனேயருளவேண்டு பதிகைவீரட்டனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆக-பதிகம் - ௨௬.

21

திருவதிகைத்திருவீரட்டானம் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்

16 மடக்கினார்புலியின்றோலை மாமணிநாகங்கச்சா
முடக்கினார்முகிழ்வெண்டிங்கண் மொய்சடைக்கற்றைதன்மேற்
றொடக்கினார்தொண்டைச்செவ்வாய்த் துடியிடைப்பரவையுட்கு
லடக்கினார்கெடிலவேலி யதிகைவீரட்டனாரே. (௧)

17 சூடினார்கங்கையாளைச் சூடியதுழனிகேட்டங்
கூடினாரங்கையாளூடலையொழிக்கவேண்டிப்
பாடினார்சாமவேதம் பாடியபாணியாலே
யாடினார்கெடிலவேலி யதிகைவீரட்டனாரே. (௨)

18 கொம்பினேர்குழைக்கவென்றகோமகன்கோலநீர்ம
நம்பினார்காணலாகாவகையதோர்நடலைசெய்தார்
வெம்பினார்மதில்கள்மூன்றும்வில்லிடையெரித்துவீழ்த்த
வம்பினார்கெடிலவேலி யதிகைவீரட்டனாரே. (௩)

19 மறிபடக்கிடந்தகையா வளரிளமங்கைபாகரு
செறிபடக்கிடந்தசெக்கர்ச் செழுமதிக்கொழுந்துசூடிப்
பொறிபடக்கிடந்தநாகம் புகையுமிழ்ந்தழலவீக்கிக்
கிறிபடநடப்பார்போலுங் கெடிலவீரட்டனாரே. (௪)

20 நரிவரால்கவ்வச்சென்று நற்றசையிழந்ததோற்றந்
தெரிவரால்மாலசிந்தை தீர்ப்பதோர்சிந்தைசெய்வார்
வரிவராலுகளுந்தெண்ணீர்க் கழனிசூழ்பழனவேலி
யரிவரால்வயல்கள்சூழ்ந்த வதிகைவீரட்டனாரே. (௫)

21 புள்ளலைத்துண்டவோட்டி லுண்டுபோய்ப்பலாசங்கொம்பின்
சுள்ளலைச்சுடலைவெண்ணீ றணிந்தவர்மணிவெள்ளேற்றுத்

துள்ளலைப்பாகன்றன்னைத்தொடர்ந்திங்கேகிடக்கின்றேனை
யள்ளலைக்கடப்பித்தாளுமதிகைவீரட்டனாரே. (௬)

நீறிட்டநுதலர்வேலைநீலஞ்சேர்கண்டர்மாதை
கூறிட்டமெய்யராகிக்கூறினாராறுநான்கும்
கீறிட்டதிங்கள்சூடிக்கிளர்தருசடையினுள்ளால
ஆறிட்டுமுடிப்பர்போலுமதிகைவீரட்டனாரே. (௭)

காணிலார்கருத்தில்வாரார்திருத்திலார்பொருத்தலாகா
ரேணிலாரிறப்புமில்லார்பிறப்பிலார்துறக்கலாகா
நாணிலாரைவரோடுமிட்டெனைவிரவிவைத்தா
ராணலார்பெண்ணுமல்லாரதிகைவீரட்டனாரே. (௮ ௯)

தீர்த்தமாமலையைநோக்கிச்செருவலியரக்கன்சென்று
போர்த்தலும்பேதையஞ்சப்பெருவிரலதனையூன்றிச்
சீர்த்தமாமுடிகள்பத்துஞ்சிதறுவித்தவனையன்று
ஆர்த்தவாயலறவைத்தாரதிகைவீரட்டனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆகப்பதிகம் ௨௭.

திருவதிகைத்திருவீரட்டானம் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

முன்பெலாமிளையகால மூர்த்தியைநினையாதோடிக்
கண்கணாவிருமிநாளுங் கருத்தழிந்தருத்தமின்றிப்
பின்பகலுணங்கலட்டும் பேதைமார்போன்றேனுள்ள
மன்பனாய்வாழமாட்டே னதிகைவீரட்டனாரே. (௧)

கறைப்பெருங்கண்டத்தானே காய்கதிர்நமனையஞ்சி
நிறைப்பெருங்கடலைக்கண்டே னீள்வதோர்யுசிக்கண்டேன
பிறைப்பெருஞ்சென்னியானே பிஞ்ஞகாவிவையனைத்து
மறுப்பதோருபாயங்காணே னதிகைவீரட்டனாரே. (௨)

நாதனாரென்ன நாளுநடுங்கினராயிறங்க
ளேதங்களறியமாட்டா ரிணையடிதொழுதோமென்பா
ராதனாவனென்றெள்கியதிகை வீரட்டனேநின்
பாதனைப்பரவாதுய்க்கும் பழவினைப்பரிசிலேனே. (௩)

சுடலைசேர்சுண்ணமெய்யர் சுரும்புணவிரிந்தகொன்றைப்
படலைசேரலங்கன்மார்பர் பழனஞ்சேர்கழனித்தெங்கின்
மடலைநீர்கழியவோடி யதனிடைமணிகள்சிந்துங்
கெடிலவீரட்டமேயகிளர்சடைமுடியனாரே. (௪)

29 மந்திரமுள்ளதாக மறிகடலெழுநெய்யாக
விந்திரன்வேள்விததீயி லெழுந்ததோர்கொழுந்தின்வண்ணஞ்
சிந்திரமாகநோக்கித தெருட்டுவார்தெருட்டவந்து
கந்திரமுரலுஞ்சோலைக் கானலங்கெடிலத்தாரே. (ரு-சு-எ-அ-கூ)

30 மைஞ்ஞலமனையகண்ணாள் பங்கன்மாமலையையோடி
மெஞ்ஞரம்புதிரம்பிலக விசைதணித்தரக்கன்வீழந்து
கைஞ்ஞரம்பெழுவிக்கொண்டு காதலாலினிதுசொன்ன
இன்னரங்கேட்டுகந்தார் கெடிலவீரட்டனாரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

ஆகப்பதிகம் - உஅ.

திருச்செம்பொன்பள்ளி - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

31 ஊனினுளுயிரைவாட்டி யுணர்வினார்க்கெளியராகி
வானினுள்வானவர்க்கு மறியலாகாதவஞ்சா
நானெனிற்றானேயென்னு ஞானத்தார்பத்தர்நெஞ்சுட்
டேனுமின்னமுதுமானார் திருச்செம்பொன்பள்ளியாரே. (க)

32 நொய்யவர்விழுமியாரு நூலினுணெறியைக்காட்டு
மெய்யவர்பொய்யுமில்லா ருடலெனுமிடிஞ்சிற்றன்னி
னெய்யமர்திரியுமாகி நெஞ்சத்துள்விளக்குமாகிச்
செய்யவர்கரியகண்டர் திருச்செம்பொன்பள்ளியாரே. (உ)

33 வெள்ளியர்கரியர்செய்யர் விண்ணவரவர்கணெஞ்சு
ளொள்ளியருழியூழி யுலகமதேத்தநின்ற
பள்ளியார்நெஞ்சத்துள்ளார் பஞ்சமம்பாடியாடுந்
தெள்ளியார்கள்ளந்தீர்ப்பார் திருச்செம்பொன்பள்ளியாரே. (ங)

34 தந்தையுந்தாயுமாகித் தானவன்ஞானமூர்த்தி
முந்தியதேவர்கூடி முறைமுறையிருக்குச்சொல்லி
யெந்தைநீசரணமென்றங் கிமையவர்பரவியேத்தச்
சிந்தையுட்சிவமதானார் திருச்செம்பொன்பள்ளியாரே. (ச

35 ஆறுடைச்சடையர்போலு மன்பருக்கன்பர்போலுங்
கூறுடைமெய்யர்போலுங் கோளரவரையர்போலு
நீறுடையழகர்போலு நெய்தலேகமழுநீர்மைச்
சேறுடைக்கமலவேலித் திருச்செம்பொன்பள்ளியாரே. (ரு)

36 ஞாலமுமறியவேண்டி னன்றெனவாழலுற்றீர்
காலமுங்கழியலான கள்ளத்தையொழியகில்லீர்

கோலமும்வேடமுமவாவச செற்றங்கள்குரோதநீக்கிச்
சீலமுநோன்புமாவார் திருச்செம்பொன்பள்ளியாரே. (௬)

புரிகாலேநேசஞ்செய்ய விருந்தபுண்டரீகத்தாரும்
பெரிகாலேமூன்றுமாகி யிமையவர்தொழுகின்றாரும்
தெரிகாலேமூன்றுசந்தி சிட்டாணித்துவணங்கினாறு
திரிகாலங்கண்டவெந்தை திருச்செம்பொன்பள்ளியாரே. (௭)

காருடைக்கொன்றைமாலை கதிர்மதியரவினோடு
நீருடைச்சடையுள்வைத்த நீதியார்நீதியுள்ளார்
பாரொடுவிண்ணுமண்ணும் பதினெட்டுகணங்களேத்தச்
சீரொடுபாடலாறார் திருச்செம்பொன்பள்ளியாரே. (௮)

ஓவாதமறைவல்லானு மோதநீர்வண்ணன்காணு
மூவாதபிறப்பிலாரு முனிகளானார்களேத்தும்
*பூவானமூன்றுமுன்னூற் றறுபதுமாகுமெந்தை
தேவாதிதேவரென்றுந் திருச்செம்பொன்பள்ளியாரே (௯)

அங்கங்களாறுநான்கு மந்தணர்க்கருளிச்செய்து
சங்கங்களபாடவாடுஞ் சங்கரன்மலையெடுத்தா
னங்கங்களுந்திறந்துசோர வலறிடவடர்த்துநின்றுஞ்
செங்கணவெள்ளேறேறுந் திருச்செம்பொன்பள்ளியாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சொர்ணபுரீசர் - தேவியார் - சுகந்தவனநாயகி. ஆகப்பதிகம் - ௨௬.

திருக்கழிப்பாலை - திருநேரிசை

திருச்சிற்றம்பலம்.

நங்கையைப்பாகம்வைத்தார் ஞானத்தைநவிலவைத்தா
ரங்கையிலனலும்வைத்தா ராணையினுரிவைவைத்தார்
தங்கையில்வாளும்வைத்தார் தாமரைமலரும்வைத்தார்
கங்கையைச்சடையுள்வைத்தார் கழிப்பாலைச்சேர்ப்பனாரே. (௧)

விண்ணினைவிரும்பவைத்தார் வேள்வியைவேட்கவைத்தார்
பண்ணினைப்பாடவைத்தார் பத்தர்களபயிலவைத்தார்
மண்ணினைத்தாவநீண்ட மாலினுக்கருளும்வைத்தார்
கண்ணினைநெற்றிவைத்தார் கழிப்பாலைச்சேர்ப்பனாரே. (௨)

வாமனைவணங்கவைத்தார் வாயினைவாழ்த்தவைத்தார்
சோமனைச்சடைமேல்வைத்தார் சோதியுட்சோதிவைத்தா

---

* பூவானமூன்று - மண்டலம் - ௩. முந்நூற்றறுபது அக்கினிச்சுடர் - ௧௦௮.
சூரியன்கதிர் - ௧௧௬. சந்திரன்கலை - ௧௬.

ராமனையாடவைத்தா ரன்பெனும்பாசம்வைத்தார்
காமனைக்காயந்தகண்ணா கழிப்பாலைச்சேர்ப்பனாரே (௩)

அரியனவங்கம்வேத மந்தணர்க்கருளும்வைத்தார்
பெரியனபுரங்கண்மூன்றும் பேரழலுண்ணவைத்தார்
பரியதீவண்ணராகிப் பவளம்போல்நிறத்தைவைத்தார்
கரியதோர்கண்டம்வைத்தார் கழிப்பாலைச்சேர்ப்பனாரே. (௪)

கூரிருள்கிழியநின்ற கொடுமழுக்கையில்வைத்தார்
பேரிருள்கழியமல்கு பிறைபுனற்சடையுள்வைத்தார்
ராரிருளண்டம்வைத்தா ரறுவகைச்சமயம்வைத்தார்
காரிருள்கண்டம்வைத்தார் கழிப்பாலைச்சேர்ப்பனாரே (௫)

உட்டங்குசிந்தைவைத்தா ருள்குவார்க்குள்ளம்வைத்தார்
விட்டங்குவேள்விவைத்தார் வெந்துயர்தீரவைத்தார்
நட்டங்குநடமும்வைத்தார் ஞாலமுநவிலவைத்தார்
கட்டங்கந்தோண்மேல்வைத்தார் கழிப்பாலைச்சேர்ப்பனாரே (௬)

ஊனப்பேரொழியவைத்தா ரோதியேயுணரவைத்தார்
ஞானப்போநவிலவைத்தார் ஞானமுநடுவும்வைத்தார்
வானப்பேராறும்வைத்தார் வைகுந்தற்காழிவைத்தார்
கானப்போர்காதல்வைத்தார் கழிப்பாலைச்சேர்ப்பனாரே (௭)

கொங்கினுமரும்புவைத்தார் குற்றங்கள்கெடுக்கவைத்தார்
சங்கினுள்முத்தம்வைத்தார் சாம்பலும்பூசவைத்தார்
ரங்கமும்வேதம்வைத்தா ராலமுமுண்டுவைத்தார்
கங்குலும்பகலும்வைத்தார் கழிப்பாலைச்சேர்ப்பனாரே (௮)

சதுர்முகன்றானுமாலுந் தம்மிலேயிகலக்கண்டு
எதிர்முகமின்றிநின்ற வெரியுருவதனைவைத்தார்
பிதிர்முகன்காலனன்னைக் காலத்தாற்பிதிரவைத்தார்
கதிர்முகஞ்சடையில்வைத்தார் கழிப்பாலைச்சேர்ப்பனாரே. (௯)

மாலினுணங்கையஞ்ச மதிலிலங்கைக்குமன்னன்
வேலினைவெகுண்டெடுக்கக் காண்டலும்வேதநாவ
னூலினாலேனைக்கிடக்கு நொடிப்பதோரளவில்வீழக்
காலினாலூன்றியிட்டார் கழிப்பாலைச்சேர்ப்பனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

இது சோழநாட்டிலுள்ளது

சுவாமிபெயர்-பாலவண்ணேசுவரர்.தேவியார்-பொற்பதவேதநாயகி ஆகப்பதிகம் - ௩௦

திருக்கடவூர் - திருநேரிசை.

31

திருச்சிற்றம்பலம்

பொள்ளத்தகாயமாய பொருளினைப்போகமாதர்
வெள்ளத்தைக்கழிக்கவேண்டில் விரும்புமின்விளக்குத்தூபம்
உள்ளத்ததிரியொன்றேற்றி யுணருமாறுணரவல்லார்
கள்ளத்தைக்கழிப்பர்போலுங் கடவூர்வீரட்டனாரே (௧)

மண்ணிடைக்குரம்பைதன்னை மதித்துநீர்மையலெய்தில்
விண்ணிடைத்தருமராசன் வேண்டினாலவிலக்குவாரார்
பண்ணிடைச்சுவைகள்பாடி யாடிடம்பத்தர்க்கென்றுங்
கண்ணிடைமணியர்போலுங் கடவூர்வீரட்டனாரே (௨)

பொருத்தியகுரம்பைதன்னுட் பொய்நடைசெலுத்துகின்றீர்
ஒருத்தனையுணரமாட்டீ ருள்ளத்திற்கொடுமைநீக்கீர்
வருத்திவன்களிறுதன்னை வருத்துமாவருத்தவல்லார்
கருத்தினிலிருப்பர்போலுங் கடவூர்வீரட்டனாரே. (௩)

பெரும்புலர்காலைமூழ்கிப் பித்தர்க்குப்பத்தராகி
அரும்பொடுமலர்கள்கொண்டாங் கார்வத்தையுள்ளேவைத்து
விரும்பிநல்விளக்குத்தூபம் விதியினாலிடவல்லார்க்குக்
கரும்பினிற்கட்டிபோல்வார்கடவூர்வீரட்டனாரே. (௪)

தலக்கமேசெய்துவாழ்ந்துதக்கவாறொன்றுமின்றி
விலக்குவாரிலாமையாலேவிளக்கத்திற்கோழிபோன்றேன்
மலக்குவார்மனத்தினுள்ளேகாலனார்தமர்கள்வந்து
கலக்கநான்கலங்குகின்றேன்கடவூர்வீரட்டனாரே (௫)

பழியுடையாக்கைதன்னிற்பாழுக்கேநீரிறைத்து
வழியிடைவாழமாட்டேன்மாயமுந்தெளியகில்லேன்
அழிவுடைத்தாயவாழ்க்கையைவரால்அலைக்கப்பட்டுக்
கழியிடைத்தோணிபோன்றேன்கடவூர்வீரட்டனாரே. (௬)

மாயத்தையறியமாட்டேன்மையல்கொண்மனத்தனாகிப்
பேயொத்துக்கூகையானேன்பிஞ்ஞகாபிறப்பொன்றில்லீ
நேயத்தால்நினையமாட்டேன்நீதனேனீசனேனான்
காயத்தைக்கழிக்கமாட்டேன்கடவூர்வீரட்டனாரே. (௭)

பற்றிலாவாழ்க்கைவாழ்ந்துபாழுக்கேநீரிறைத்தேன்
உற்றலால்கயவர்தேறாரென்னுங்கட்டுரையோடொத்தேன்
எற்றுளேனென்செய்கேனானிம்மையால்ஞானமேதுங்
கற்றிலேன்களைகண்காணேன்கடவூர்வீரட்டனாரே. (௮)

459 செலினேரனையகண்ணாள் திறம்விட்டுச்சிவனுக்கன்பாய்
பாலுநறறயிர்நெயயோடுபலபலவாட்டியென்று
மாலினைத்தவிரநின்றமார்க்கண்டர்க்காகவன்று
காலனையுதைப்பர்போலுங்கடவூர்வீரட்டனாரே. (௯)

460 முந்துருவிருவரோடுமூவருமாயினாரு
மிந்திரனோடுதேவரிருடிகளின்பஞ்செய்ய
வந்திருபதுதோளாலெடுத்தவனவலியைவாட்டிக
கந்திருவங்களகேட்டார்கடவூர்வீரட்டனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

இது சோழநாட்டிலுள்ளது

சுவாமிபெயர் - அமிர்தகடேசுவரர் - தேவியார் - அபிராமியம்மை ஆகப்பதிகம் - கக

திருப்பயற்றூர் - திருநேரிசை

திருச்சிற்றம்பலம்.

461 உரித்திட்டாரானையினறோலுதிரவாறொழுகியோட
விரித்திட்டாருமையாளஞ்சவிரல்விதிர்த்தலக்கணோக்கித்
தரித்திட்டார்சிறிதுபோதுதரிக்கிலாராகித்தாமுஞ்
சிரித்திட்டாரெயிறுதோன்றத்திருப்பயற்றூரனாரே. (௧)

462 உவந்திட்டங்குமையோர்பாகம்வைத்தவர்ஊழியூழி
பவந்திட்டபரமனார்தாமலைச்சிலைநாகமேற்றிக்
கவர்ந்திட்டபுரங்களமூன்றுங்கனலெரியாகச்சீறிச்
சிவந்திட்டகண்ணர்போலுந்திருப்பயற்றூரனாரே. (௨)

463 நங்களுக்கருளதென்றுநான்மறையோதுவார்க
டங்களுக்கருளுமெங்கள்தத்துவனறழலனறனனை
யெங்களுக்கருள்செயென்னநின்றவனாகமஞ்சந
திங்களுக்கருளிச்செய்தார்திருப்பயற்றூரனாரே. (௩)

464 பார்த்தனுக்கருளும்வைத்தார்பாம்பரையாட்டவைத்தார்
சாத்தனைமகனாவைத்தார்சாமுண்டிசாமவேதங்
கூத்தொடும்பாடவைத்தார்கோளராமதியநல்ல
தீர்த்தமுஞ்சடைமேல்வைத்தார்திருப்பயற்றூரனாரே. (௪)

465 மூவகைமூவர்போலும்முற்றுமாநெற்றிக்கண்ணா
நாவகைநாவர்போலுநான்மறைஞானமெல்லா
மாவகையாவர்போலுமாதிரைநாளர்போலுந்
தேவர்கள்தேவர்போலுந்திருப்பயற்றூரனாரே. (௫)

466 நாயிறுமமனுமாகிவருணனாய்ச்சோமனாகித்
தீயறுநிருதிவாயுத்திப்பியசாந்தனாகிப்

பேயனுக்காட்டிலாடும்பிஞ்ஞகனெந்தையெம்மான்
தீயனுக்கையனார்போலுந்திருப்பயற்றூரனாரே. (௬)

ஆவியாயவியுமாகியருக்கமாய்ப்பெருக்கமாகிப்
பாவியர்பாவந்தீர்க்கும்பரமனாய்ப்பிரமனாகிக்
காவியங்கண்ணளாகிக்கடல்வண்ணனாகிநின்ற
தேவியைப்பாகம்வைத்தார்திருப்பயற்றூரனாரே. (௭)

தந்தையாய்த்தாயுமாகித்தரணியாய்த்தரணியுள்ளார்க்
கெந்தையுமென்னநின்றவேழுலகுடனுமாகி
யெந்தையெம்பிரானேயென்றென்றுள்குவாருள்ளத்தென்றுஞ்
சிந்தையுஞ்சிவமுமாவார்திருப்பயற்றூரனாரே. (௮)

புலன்களைப்போகநீக்கிப்புந்தியையொருங்கவைத்து
இனங்களைப்போகநின்றிரண்டையுநீக்கியொன்றாய்
மலங்களைமாற்றவல்லார்மனத்தினுட்போகமாகிச்
சினங்களைக்களைவார்போலுந்திருப்பயற்றூரனாரே. (௯)

மூர்த்திதன்மலையின்மீது போகாதாமுனிந்துநோக்கிப்
பார்த்துத்தான்பூமிமேலாற் பாய்ந்துதான்மலையைப்பற்றி
யார்த்திட்டான்முடிகள்பத்து மடர்த்துநல்லிசையுஞ்சத்
தேத்தெத்தாவென்னக்கேட்டார் திருப்பயற்றூரனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

இது சோழநாட்டிலுள்ளது,

சுவாமிபெயர் - திருப்பயத்தீசுவரர் - தேவியார் - காவியங்கண்ணியம்மை ஆகப்பதிகம் - ௧௧.

திருமறைக்காடு - திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

இந்திரனோடுதேவரிருடிகளேத்துகின்ற
சுந்தரமானார்போலுந்துதிக்கலாஞ்சோதிபோலுஞ்
சந்திரனோடுங்கங்கையாவையுஞ்சடையுள்வைத்து
மந்திரமானார்போலுமாமறைக்காடனாரே. (௧)

தேயன்நாட்டராகித்தேவர்கள்தேவர்போலும்
பாயனாட்டுக்கும்பத்தர்கள்பணியவம்மின்
சாயனாடுகண்டங்கத்தனுள்ளார்காளகண்டர்
மாயன்நாட்டார்போலுமாமறைக்காடனாரே. (௨)

அறுமையிவ்வுலகுதன்னையாமெனக்கருதிநின்று
வெறுமையின்மனைகள்வாழ்ந்துவினைகளாலவுணதே

சிறுமதியரவங்கொன்றைதிகழ்தருசடையுள்வைத்து
மறுமையுமிம்மையாவார்மாமறைக்காடனாரே. (௩)

474 கால்கொடுத்திருகையேற்றிக்கழிநிரைத்திறைச்சிமேய்ந்து
தோல்படுத்துதிரநீராற்சுவரெடுத்திரண்டுவாசல்
ஏல்வுடைத்தாவமைத்தங்கேழுசாலேகம்பண்ணி
மால்கொடுத்தாவிவைத்தார்மாமறைக்காடனாரே. (௪)

475 விண்ணினார்விண்ணின்மிக்கார்வேதங்கள்விரும்பியோதப்
பண்ணினார்கின்னரங்கள்பத்தர்கள்பாடியாடக்
கண்ணினார்கண்ணினுள்ளேசோதியாய்நின்றவெந்தை
மண்ணினார்வலங்கொண்டேத்துமாமறைக்காடனாரே (௫)

476 அங்கையுளனலும்வைத்தாரறுவகைச்சமயம்வைத்தார்
தங்கையில்வீணைவைத்தார்தம்மடிப்பரவவைத்தார்
திங்களைக்கங்கையோடுதிகழ்தருசடையுள்வைத்தார்
மங்கையைப்பாகம்வைத்தார்மாமறைக்காடனாரே. (௬)

477 கீதராய்க்கீதங்கேட்டுக்கின்னரந்தன்னைவைத்தார்
வேதராய்வேதமோதிவிளங்கியசோதிவைத்தார்
ஏதராய்நட்டமாடியிட்டமாய்க்கங்கையோடு
மாதையோர்பாகம்வைத்தார்மாமறைக்காடனாரே. (௭)

478 கனத்தினார்வலியுடையகடிமதிலரணமூன்றுஞ்
சினத்தினுட்சினமாய்நின்றுதீயெழச்செற்றார்போலுந்
தனத்தினைத்தவிர்ந்துநின்றுதம்மடிபரவுவார்க்கு
மனத்தினுண்மாசுதீர்ப்பார்மாமறைக்காடனாரே. (௮)

479 தேசனைத்தேசன்றன்னைத்தேவர்கள்போற்றிசைப்பார்
வாசனைசெய்துநின்றுவைகலும்வணங்குமின்கள்
காசினைக்கனலையென்றுங்கருத்தினில்வைத்தவர்க்கு
மாசினைத்தீர்ப்பர்போலுமாமறைக்காடனாரே. (௯)

480 பிணியுடையாக்கைதன்னைப்பிறப்பறுத்துய்யவேண்டிற்
பணியுடைத்தொழில்கள்பூண்டுபத்தர்கள்பற்றினாலே
துணிவுடையரக்கனோடியெடுத்தலுந்தோகையஞ்ச
மணிமுடிப்பத்திறுத்தார்மாமறைக்காடனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர் - வேதாரணியேசுவரர் - தேவியார் - யாழைப்பழித்தமொழியம்மை

ஆகப்பதிகம் - ௧௫.

தேவாரப்பதிகங்கள்.

34

திருமறைக்காடு - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தேரையுமேல்கடாவித்திண்ணமாத்தெளிந்துநோக்கி
யாரையுமேலுணராவாண்மையான்மிக்கான்றன்னைப்
பாரையும்விண்ணுமஞ்சப்பரந்ததோள்முடியடர்த்துக்
காரிகையஞ்சலென்பார்கலிமறைக்காடனாரே.

முக்கிமுன்வெகுண்டெடுத்தமுடியுடையரக்கர்கோனை
நக்கிருந்தூன்றிச்சென்னிநாண்மதிவைத்தவெந்தை
யக்கரவாமைபூண்டவழகனார்கருத்தினாலே
தெக்குநீர்த்திரைகள்மோதுந்திருமறைக்காடனாரே.

மிகப்பெருத்துலாவிமிக்கானக்கொண்டுதேர்கடாவி
யகப்படுத்தென்றுதானுமாமலையாலமிக்கநக்க
நகைத்தெடுத்தான்மலையையூன்றலுமவனையாங்கே
மிகப்படுத்தருளினானான்மறைக்காடனாரே.

அந்தரத்தேர்கடாவியாரிவனென்றுசொல்லி
யுந்தினான்மாமலையையூன்றலுமொள்ளெரிக்கண்
பந்தமாந்தலைகள்பத்துவாய்கள்விட்டலறிவீழச்
சிந்தனைசெய்துவிட்டார்திருமறைக்காடனாரே.

தடக்கவுந்தாங்கொணாதுதன்வலியுடையனாகிக்
கடக்கவோர்தேர்கடாவிக்கைகளிருபதாலும்
மடுப்பனென்றன்னைப்பட்டமென்றெடுத்தானையேங்க
படுக்கவேவல்லர்போலுமணிமறைக்காடனாரே.

நாண்முடிக்கின்றசீரானடுங்கியேயமீதுபோகா
கோளபிடித்தார்த்தையானைகொடியனாவலியனென்று
நீண்முடிச்சடையர்சேரு நீள்வரையெடுக்கலுற்றான்
தோண்முடிநெரியவைத்தார்தொன்மறைக்காடனாரே.

பத்துவாயிரட்டிக்கைகளுடையனமாவலியனென்று
பொத்திவாய்த்தீமைசெய்தபொருவலியரக்கர்கோனைக்
கத்திவாய்கதறவன்றுகால்விரலூன்றியிட்டார்
முத்துவாய்த்திரைகள்மோதுமுதுமறைக்காடனாரே.

பக்கமேவிட்டகையான்பாங்கிலாமதியனாகிப்
புக்கனன்மாமலைக்கீழ்ப்போதுமாறறியமாட்டான்
மிக்கமாமதிகள்கெட்டுவீரமுமிழந்தவாறே
நக்கனபூதமெல்லாநான்மறைக்காடனாரே.

489 நாணஞ்சுகையனாகிநன்முடிபத்தினோடு
பாணஞ்சுமுன்னிழந்துபாங்கிலாமதியனாகி
நீணஞ்சுதானுணராநின்றதேதானையன்று
வேணஞ்சுகைகள்செய்தாரெழின்மறைக்காடனாரே. (௯)

490 கங்கைநீர்சடையுள்வைக்கக்காண்டலுமங்கையூடத்
தெங்கையான்றேர்கடாவிச்சென்றெடுத்தானமலையை
முன்கையானரம்புவெட்டிமுன்னிருக்கிசைகள்பாட
வங்கைவாளருளினானாரணிமறைக்காடனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம் ஆகப்பதிகம் - ௩௪.

35 திருவிடைமருது - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

491 காடுடைச்சுடலைநீற்றர்கையில்வெண்டலையர்தையல
பாடுடைப்பூதஞ்சூழப்பரமனார்மருதவைப்பிற்
றோடுடைக்கைதையோடுஞ்சூழ்கிடங்கதனைச்சூழ்ந்த
வேடுடைக்கமலவேலியிடைமருதிடங்கொண்டாரே. (௧)

92 முந்தையார்முந்தியுள்ளார்மூவர்க்குமுதல்வரானார்
சந்தியார்சந்தியுள்ளார்தவநெறிதருதுநின்றார்
சிந்தையார்சிந்தையுள்ளார்சிவநெறியனைத்துமானா
ரெந்தையாரெம்பிரானாரிடைமருதிடங்கொண்டாரே (௨)

93 காருடைக்கொன்றைமாலைகதிர்மணியரவினோடு
நீருடைச்சடையுள்வைத்தநீதியார்நீதியாய
போருடைவிடையொன்றேறவல்லவர்பொன்னிறத்தெனபா
லேருடைக்கமலமோங்குமிடைமருதிடங்கொண்டாரே (௩)

94 விண்ணினார்விண்ணின்மிக்காரவேதங்களோடுமங்கம்
பண்ணினார்பண்ணின்மிக்கபாடலார்பாவந்தீர்க்குங்
கண்ணினார்கண்ணின்மிக்கநுதலினார்காமற்காய்ந்த
வெண்ணினாரெண்ணின்மிக்காரிடைமருதிடங்கொண்டாரே. (௪)

95 வேதங்கணான்குங்கொண்டுவிண்ணவர்பரவியேத்தப்
பூதங்கள்பாடியாடலுடையவன்புனிதனெந்தை
பாதங்கள்பரவிநின்றபத்தர்கடங்கண்மேலே
யேதங்கடீர்நின்றாரிடைமருதிடங்கொண்டாரே. (௫)

96 பொறியரவரையிலார்த்துப்பூதங்கள்பலவுஞ்சூழ
முறிதருவன்னிகொன்றைமுதிர்சடைமூழ்கவைத்து

மறிதருங்கங்கைதங்கவைத்தவொத்திசையு
மெறிதருபுனல்கொள்வேலியிடைமருதிடங்கொண்டாரே. (௬)

படரொளிசடையினுள்ளாற்பாய்புனலரவினோடு 449
சுடரொளிமதியம்வைத்துத்தூவொளிதோன்றுமெந்தை
யடரொளிவிடையொன்றேறவல்லவரன்பர்தங்க
ளிடரவைகெடவுநின்றாரிடைமருதிடங்கொண்டாரே. (௭)

கமழ்தருசடையினுள்ளாற்கடும்புனலரவினோடுந் 449
தவழ்தருமதியம்வைத்துத்தன்னடிபலருமேத்த
மழுவதுவலங்கையேந்திமாதொருபாகமாகி
யெழில்தருபொழில்கள்சூழ்ந்தவிடைமருதிடங்கொண்டாரே. (௮)

பொன்றிகழ்கொன்றைமாலைபுதுப்புனல்வன்னிமத்த 44
மின்றிகழ்சடையில்வைத்துமேதகத்தோன்றுகின்ற
வன்றவரளக்கலாகாவனலெரியாகிநீண்டா
இன்றுடனுலகமேத்தவிடைமருதிடங்கொண்டாரே. (௯)

மலையுடன்விரவிநின்று மதியிலாவரக்கனூக்கத் 4
தலையுடனடர்த்துமீண்டே தலைவனாயருள்கணல்கிச்
சிலையுடைமலையைவாங்கித் திரிபுரமூன்றுமெய்தா
ரிலையுடைக்கமலவேலி யிடைமருதிடங்கொண்டாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மருதீசர் - தேவியார் - நலமுலைநாயகி. ஆகப்பதிகம் - கூ.

3L

திருப்பழனம் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

ஆடினாரொருவர்போலு மலர்கமழ்குழலினாளைக் 45
கூடினாரொருவர்போலுங் குளிர்புனல்வளைந்ததிங்கள்
சூடினாரொருவர்போலுந் தூயநன்மறைகணான்கும்
பாடினாரொருவர்போலும் பழனத்தெம்பரமனாரே. (௧)

போவதோர்நெறியுமானார் புரிசடைப்புனிதனார்நான் 45
வேவதோர்வினையிற்பட்டு வெம்மைதானவிடவுங்கில்லேன்
கூவலுன்வர்கள்கோளார் குணமிலாவைவர்செய்யும்
பாவமேதீரநின்றார் பழனத்தெம்பரமனாரே. (௨)

கண்டராய்முண்டராகிக் கையிலோர்கபாலமேந்தித் 46
தொண்டர்கள்பாடியாடித் தொழுகழற்பரமனார்தாம்

விண்டவர்புரங்களெய்த வேதியர்வேதனவர்
பண்டையென்வினைகடீர்ப்பார் பழனத்தெம்பரமனாரே. (௩)

நீரவன்றீயினோடு நிழலவனெழிலதாய
பாரவன்விண்ணின்மிக்க பரமவன்பரமயோகி
யாரவனண்டமிக்க திசையினோடொளிகளாகிய
பாரகத்தமுதமானார் பழனத்தெம்பரமனாரே. (௪)

ஊழியாரூழிதோறு முலகினுக்கொருவராகிய
பாழியார்பாவந்தீர்க்கும் பராபரபரமதாய
ஆழியானன்னத்தானு மன்றவரளப்பரிய
பாழியார்பரவியேத்தும் பழனத்தெம்பரமனாரே. (௫)

ஆலின்கீழறங்களெல்லா மன்றவர்க்கருளிச்செய்து
நூலின்கீழவர்கட்கெல்லா நுண்பொருளாகிநின்று
காலின்கீழ்க்காலன்றன்னைக் கடுக்கத்தான்பாய்ந்துபின்னும்
பாலின்கீழ்நெய்யுமானார் பழனத்தெம்பரமனாரே. (௬)

ஆதித்தனங்கிசோமனயனொடுமால்புதனும்
போதித்துநின்றுலகிற் போற்றிசைத்தாரிவர்கள்
சோதித்தாரேழுலகுஞ் சோதியுட்சோதியாகிய
பாதிப்பெண்ணுருவமானார் பழனத்தெம்பரமனாரே. (௭)

காற்றனாற்காலற்காய்ந்து காரிருள்போர்த்தவீசா
தோற்றனார்கடலுண்ஞைசைத் தோடுடைக்காதர்சோதி
யேற்றினாரிளவெண்டிங்க ளிரும்பொழில்சூழ்ந்தகாயம்
பாற்றினார்வினைகளெல்லாம் பழனத்தெம்பரமனாரே. (௮)

கண்ணனும்பிரமனோடு காண்கிலராகிவந்தே
யெண்ணியுந்துதித்துமேத்த வெரியுருவாகிநின்று
வண்ணநன்மலர்கடூவி வாழ்த்துவார்வாழ்த்தியேத்தப
பண்ணுலாம்பாடல்கேட்டார் பழனத்தெம்பரமனாரே. (௯)

குடையுடையரக்கன்சென்று குளிர்கயிலாயவெற்பி
னிடைமடவரலையஞ்ச வெடுத்தலுமிறைவனோக்கி
விடையுடைவிகிர்தன்றானும் விரலினாலூன்றிமீண்டும்
படைகொடையடிகள்போலும் பழனத்தெம்பரமனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - ஆபத்சகாயர். தேவியார் - பெரியநாயகியம்மை. [illegible]

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

3.7 திருச்சிற்றம்பலம்.

காலனைவீழச்செற்ற கழலடியிரண்டும்வந்தென் 46
மேலவாயிருக்கப்பெற்றேன் மேதகத்தோன்றுகின்ற
கோலநெய்த்தானமென்னுங் குளிர்பொழிற்கோயின்மேய
நீலம்வைத்தனையகண்ட னினைக்குமாநினைக்கின்றேனே. (க)

காமனையன்றுகண்ணாற் கனலெரியாகநோக்கித் 45
தூமமுந்தீபங்காட்டித் தொழுமவர்ககருள்கள்செய்து
சேமநெய்த்தானமென்னுஞ் செறிபொழிற்கோயின்மேய
வாமனைநினைந்தநெஞ்சம் வாழ்வுறநினைந்தவாறே. (உ)

பிறைதருசடையின்மேலே பெய்புனற்கங்கைதன்னை 45
யுறைதரவைத்தவெங்களுத்தமனூழியாய
நிறைதருபொழில்கள்சூழநின்றநெய்த்தானமென்று
குறைதருமடியவர்க்குக்குழகனைக்கூடலாமே. (ங)

வடிதருமழுவொன்றேந்திவார்சடைமதியம்வைத்துப் 45
பொடிதருமேனிமேலேபுரிதருநூலர்போலு
நெடிதருபொழில்கள்சூழநின்றநெய்த்தானமேவி
யடிதருகழல்களார்ப்பவாடுமெம்மண்ணலாரே. (௪)

காடிடமாகநின்றுகனலெரிகையிலேந்திப் 45
பாடியபூதஞ்சூழப்பண்ணுடன்பலவுஞ்சொல்லி
யாடியகழலர்சீராரந்தநெய்த்தானமென்றுங்
கூடியகுழகனைக்கூடுமாறறிகிலேனே. (ரு)

வானவர்வணங்கியேத்திவைகலுமலர்கடூவத் 45
தானவர்க்கருள்களசெய்யுஞ்சங்கரன்செங்கணேற்றன்
றேனமர்பொழில்கள்சூழதிகழுநெய்த்தானமேய
கூனிளமதியினானைக்கூடுமாறறிகிலேனே. (சு)

காலதிற்கழல்களார்ப்பக்கனலெரிகையில்வீசி
ஞாலமுங்குழியநின்றுநட்டமதாடுகின்ற
மேலவர்முகடுதோயவிரிசடைதிசைகள்பாய
மாலொருபாகமாகமகிழ்ந்தநெய்த்தானனாரே. (எ)

பந்தித்தசடையின்மேலேபாய்புனலதனைவைத்து
அந்திப்போதனலுமாடியடிகளையாறுபுக்கார்
வந்திப்பார்வணங்கிநின்றுவாழ்த்துவார்வாயினுள்ளார்
சிந்திப்பார்சிந்தையுள்ளார்திருநெய்த்தானனாரே. (அ)

519 சோதியாய்ச்சுடருமானார்சுண்ணவெண்சாந்துபூசி
யோதிவாயுலகமேத்தவுகந்துதாமருள்கள்செய்வா
ராதியாயந்தமானார்யாவருமிறைஞ்சியேத்த
நீதியாய்நியமமாகிநின்றநெய்த்தானனாரே. (௯)

520 இலையுடைப்படைகையேந்துமிலங்கையர்மன்னன்றன்னைத்
தலையுடனடர்த்துமீண்டேதானவற்கருள்கள்செய்து
சிலையுடன்கணையைச்சேர்த்துத்திரிபுரமெரியச்செற்ற
நிலையுடையடிகள்போலுநின்றநெய்த்தானனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - நெய்யாடியப்பர் - தேவியார் - பாலாம்பிகை. ஆகப்பதிகம் - ௧௭

திருவையாறு - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

521 கங்கையைச்சடையுள்வைத்தார்கதிர்ப்பொறியரவும்வைத்தார்
திங்களைத்திகழவைத்தார்திசைதிசைதொழவும்வைத்தா
மங்கையைப்பாகம்வைத்தார்மானமறிமழுவும்வைத்தா
ரங்கையுளனலும்வைத்தாரையனையாறனாரே. (௧)

522 பொடிதனைப்பூசவைத்தார்பொங்கும்வெண்ணூலும்வைத்தார்
கடியதோர்நாகம்வைத்தார்காலனைக்காலில்வைத்தார்
வடிவுடைமங்கைதன்னைமார்பிலோர்பாகம்வைத்தா
ரடியிணைதொழவும்வைத்தாரையனையாறனாரே. (௨)

23 உடைதருகீளும்வைத்தாருலகங்களனைத்தும்வைத்தார்
படைதருமழுவும்வைத்தார்பாய்புலித்தோலும்வைத்தார்
விடைதருகொடியும்வைத்தார்வெண்புரிநூலும்வைத்தா
ரடைதரவருளும்வைத்தாரையனையாறனாரே. (௩)

24 தொண்டர்கள்தொழவும்வைத்தார்தூமதிசடையில்வைத்தா
ரிண்டையைத்திகழவைத்தாரேமகென்றுமின்பம்வைத்தார்
வண்டுசேர்குழலினாளைமருவியோர்பாகம்வைத்தா
ரண்டவானவர்களேத்துமையனையாறனாரே. (௪)

25 வானவர்வணங்கவைத்தார்வல்வினையாயவைத்தார்
கானிடைநடமும்வைத்தார்காமனைக்கனலாவைத்தா
ரானிடையைந்தும்வைத்தாராட்டுவார்க்கருளும்வைத்தா
ரானையினுரிவைவைத்தாரையனையாறனாரே. (௫)

சங்கணிகுழையும்வைத்தார்சாம்பல்மெய்ப்பூசவைத்தார்
வெங்கதிரெரியவைத்தார்விரிபொழிலனைத்தும்வைத்தார்
கங்குலும்பகலும்வைத்தார்கடுவினைகளையவைத்தா
ரங்கமேதோதவைத்தாரையனையாறனாரே. (சு)

பத்தர்கட்கருளும்வைத்தார்பாய்விடையேறவைத்தார்
சித்தத்தையொன்றவைத்தார்சிவமதேநினையவைத்தார்
முத்தியைமுற்றவைத்தார்முறைமுறைநெறிகள்வைத்தா
ரத்தியினுரிவைவைத்தாரையனையாறனாரே. (எ)

ஏறுகந்தேறவைத்தாரிடைமருதிடமும்வைத்தார்
நாறுபூங்கொன்றைவைத்தார்நாகமுமரையில்வைத்தார்
கூறுமையாகம்வைத்தார்கொல்புலித்தோலும்வைத்தா
ராறுமோர்சடையில்வைத்தாரையனையாறனாரே. (அ)

பூதங்கள்பலவும்வைத்தார்பொங்குவெண்ணீறும்வைத்தார்
கீதங்கள்பாடவைத்தார்கின்னரர்தன்னைவைத்தார்
பாதங்கள்பரவவைத்தார்பத்தர்கள்பணியவைத்தா
ராதியுமந்தம்வைத்தாரையனையாறனாரே. (கூ)

இரப்பவர்க்கீயவைத்தாரீபவர்க்கருளும்வைத்தார்
கரப்பவர்தங்கட்கெல்லாங்கடுநரகங்கள்வைத்தார்
பரப்புநீர்கங்கைதன்னைப்படர்சடைப்பாகம்வைத்தா
ரரக்கனுக்கருளும்வைத்தாரையனையாறனாரே. (கo)

திருச்சிற்றம்பலம். ஆகப்பதிகம் - கஅ

திருவையாறு - பண் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

குண்டனாய்ச்சமணரோடேகூடிநான்கொண்டமாலைத்
துண்டனேசுடர்கொள்சோதிதூநெறியாகிநின்ற
வண்டனேயமரரேறேதிருவையாறமர்ந்ததேனே
தொண்டனேனெழுந்துன்பாதஞ்சொல்லிநான்றிரிகின்றேனே

பீலிகையிடுக்கிநாளும்பெரியதோர்தவமென்றெண்ணி
வாலியதறிகள்போல்மதியிலார்பட்டதென்னே
வாலியார்வணங்கியேத்துந்திருவையாறமர்ந்ததேனே
டாலியாவெழுந்தநெஞ்சமழுங்கிநாவெழுந்தவாறே. (உ)

திட்டிடுஞ்சமணரோடேதருக்கிநான்றவமென்றெண்ணி
யொட்டிமேனத்தினீரோயுமையாள்செய்வதென்னே

மொட்டிடுகமலப்பொய்கைத்திருவையாறமர்ந்ததேனோ
டொட்டிடுமுள்ளத்தீரேயும்மைநானுகந்திட்டேனே. (௩)

534 பாசிப்பன்மாசுமெய்யர்பலமிலாச்சமணரோடு
நேசத்தாலிருந்தநெஞ்சைநீக்குமாறறியமாட்டேன்
தேசத்தார்பரவியேத்துந்திருவையாறமர்ந்ததேனை
வாசத்தால்வணங்கவல்லார்வல்வினைமாயுமன்றே. (௪)

535 கடுப்பொடியட்டிமெய்யிற்கருதியோர்தவமென்றெண்ணி
வடுக்களோடிசைந்தநெஞ்சேமதியிலிபட்டதென்னே
மடுக்களில்வாளைபாயுந்திருவையாறமர்ந்ததேனை
யடுத்துநின்றுன்னுநெஞ்சேயருந்தவஞ்செய்தவாறே. (௫)

536 துறவியென்றவமதோரேன்சொல்லியசெலவுசெய்து
உறவினாலமணரோடுமுணர்விலேனுணர்வொன்றின்றி
நறவமார்பொழில்கள்சூழ்ந்ததிருவையாறமர்ந்ததேனை
மறவிலாநெஞ்சமேநன்மதியுனக்கடைந்தவாறே. (௬)

537 பல்லுரைச்சமணரோடேபலபலகாலமெல்லாஞ்
சொல்லியசெலவுசெய்தேன்சோர்வனானினைந்தபோது
மல்லிகைமலருஞ்சோலைத்திருவையாறமர்ந்ததேனை
யெல்லியும்பகலுமெல்லாநினைந்தபோதினியவாறே. (௭)

538 மண்ணுளார்விண்ணுளாரும்வணங்குவார்பாவம்போக
எண்ணிலாச்சமணரோடேயிசைந்தனையேழைநெஞ்சே
தெண்ணிலாவெறிக்குஞ்சென்னித்திருவையாறமர்ந்ததேனைக்
கண்ணினாற்காணப்பெற்றுக்கருதிற்றேமுடிந்தவாறே. (௮)

539 குருந்தமதொசித்தமாலுங்குலமலர்மேவினானுந்
திருந்துநற்றிருவடியுந்திருமுடிகாணமாட்டா
ரருந்தவமுனிவரேத்துந்திருவையாறமர்ந்ததேனைப்
பொருந்திநின்றுன்னுநெஞ்சேபொய்வினைமாயுமன்றே. (௯)

540 அறிவிலாவரக்கனோடியருவரையெடுக்கலுற்று
முறுகினான்முறுகக்கண்டுமூதறிவாளனோக்கி
நிறுவினான்சிறுவிரலால்நெரிந்துபோயிலத்தில்வீழ
வறிவினாலருள்கள்செய்தான்றிருவையாறமர்ந்ததேனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - செம்பொற்சோதீசுவரர். தேவியார் - அறம்வளர்த்தநாயகி. ஆகப்பதிகம் - ௭௯.

திருவையாறு — பண் - திருநேரிசை

திருச்சிற்றம்பலம்.

தானலாதுலகமில்லைசகமலாதடிமையில்லைக
கானலாதாடலில்லைக்கருதுவார்தங்களுக்கு
வானலாதருளுமில்லைவார்குழன்மங்கையோடு
மானலாதூர்வதில்லையையனையாறனார்க்கே. (௧)

ஆலலாலிருக்கையில்லையருந்தவமுனிவர்க்கன்று
நூலலாநொடிவதில்லைநுண்பொருளாய்ந்துகொண்டு
மாலுநான்முகனுங்கூடிமலரடிவணங்கவேலை
யாலலாலமுதமில்லையையனையாறனார்க்கே. (௨)

நரிபுரிசுடலைதன்னினடமலானவிற்றலில்லைச
சுரிபுரிகுழலியோடுந்துணையலாலிருக்கையில்லைத
தெரிபுரிசிந்தையார்க்குத்தெளிவலாலருளுமில்லை
யரிபுரிமலர்கொண்டேத்துமையனையாறனார்க்கே. (௩)

தொண்டலாற்றுணையுமில்லைதோலலாதுடையுமில்லைக
கண்டலாதருளுமில்லைகலந்தபின்பிரிவதில்லைப
பண்டைநான்மறைகள்காணாப்பரிசினனென்றென்றெண்ணி
யண்டவானவர்களேத்துமையனையாறனார்க்கே. (௪)

எரியலாலுருவமில்லையேறலாலேறலில்லைக
கரியலாற்போர்வையில்லைகாண்டகுசோதியார்க்குப்
பிரிவிலாவமரர்கூடிப்பெருந்தகைப்பிரானென்றேத்து
மரியலாற்றேவியில்லையையனையாறனார்க்கே. (௫)

என்பலாற்கலனுமில்லையெருதலாலூர்வதில்லைப்
புன்புலானாறுகாட்டிற்பொடியலாற்சாந்துமில்லைப
துன்பிலாத்தொண்டர்கூடித்தொழுதழுதாடிப்பாடு
மன்பலாற்பொருளுமில்லையையனையாறனார்க்கே. (௬)

கீளலாலுடையுமில்லைகிளர்பொறியரவம்பைம்பூண
டோளலாற்றுணையுமில்லைத்தொத்தலர்கின்றவேணில்
வேளலாற்காயப்பட்டவீரருமில்லைமீளா
வாளலாற்கைம்மாறில்லையையனையாறனார்க்கே. (௭)

சகமலாதடிமையில்லைத்தானலாற்றுணையுமில்லை
நகமெலாந்தேயக்கையானாண்மலர்தொழுதுதூவி
முகமெலாங்கண்ணீர்மல்கமுன்பணிந்தேத்துந்தொண்ட
ரகமலாற்கோயிலில்லையையனையாறனார்க்கே. (௮)

549 உமையலாதுருவமில்லையுலகலாதுடையதில்லை
நமையெலாமுடையராவர்நன்மையேதீமையிலலைக்
கமையெலாமுடையராகிககழலடிபரவுநதொண்டர்க
கமைவிலாவருள்கொடுபபாரையனையாறனார்க்கே. (௯)

550 மலையலாலிருக்கையில்லைமதித்திடாவரக்கனறன்னைத்
தலையலானெரித்ததில்லைத்தடவரைக்கீழடர்த்து
நிலையிலாபுரங்களவேவநெருப்பலாலவிரித்ததில்லை
யலையினார்பொன்னிமன்னுமையனையாறனார்க்கே. (௧௦)

திருச்சிற்றம்பலம். ஆகப்பதிகம் - ௫௦

திருச்சோற்றுத்துறை - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்

551 பொய்விராமேனிதன்னைப்பொருளெனக்காலம்போக்கி
மெய்விராமனத்தனல்லேன்வேதியாவேதநாவர்
வைவராலலைக்கப்பட்டவாக்கைகொண்டயாததுப்போனேன
செய்வராலுகளுஞ்செம்மைத்திருச்சோற்றுத்துறையனாரே. (௧)

552 கட்டராய்நின்றுநீங்கள்காலத்தைக்கழிக்கவேண்டா
எட்டவாங்கைகள்வீசியெல்லிநின்றாடுவானை
யட்டதாமலர்கள்கொண்டேயானஞ்சுமாட்டவாடிச
சிட்டராயருள்கள்செய்வார்திருச்சோற்றுத்துறையனாரே. (௨)

553 கல்லினாற்புரமூன்றெய்தகடவுளைக்காதலாலே
யெல்லியும்பகலுமுள்ளேயேகாந்தமாகவேத்தும
பல்லில்வெண்டலைகையேந்திப்பல்லிலந்திரியுஞ்செல்வர்
சொல்லுநன்பொருளுமாவார்திருச்சோற்றுத்துறையனாரே. (௩)

54 கறையராய்க்கண்டநெற்றிக்கண்ணராய்ப்பெண்ணோர்பாக
மிறையராயினியராகித்தனியராய்ப்பனிவெண்டிங்கட்
பிறையராய்ச்செய்ததெல்லாம்பீடராய்க்கேடிலசோற்றுத்
துறையராய்ப்புகுந்தென்னுள்ளச்சோர்வுகண்டருளினாரே. (௪)

55 பொந்தையைப்பொருளாவெண்ணிப் பொருக்கெனக்காலம்போ
னெந்தையேயேகமூர்த்தியென்றுநின்றேத்தமாட்டேன் [னே
பந்தமாய்வீடுமாகிப்பரம்பரமாகிநின்று
சிந்தையுட்டேறல்போலுந்திருச்சோற்றுத்துறையனாரே. (௫)

56 பேர்த்தினிப்பிறவாவண்ணம்பிதற்றுமின்பேதைபங்கன்
பார்த்தனுக்கருள்கள்செய்தபாசுபதன் [illegible]

யார்த்துவந்திழிவதொத்தவலைபுனற்கங்கையேற்றுத்
தீர்த்தமாப்போதவிட்டார் திருச்சோற்றுத்துறையனாரே. (௬)

கொந்தார்பூங்குழலினாளைக்கூறியேகாலம்போன
வெந்தையெம்பிரானையின்றவிறைவனையேத்தாதந்தோ
முந்தராவல்குலாளையுடன்வைத்தவாதிமூர்த்தி
செந்தாதுபுடைகள்சூழ்ந்ததிருச்சோற்றுத்துறையனாரே. (௭)

அங்கதிரோனவனையண்ணலாக்கருதவேண்டா
வெங்கதிரோனவழியேபோவதற்கமைந்துகொண்மி
னங்கதிரோனவனையுடன்வைத்தவாதிமூர்த்தி
செங்கதிரோன்வணங்குந்திருச்சோற்றுத்துறையனாரே. (௮)

ஓதியேகழிக்கின்றீர்களுலகத்தீரொருவன்றனை
நீதியால்நினையமாட்டீர்நின்மலனென்றுசொல்லீர்
சாதியாநான்முகனுஞ்சக்கரத்தானுங்காணாச்
சோதியாய்ச்சுடர்தானார் திருச்சோற்றுத்துறையனாரே. (௯)

மற்றுநீர்மனம்வையாதேமறுமையைக்கழிக்கவேண்டிற்
பெற்றதோருபாயந்தன்னாற்பிரானையேபிதற்றுமின்கள்
கற்றுவந்தரக்கனோடிக்கயிலாயமலையெடுக்கச்
செற்றுகந்தருளிச்செய்தார் திருச்சோற்றுத்துறையனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - தொலையாச்செல்வர். தேவியார் - ஒப்பிலாம்பிகை. ஆகப்பதிகம் - ௪௪.

திருத்துருத்தி - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

பொருத்தியகுரம்பைதன்னைப்பொருளெனக்கருதவேண்டா
விருத்தியேபோதுநெஞ்சுளிறைவனையேத்துமின்க
ளொருத்தியைப்பாகம்வைத்தங்கொருத்தியைச்சடையுள்வைத்த
துருத்தியஞ்சுடரினானைத்தொண்டனேன்கண்டவாறே. (௧)

சவைதனைச்செய்துவாழ்வான் சலத்துளேயழுந்துகின்ற
விவையொருபொருளுமல்லவிறைவனையேத்துமின்னோ
வவைபுரமூன்றுமெய்துமடியவர்க்கருளிச்செய்த
சுவையினைத்துருத்தியானைத்தொண்டனேன்கண்டவாறே. (௨)

உன்னியேபோதுநெஞ்சுளொருவனையேத்துமின்னோ
கன்னியையொருபால்வைத்துக்கங்கையைச்சடையுள்வைத்துப்

பொன்னியின் நடுவு தன்னுட் பூம்புனல் பொலிந்து தோன்றுந்
துன்னிய துருத்தியானைத் தொண்டனேன் கண்டவாறே. (௩)

54 ஊன்றலை வலியனாகி யுலகத்துள் ளுயிர்கட் கெல்லாந்
தான்றலைப் பட்டு நின்று சார்கனலகத்து வீழ
வான்றலைத் தேவர்கூடி வானவர்க் கிறைவா வென்னுந்
தோன்றலைத் துருத்தியானைத் தொண்டனேன் கண்டவாறே. (௪)

55 உடற்றனைக் கழிக்கலுற்ற வுலகத்துள் ளுயிர்கட் கெல்லா
மிடர்தனைக் கழிக்க வேண்டி லிறைவனை யேத்துமின்றே
கடரனி னஞ்சமுண்டு காண்பரி தாகி நின்ற
சுடர்தனைத் துருத்தியானைத் தொண்டனேன் கண்டவாறே. (௫)

56 அள்ளலைக் கடக்க வேண்டி லரனையே நினைமி னீர்கள்
பொள்ளலிக் காயந் தன்னுட் புண்டரீகத் திருந்த
வள்ளலை வானவர்க்குங் காண்பரி தாகி நின்ற
துள்ளலைத் துருத்தியானைத் தொண்டனேன் கண்டவாறே. (௬)

57 பாதியி லுமையாடன்னைப் பாகமா வைத்த பண்பன்
வேதிய னென்று சொல்லி விண்ணவர் விரும்பி யேத்தச்
சாதியா ஞ்சதுமுகனுஞ் சக்கரத் தானுங் காணாச்
சோதியைத் துருத்தியானைத் தொண்டனேன் கண்டவாறே. (௭)

58 சாமனை வாழ்க்கை யான சலத்தினு ளழுந்த வேண்டா
தூமநல் லகிலுங் காட்டித் தொழுதடி வணங்குமின்றே
சோமனைச் சடையுள் வைத்துத் தொன்னெறி பலவுங் காட்டுந்
தூமணற் றுருத்தியானைத் தொண்டனேன் கண்டவாறே. (௮)

59 குண்டரே சமணர் புத்தர் குறியறியாது நின்று
கண்டதே கருதுவார்கள் கருத்தெனுந் தொழிமி னீர்கள்
விண்டவர் புரங்க ளெய்து விண்ணவர்க் கருள்கள் செய்த
தொண்டர்கட் டுணையி னானைத் துருத்திநான் கண்டவாறே. (௯)

70 பிண்டத்தைக் கழிக்க வேண்டிற் பிரானையே பிதற்றுமின்கள்
அண்டத்தைக் கழிய நீண்ட வடலரக்கன் றன்னைக்
கண்டொத்துக் கால்விரலா லூன்றி மீண்டருளிச் செய்த
துண்டத்துத் துருத்தியானைத் தொண்டனேன் கண்டவாறே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வேதேசுவரர் - தேவியார் - முகிழாம்பிகையம்மை. ஆகப்பதிகம் - ௪௨.

திருக்காஞ்சித் திருமேற்றளி - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

மறையதுபாடிப்பிச்சைக் கென்றகந்திரிந்துவாழ்வார் 457
பிறையதுசடைமுடிமேற்பெய்வளையாடன்னோடுங்
கறையதுகண்டங்கொண்டார்காஞ்சியாநகர்தன்னுள்ளா
ரிறையவர்பாடலாடலிலங்குமேற்றளியனாரே. (௧)

மாலியமாயன் றன்னைமகிழ்ந்தனர்விருத்தராகும் 45
பாலனார்பசுபதியார்பால்வெள்ளைநீறுபூசிக்
காலனைக்காலாற்செற்றார்காஞ்சிமாநகர்தன்னுள்ளா
ரேலநற்கடம்பன்றந்தையிலங்குமேற்றளியனாரே. (௨)

விண்ணிடைவிண்ணவர்கள்விரும்பிவந்திறைஞ்சிவாழ்த்தப் 45
பண்ணிடைச்சுவையினமிக்கின்னரம்பாடல்கேட்டார்
கண்ணிடைமணியினொப்பார்காஞ்சிமாநகர்தன்னுள்ளா
ரெண்ணிடையெழுத்துமானாரிலங்குமேற்றளியனாரே. (௩)

சோமனையரவினோடுசூழ்தரக்கங்கைசூடும் 45
வாமனைவானவர்கள்வலங்கொடுவந்துபோற்றக்
காமனைக்காய்ந்தகண்ணார்காஞ்சிமாநகர்தன்னுள்ளா
ரேமநின்றாடுமெந்தையிலங்குமேற்றளியனாரே. (௪)

ஊனவருயிரினோடுமுலகங்களூழியாகித் 45
தானவர்தனமுமாகித்தனஞ்சயனோடெதிர்ந்த
கானவர்காளகண்டர்காஞ்சிமாநகர்தன்னுள்ளா
ரேனமக்கோடுபூண்பாரிலங்குமேற்றளியனாரே. (௫)

மாயனுமாலனாகி மலரவனாகிமண்ணாய்த் 45
தேயமாய்த்திசையெட்டாகித்தீர்த்தமாய்த்திரிதர்கின்ற
காயமாய்க்காயத்துள்ளார்காஞ்சிமாநகர்தன்னுள்ளா
வேயமென்றோளிபாகரிலங்குமேற்றளியனாரே. (௬)

மண்ணினையுண்டமாயன்றன்னையோர்பாகங்கொண்டார் 45
பண்ணினைப்பாடியாடும்பத்தர்கள்சித்தங்கொண்டார்
கண்ணினைமூன்றுங்கொண்டார் காஞ்சிமாநகர்தன்னுள்ளா
ரெண்ணினையெண்ணவைத்தாரிலங்குமேற்றளியனாரே. (௭)

செல்வியைப்பாகங்கொண்டார் சேந்தனைமகனாக்கொண்டார் 45
மல்லிகைக்கண்ணியோடுமாமலர்க்கொன்றைசூடிக்
கல்வியைக்கரையிலாதகாஞ்சிமாநகர்தன்னுள்ளா
ரெல்லியைவிளங்கநின்றாரிலங்குமேற்றளியனாரே. (௮)

579 வேறிணையின்றியென்றும்விளங்கொளிமருங்கினாளைக
கூறியலாகவைததார்கோளராமதியும்வைததா
ராறினைசசடையுள்வைததாரணிபொழிற்கசசிதன்னு
ளேறினையேறுமெநதையிலங்குமேற்றளியனாரே. (௯)

580 தென்னவன்மலையெடுக்கச்சேயிழைநடுங்கக்கண்டு
மன்னவன்விரலாலூன்றமணிமுடிநெரியவாயாற்
கன்னலின்கீதமபாடககேட்டவாகாஞசிதன்னு
ளின்னவறகருளிசசெயதாரிலங்குமேற்றளியனாரே. (௧௦)

திருசசிற்றமபலம.

இது தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - திருமேற்றளிநாதர் - தேவியார் - திருமேற்றளிநாயகி ஆகபபதிகம - ௪௫.

திருவேகமபம-திருநேரிசை

திருசசிற்றமபலம.

581 நமபனைநகரமூன்றுமெரியுணவெருவநோக்கு
மமபனையமுதையாறறையணிபொழிறகசசியுளளே
கமபனைககதிரவெண்டிஙகட்செஞசடைககடவுடன்னைச
செமபொன்னைபபவளததூணைசசிநதியாவெழுகினறேனே. (௧)

582 ஒருமுழமுளளகுட்டமொன்பதுதுளையுடைததா
யரைமுழமதனகலமதனிலவாழமுதலையைந்து
பெருமுழைவாயதல்பற்றிக்கிடந்துநான்பிதற்றுகின்றேன
கருமுகிறவழுமாடககசசிமேயகம்பனீரே. (௨)

583 மலையினாரமகளோரபாகமைநதனாமழுவொனறேநதிச
சிலையினான்மதில்கண்மூன்றுநதீயெழசசெற்றசெலவ
ரிலையினாரசூலமேநதியேகமபமேவினானைத்
தலையினாலவணங்கவல்லார்தலைவர்கருநதலைவர்தாமே. (௩)

584 பூத்தபொற்கொன்றைமாலைபுரிசடைக்கணிந்தசெல்வர்
தீர்ததமாஙகஙகையாளைததிருமுடிதிகழவைதது
வேததுவாரேத்தநின்றவேகம்பமேவினானை
வாழத்துமாறறியமாட்டேன்மால்கொடுமயங்கினேனே. (௪)

585 மையினார்மலர்நெடுங்கண்மங்கையோர்பாகமாகிக்
கையிலோர்கபாலமேந்திக்கடைதொறும்பலிகொள்வாரதா
மெய்யவேதோனேமோட்டியேகம்பமேவினானைக்
கையினாற்றொழவல்லார்க்[illegible] (௫)

கருவினைமருவுங்கங்கைதங்கியசடையனெங்க
ளருவினையகலநல்குமண்ணலையமரர்போற்றுந்
திருவினைத்திருவேகம்பஞ்செப்பிடவுறையவல்ல
வுருவினையுருகியாங்கேயுள்ளத்தாலுகக்கின்றேனே. (௬)

கொண்டதோர்கோலமாகிக்கோலக்காவுடையகூத்த
னுண்டதோர்நஞ்சமாகியுலகெலாமுய்யவுண்டா
னெண்டிசையோருமேத்தநின்றவேகம்பன்றனைக்
கண்டுநானடிமைசெய்வான்கருதியேதிரிகின்றேனே. (௭)

படமுடையரவினோடுபனிமதியதனைச்சூடிக்
கடமுடையுரிவைமூடிக்கண்டவரஞ்சவம்ம
விடமுடைக்கச்சிதன்னுளேகம்பமேவினானற்
னடமுடையாடல்காணஞாலந்தானுய்ந்தவாறே. (௮)

பொன்றிகழ்கொன்றைமாலைபொருந்தியநெடுந்தண்மார்பர்
நன்றியிற்புகுந்தென்னுள்ளமெள்ளவேநவிலநின்று
குன்றியிலடுத்தமேனிக்குவளையங்கண்டொம்மை
யின்றுயில்போதுகண்டாரினியரோகம்பனாரே (௯)

திருத்தியார்பழனத்துள்ளார்தொண்டர்கள்பலருமேத்த
வருத்தியாலன்புசெய்வாரவரவர்க்கருள்கள்செய்தே
யெருத்தினையிசையவேற்றியேகம்பமேவினார்க்கு
வருத்திநின்றடிமைசெய்வார்வல்வினைமாயுமன்றே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆகப்பதிகம் - ௪௪.

திருவொற்றியூர் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்

வெள்ளத்தைச்சடையுள்வைத்தவேதகீதன்றன்பாத
மெள்ளத்தானடையவேண்டின்மெய்தருஞானத்தீயாற்
கள்ளத்தைக்கழியநின்றார்க்காயத்துக்கலந்துநின்று
உள்ளத்துளொளியுமாகுமொற்றியூருடையகோவே. (௧)

வசிப்பெனும்வாழ்க்கைவேண்டாவானவரிறைவனின்று
புசிப்பதோர்பொள்ளலாக்கையதனொடும்புணர்வுவேண்டில்
சிறப்பெனுமருந்தவத்தாலரனமாவிட்டதாகி
யுசிற்பெறுமுணர்வுமுள்ளாரொற்றியூருடையகோவே. (௨)

தானத்தைச்செய்துவாழ்வான்சலத்துளேயழுந்துகின்றீர்
வானத்தைவணங்கவேண்டில்வம்மின்கள்வல்லீராகின்

ஞானத்தைவிளக்கையேற்றிநாடியுளவிரவவல்லார்க
கூனத்தையொழிப்பர்போலுமொற்றியூருடையகோவே. (௩)

94 காமத்துளழுந்திநின்றுகண்டராலொறுப்புண்ணாதே
சாமத்துவேதமாகிநின்றதோர்சயம்புதன்னை
யேமத்துமிடையிராவுமேகாந்தமியம்புவார்க்கு
ஓமத்துளொளியதாகுமொற்றியூருடையகோவே. (௪)

95 சமையமேலாறுமாகித்தானொருசயம்புவாகி
யிமையவர்பரவியேத்தவினிதினங்கிருந்தவீசன்
கமையினையுடையராகிக்கழலடிபரவுவார்க்கு
உமையொருபாகர்போலுமொற்றியூருடையகோவே. (௫)

96 ஒருத்திதன்றலைச்சென்றானைக்கரந்திட்டானுலகமேத்த
வொருத்திக்குநல்லனாகிமறுப்படுத்தொளித்துமீண்டே
யொருத்தியைப்பாகம்வைத்தானுணர்வினாலையமுண்ணி
யொருத்திக்குநல்லனல்லனொற்றியூருடையகோவே (௬)

97 பிணமுடையுடலுக்காகப்பித்தராயத்திரிந்துநீங்கள்
புணர்வெனும்போகம்வேண்டாபோகலாம்பொய்யைநீங்க
மிணமுடைநெஞ்சினுள்ளானினைக்குமாநினைக்கின்றார்க்கு
உணர்வினோடிருப்பர்போலுமொற்றியூருடையகோவே. (௭)

98 பின்னுவார்சடையான்றன்னைப்பிதற்றிலாப்பேதைமாக
முன்னுவார்நரகந்தன்னுடொல்வினைதீரவேண்டின்
மன்னுவான்மறைகளோதிமனத்தினுள்விளக்கொன்றேற்றி
யுன்னுவாருள்ளத்துள்ளாரொற்றியூருடையகோவே. (௮)

99 முள்குவார்போகம்வேண்டிமுயற்றியாலிடர்கள்வந்தால்
எள்குவாரெள்கினிறங்கிதுவொருமாயமென்பார்
பள்குவார்பத்தராகிப்பாடியுமாடிநின்று
முள்குவாருள்ளத்துள்ளாரொற்றியூருடையகோவே. (௯)

600 வெறுத்துகப்புலன்களைந்தும்வேண்டிற்றுவேண்டுநெஞ்சே
மறுத்துகவார்வச்செற்றக்குரோதங்களான்மாயப்
பொறுத்துகப்புட்பகத்தேருடையானையடரவூன்றி
யொறுத்துகந்தருள்கள்செய்தாரொற்றியூருடையகோவே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மாணிக்கத்தியாகர் - தேவியார் - வடிவுடையம்மை. ஆகப்பதிகம் - ௪௫.

திருவொற்றியூர் - திருநேரிசை.

திருசசிறறமபலம.

ஓமபினேனகூட்டைவாளாவுளளததோாகொடுமைவைத்துக்
காமபிலாமூனழபோலககருதிறறேமுககமாடடேன
பாமபினவாயததேரைபோலபபலபலநினைககினறேனை
யோமபிநீயுயயககொளளாயொற்றியூருடையகோவே. (க)

மனமெனுநதோணிபறறிமதியெனுங்கோலையூனறிச
சினமெனுஞசரககையேறறிசசெறிகடலோடுமபோது
மதனெனுமபாறைதாககிமறியுமபோதறியவொணணாது
துனையுனுமுணாவைநலகாயொற்றியூருடையகோவே. (உ)

திருசசிறறமபலம.

ஆகபபதிகம - சச.

ஸ்ரீகைலாயம - திருநேரிசை.

திருசசிறறமபலம.

கனகமாவயிரமுநதுமாமணிககயிலைகணடு
முனகனுடரககனோடியெடுததலுமுமையாளஞச
அனகனுமினறவீசனூனறலுமலறிவீழநதான
மனகனுமூனறினேனமறிததுநோககிலலையனறே. (க)

கதிததவனகணசிவநதுகயிலைநனமலையையோடி
யதிாததவனெடுததிடலுமரிவைதானஞசவீச
னெதிததவனூனறியிடடநிலையழிநதலறிவீழநதான
மதிததிறையூனறினேனமறிததுநோககிலலையனறே. (உ)

கறுததவனகணசிவநதுகயிலைநனமலையைககையான
மறிததலுமஙகையஞசவானவரிறைவனககு
நெறிதொருவிரலாலூனறநெடுவரைபோலவீழநதான்
மறிததிறையூன்றினேனமறிததுநோககிலலையனறே. (௩)

கடுததவனகண்சிவநதுகயிலைநனமலையையோடி
யெடுததலுமஙகையஞசவிறையவனிறையேநககு
நொடிபபளவிரலாலூனறநோவதுமலறியிடடான
மடித்திறையூனறினேனமறிததுநோககிலலையனறே. (ச)

கனறிததவகணசிவநதுகயிலைநனமலையையோடி
வெனறிததனைததலததாலெடுததலும்வெருவமஙகை
நன்றுதானகருநாதனூன்றலுநகழவீழ்நதான
மனறிததானூனறினேனமறித்துநோககில்லையனறே. (ரு)

8 களித்தவன்கண்சிவந்துகயிலைநன்மலையையோடி
நெளித்தவனெடுத்திடலுநேரிழையஞ்சநோக்கி
வெளித்தவனூன்றியிட்டவெற்பினாலலறிவீழ்ந்தான்
மளித்திறையூன்றினானேன்மறித்துநோக்கில்லையன்றே. (௬)

9 கருத்தனையகண்சிவந்துகயிலைநன்மலையைக்கையா
லெருத்தனையெடுத்தவாறேயேந்திழையஞ்சவீசன்
திருத்தனையின்றதேவன்றிருவிரலூன்றவீழ்ந்தான்
வருத்துவானூன்றினானேன்மறித்துநோக்கில்லையன்றே. (௭)

10 கடியவன்கண்சிவந்துகயிலைநன்மலையையோடி
வடிவுடைமங்கையஞ்சவெடுத்தலுமருவநோக்கிச்
செடிபடத்திருவிரலாலூன்றலுஞ்சிதைந்துவீழ்ந்தான்
வடிவுறவூன்றினானேன்மறித்துநோக்கில்லையன்றே. (௮)

11 கரியத்தான்கண்சிவந்துகயிலைநன்மலையைப்பற்றி
யிரியத்தானெடுத்திடலுமேந்திழையஞ்சவீச
னெரியத்தானூன்றுமுன்னநிற்கிலாதலறிவீழ்ந்தான்
மரியத்தானூன்றினானேன்மறித்துநோக்கில்லையன்றே. (௯)

12 கற்றனன்கயிலைதன்னைக்காண்டலுமரக்கனோடிச்
செற்றவனெடுத்தவாறேசேயிழையஞ்சவீச
னுற்றிறையூன்றுமுன்னமுணாவழிவகையால்வீழ்ந்தான்
மற்றிறையூன்றினானேன்மறித்துநோக்கில்லையன்றே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - கைலாயநாதர் - தேவியார் - பார்வதியம்மை. ஆகப்பதிகம் - ௪௭.

திருஆப்பாடி - திருநேரிசை.
திருச்சிற்றம்பலம்.

13 கடலகமேழினோடும்புவனமுங்கலந்தவிண்ணு
முடலகத்துயிரும்பாருமொள்ளழலாகிநின்று
தடமலர்க்கந்தமாலைதண்மதிபகலுமாகி
மடலவிழ்கொன்றைசூடிமன்னுமாப்பாடியாரே. (௧)

14 ஆதியுமறிவுமாகியறிவினுட்செறிவுமாகிச்
சோதியுட்சுடருமாகித்தூநெறிக்கொருவனாகிப்
பாதியிற்பெண்ணுமாகிப்பரவுவார்பாங்கனாகி
வேதியர்வாழுஞ்சேய்ஞல்விரும்புமாப்பாடியாரே. (௨)

15 எண்ணுடையிருக்குமாகியிருக்கினுட்பொருளுமாகிப்
பண்ணொடுபாடறன்னைப்பரவுவார்பாங்கனாகிக்

கண்ணொருநெற்றியாகக்கருதுவார்கருதலாகாப்
பெண்ணொருபாகமாகப்பேணுமாப்பாடியாரே. (௩)

அண்டமாரமரர்கோமானாதியெம்மண்ணல்பாதங் 4616
கொண்டவன்குறிப்பினாலேகூப்பினான்றாபரத்தைக்
கண்டவன்றாதைபாயவானகாலறவெறியக்கண்டு
தண்டியார்க்கருள்கள்செய்ததலைவராப்பாடியாரே. (௪)

சிந்தையுந்தெளிவுமாகித்தெளிவினுட்சிவமுமாகி 4617
வந்தனபயனுமாகிவாணுதல்பாகமாகி
மந்தமாம்பொழில்கள்சூழ்ந்தமண்ணினித்தென்கரைமேன்மன்னி
யந்தமோடளவிலாதவடிகளாப்பாடியாரே. (௫)

வன்னிவாளரவுமத்தமதியமுமாறுஞ்சூடி 4618
மின்னியவுருவாஞ்சோதிமெய்ப்பொருட்பயனுமாகிக்
கன்னியோர்பாகமாகிக்கருதுவார்கருத்துமாகி
யின்னிசைதொண்டர்பாடவிருந்தவாப்பாடியாரே. (௬)

உள்ளுமாய்ப்புறமுமாகியுருவுமாயருவுமாகி 4619
வெள்ளமாய்க்கரையுமாகிவிரிகதிர்ஞாயிறாகிக்
கள்ளமாய்க்கள்ளத்துள்ளார்க்கருத்துமாயருத்தமாகி
யள்ளுவார்க்கள்ளல்செய்திட்டிருந்தவாப்பாடியாரே. (௭)

மயக்கமாயதெளிவுமாகிமால்வரைவளியுமாகித் 4620
தியக்கமாயொருக்கமாகிச்சிந்தையுள்ளொன்றிநின்று
வியக்கமாயிறுதியாகியெண்டிசைக்கிறைவராகி
யயக்கமாயடக்கமாயவைவராப்பாடியாரே. (௮)

ஆரழலுருவமாகியண்டமேழ்கடந்தவெந்தை 46
பேரொளியுருவினானைப்பிரமனுமாலுங்காணாச்
சீரவைபரவியேத்திச்சென்றடிவணங்குவார்க்குப்
பேரருளருளிச்செய்வார்பேணுமாப்பாடியாரே. (௯)

திண்டிறலரக்கனோடிச்சீகயிலாயந்தன்னை 46
யெண்டிறலிலனுமாகியெடுத்தலுமேழையஞ்ச
விண்டிறநெரியவூன்றிமிகக்கடுத்தலறிவீழப்
பண்டிறல்கேட்டுகந்தபரமராப்பாடியாரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பாலுவந்தநாயகர் தேவியார் - பெரியநாயகியம்மை. ஆகப்பதிகம் ௩௮

திருக்குறுக்கை - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்

23 ஆதியிற்பிரமனார்தாமர்ச்சித்தாரடியிணைக்கீழ்
ஓதியவேதநாவருணருமாறுணரலுற்றார்
சோதியுட்சுடராய்த்தோன்றிச்சொல்லினையிறந்தார்பல்பூக்
கோதிவண்டறையுஞ்சோலைக்குறுக்கைவீரட்டனாரே. (௧)

24 நீற்றினைநிறையப்பூசிநித்தலுநியமஞ்செய்து
ஆற்றுநீர்பூரித்தாட்டுமந்தணனைக்கொல்வான்
சாற்றுநாளற்றதென்றுதருமராசற்காய்வந்த
கூற்றினைக்குமைப்பர்போலுங்குறுக்கைவீரட்டனாரே. (௨)

25 தழைத்ததோராத்தியின்கீழ்த்தாபரமணலாற்கூப்பி
அழைத்தங்கேயாவின்பாலைக்கறந்துகொண்டாட்டக்கண்டு
பிழைத்ததன்றாதைதாளைப்பெருங்கொடுமழுவால்வீசக்
குழைத்ததோரமுதமீந்தார்குறுக்கைவீரட்டனாரே. (௩)

26 சிலந்தியுமானைக்காவிற்றிருநிழற்பந்தர்செய்து
உலந்தவணிறந்தபோதேகோச்செங்கணானுமாகக்
கலந்தநீர்க்காவிரிசூழ்சோணாட்டுச்சோழர்தங்கள்
குலந்தனிற்பிறப்பித்திட்டார்குறுக்கைவீரட்டனாரே (௪)

27 ஏறுடனேழடர்த்தானெண்ணியாயிரம்பூக்கொண்டு
ஆறுடைச்சடையினானையர்ச்சித்தானடியிணைக்கீழ்
வேறுமோர்பூக்குறையமெய்ம்மலர்க்கண்ணைமிண்டக்
கூறுமோராழியீந்தார்குறுக்கைவீரட்டனாரே. (௫)

28 கல்லினாலெறிந்துகஞ்சிதாமுணுஞ்சாக்கியனார்
நெல்லினார்சோறுணாமேநீள்விசும்பாளவைத்தார்
எல்லியாங்கெரிகையேந்தியெழிற்றிகழ்நட்டமாடிக்
கொல்லியாம்பண்ணுகந்தார்குறுக்கைவீரட்டனாரே. (௬)

காப்பதோர்வில்லுமம்புங்கையுடையிறைச்சிப்பாரந்
தோற்பெருஞ்செருப்புத்தொட்டுத்தூயவாய்க்கலசமாட்டத்
தீப்பெருங்கண்கள்செய்யக்குருதிநீரொழுகத்தன்கண்
கோப்பதுபற்றிக்கொண்டார்குறுக்கைவீரட்டனாரே. (௭)

30 நிறைமறைக்காடுதன்னினீண்டெரிதீபந்தன்னைக்
கறைநிறத்தெலிதன்மூக்குச்சுட்டிடக்கனன்றுதூண்ட

நிறைகடன்மண்ணும்விண்ணுநீண்டவானுலகமெல்லாங்
குறைவறக்கொடுப்பர்போலுங்குறுக்கைவீரட்டனாரே.　　(௮)

அணங்குமைபாகமாகவடக்கியவாதிமூர்த்தி　　4631
வணங்குவாரிடர்கடீர்க்குமருந்துநல்லருந்தவத்த
கணம்புல்லர்க்கருள்கள்செய்துகாதலாமடியார்க்கென்றுங்
குணங்களைக்கொடுப்பர்போலுங்குறுக்கைவீரட்டனாரே.　　(௯)

எடுத்தனனெழிற்கயிலையிலங்கையர்மன்னன்றன்னை　　4632
யடுத்தொருவிரலாலூன்றவலறிப்போயவனும்வீழ்ந்து
விடுத்தனன்கைநரம்பாலவேதகீதங்கள்பாடக்
கொடுத்தனர்கொற்றவாணாள்குறுக்கைவீரட்டனாரே.　　(௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆகப்பதிகம் - ௪௧.

திருக்குறுக்கை - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்

நெடியமால்பிரமனோடுநீரேறுமயிலையுங்கொள்ள　　463
அடியொடுமுடியுங்காணாரருச்சுனற்கம்புமவில்லுந்
துடியுடைவேடராகித்தூயமந்திரங்கள்சொல்லிக்
கொடிநெடுந்தேர்கொடுத்தார்குறுக்கைவீரட்டனாரே.　　(௧)

ஆத்தமாயயனுமாலுமன்றிமற்றொழிந்ததேவர்　　4634
சோத்தமெம்பெருமானென்றுதொழுதுதோத்திரங்கள்சொல்லத்
தீர்த்தமாயட்டமீமுன்சீருடையேழுநாளுங்
கூத்தராய்வீதிபோந்தார்குறுக்கைவீரட்டனாரே.　　(௨)

திருச்சிற்றம்பலம்

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வீரட்டேசுவரர் - தேவியார் - ஞானம்பிகையம்மை.　　ஆகப்பதிகம் - ௪௨.

திருக்கோடிகா - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்

நெற்றிமேற்கண்ணினானேநீறுமெய்ப்பூசினானே　　46
கற்றைப்புன்சடையினானேகடல்விடம்பருகினானே
செற்றவர்புரங்கண்மூன்றுஞ்செவ்வழல்செலுத்தினானே
குற்றமில்குணத்தினானேகோடிகாவுடையகோவே.　　(௧)

கடிகமழ்கொன்றையானேகபாலங்கையேந்தினானே　　46
வடிவுடைமங்கைதன்னைமார்பிலோர்பாகத்தானே
யடியிணைபரவநாளுமடியவர்க்கருள்செய்வானே
கொடியணிவிழவதோவாக்கோடிகாவுடையகோவே.　　(௨)

637 நீறுமெய்ப்பூசினானைநிழறிகழ்மழுவினானை
யேறுகந்தேறினானையிருங்கடலமுதொப்பானை
யாறுமோர்நான்குவேதமறமுரைத்தருளினானை
கூறுமோர்பெண்ணினானைக்கோடிகாவுடையகோவே. (௩)

638 காலனைக்காலாற்செற்றன்றருள்புரிகருணையானை
நீலமார்கண்டத்தானைநீண்முடியமரர்கோவே
ஞாலமாம்பெருமையானைநளிரிளந்திங்கள்சூடுங்
கோலமார்சடையினானைக்கோடிகாவுடையகோவே (௪)

639 பூணரவாரத்தானைப்புலியுரியரையினானைக்
காணில்வெண்கோவணமுங்கையிலோர்கபாலமேந்தி
யூணுமோர்பிச்சையானையுமையொருபாகத்தானைக்
கோணல்வெண்பிறையினானைக்கோடிகாவுடையகோவே. (௫)

640 கேழல்வெண்கொம்புபூண்டகிளரொளிமார்பினானை
யேழையேனேழையேனானென்செய்கேனெந்தைபெம்மான்
பாழையொண்கண்ணினார்கள்வலைதனின்மயங்குகின்றேன்
கூழையேறுடையசெல்வாகோடிகாவுடையகோவே. (௬)

641 அழலுமிழங்கையானையரிவையோர்பாகத்தானைத்
தழலுமிழரவமார்த்துத்தலைதனிற்பலிகொள்வானை
நிழலுமிழ்சோலைசூழநீள்வரிவண்டினங்கள்
குழலுமிழ்கீதம்பாடுங்கோடிகாவுடையகோவே. (௭)

642 ஏவடுசிலையினானைப்புரமவையெரிசெய்தானை
மாவடுவகிர்கொள்கண்ணாண்மலைமகள்பாகத்தானை
யாவடுதுறையுளானையைவராலாட்டப்பட்டேன்
கோவநீகுற்றந்தீராய்கோடிகாவுடையகோவே. (௮)

643 ஏற்றநீர்க்கங்கையானையிருநிலந்தாவினானு
நாற்றமாமலர்மேலேறுநான்முகனிவர்கள்கூடி
யாற்றலாலளக்கலுற்றார்க்கழலுருவாயினானே
கூற்றுக்குங்கூற்றனாய்கோடிகாவுடையகோவே. (௯)

644 பழகநானடிமைசெய்வேன்பசுபதீபாவநாசா
மழகளியானையின்றோன்மலைமகள்வெருவப்போர்த்த
அழகனேயரக்கன்றிண்டோளருவரைநெரியவூன்றுங்
குழகனேகோலமார்பாகோடிகாவுடையகோவே. (௰)

திருச்சிற்றம்பலம். [ஆகப்பதிகம்-௬௪.

இது சோழநாட்டிலுள்ளது. சுவாமிபெயர் - கோடீசுவரர் - தேவியார் - வடிவாம்பிகையம்மை.

திருஆரூர் - திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

படுகுழிப் பவ்வத் தன்ன பண்டியைப் பெய்த வாற்றால்
கெடுவதிம் மனிதர் வாழ்க்கை காண்டொறுங் கேதுகின்றேன்
முடுகுவ ரிருந்துள் ளைவர் மூக்கரே யிவர்க ளோடு
மடியனேன் வாழ மாட்டே னாரூர்மூலட் டனீரே. (க)

புழுப்பெய்த பண்டி தன்னைப் புறமொரு தோலான் மூடி
யொழுக்கறு வொன்ப துவா யொற்றுமை யொன்று மில்லைச்
சழக்குடை யிதனு ளைவர் சங்கடம் பலவுஞ் செய்ய
வழிப்பனாய் வாழ மாட்டே னாரூர்மூலட் டனீரே. (உ)

பஞ்சின மெல்லடியி னார்கள் பாங்கராய் வார்கண் ணின்று
நெஞ்சினை யப்பலவுஞ் செய்து நினைவினு நினைய வொட்டா
நஞ்சணி மிடற்றி னானே நாதனே நம்ப னேநா
னஞ்சினேற் கஞ்சலென்னீ ராரூர்மூலட் டனீரே. (௩)

கெண்டையந் தடங்கண் ணல்லார் தம்மையே கெழும வேண்டிக்
குண்டராய்த் திரிதந் தைவர் குலைத்திடாக் குழியி னூக்கக்
கண்டுநா னறிக்கிலேன் காத்துக்கொள் கறைசேர் கண்டா
வண்டவா னவர்கள் போற்று மாரூர்மூலட் டனீரே. (ச)

தாழ்குழலின் சொல்லார் தங்களைத் தஞ்சமென்று
ஏழையே னாகி நானுமென் செய்கே னெந்தை பெம்மான்
வாழ்வதே லரிது போலும் வைகலு மைவர் வந்து
ஆழ்குழிப் படுத்த வாற்றே னாரூர்மூலட் டனீரே. (ரு)

மாற்றமொன் றருள கில்லீர் மதியிலேன் விதியி லாமை
சீற்றமுந் தீர்த்தல் செய்யீர் சிக்கென வுடைய ராகிக்
கூற்றயபோ லைவர் வந்து குலைத்திட்டுக் கோகு செய்ய
ஆற்றவுங் கில்லே னாயே னாரூர்மூலட் டனீரே. (௬)

உயிர்நிலை யுடம்பே காலா வுள்ளமே தாழி யாகத்
துயரமே யேற்ற மாகத் துன்பக்கோ லதனைப் பற்றிப்
பயிர்தனைச் சுழிய விட்டுப் பாழ்க்குநீ ரிறைத்து மிக்க
வயர்வினா லைவர்க் காற்றே னாரூர்மூலட் டனீரே. (எ)

கற்றதே லொன்று மில்லைக் காரிகை யாரோ டாடிப்
பெற்றதேற் பெரிதுந் துன்பம் பேதையேன் பிழைப்பி னாலே
முற்றினா லைவர் வந்து முறைமுறை துயரஞ் செய்ய
வற்றனா னைந்து போனே னாரூர்மூலட் டனீரே. (அ)

53 பத்தனாய்வாழமாட்டேன்பாவியேன்பரவிவந்து
சித்தத்துள்ளாவதீயசெயவினைபலவுஞ்செய்ய
மத்துறுதயிரேபோலமறுகுமென்னுள்ளந்தானும
அத்தனேயமரர்கோவேயாரூரமூலட்டனீரே. (௯)

54 தடக்கைநாலைந்துகொண்டுதடவரைதன்னைப்பற்றி
யெடுத்தவன்பேர்க்கவோடியிரிந்தனபூதமெல்லா
முடித்தலையணைத்துநேர்தோளுமுறிதரவிறையேயூன்றி
யடர்த்தருள்செய்ததென்னேயாரூரமூலட்டனீரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருஆரூரென்பதற்குப்பெயருள் - இலக்குமிவாசஞ்செய்யுமூரென்பர். ஆகப்பதிகம். ௩௨.

திருஆரூர் - திருநேரிசை

திருச்சிற்றம்பலம்.

55 குழல்வலங்கொண்டசொல்லாள்கோலவேற்கண்ணிதன்னைக்
கழல்வலங்கொண்டுநீங்காக்கண்களைக்கண்களார
வழலவலங்கொண்டகையானருட்கதிரெறிக்குமாரூர்
தொழுவலங்கொண்டுசெய்வான்றோன்றினாற்றோன்றினாரே. (௧)

56 நாகத்தைநங்கையஞ்சநங்கையைமஞ்ஞையென்று
வேகத்தைத்தவிரநாகம்வேழத்தினுரிவைபோர்த்துப்
பாகத்தினிமிர்தல்செய்யாத்திங்களைமின்னென்றஞ்சி
யாகத்திற்கிடந்தநாகமடங்குமாரூரனாரே. (௨)

57 தொழுதகங்குழையமேவித்தோட்டிமையுடையதொண்ட
ரழுதகம்புகுந்துநின்றுறவரவாபோலுமாரூ
ரெழிலகநடுவெண்முற்றமின்னறியுமோகொள்வேலிப்
பொழிலகம்விளங்குதிங்கட்புதுமுகிழ்சூடினாரே. (௩)

58 நஞ்சிருள்மணிகொள்கண்டர்நகையிருளீமகங்கல்
வெஞ்சுடர்விளக்கத்தாடிவிளங்கினாபோலுமூவா
வெஞ்சுடர்முகடுதீண்டிவெள்ளிநாராசமென்ன
வஞ்சுடரணிவெண்டிங்களணியுமாரூரனாரே. (௪)

59 எந்தளிர்நீர்மைகோலமேனியென்றிமையோரேத்தப்
பைந்தளிர்க்கொம்பரன்னபடர்கொடிபயிலப்பட்டுத
தஞ்சடைத்தொத்திலுந்தம்யதேர்நீர்மையாலு
முந்தளிராகம்போலும்வடிவராரூரனாரே.

வானகம்விளங்கமல்குமவளங்கெழுமதியஞ்சூடித்
தானகமழியவநது தாமபலிதேர்வாபோலு
மூனகங்கழிநதவோட்டிலுண்பதுமொளிகொணஞ்ச
மானகமஞ்சுயாடுமடிகளாரூரனே. (௬)

அஞசனைகணையினனையழலுறவன்றுநோக்கி
அஞசனைகுழலினளையமுதமாவணைநதுநகக
அஞ்சனையஞ்சுமாடியாடரவாட்டுவாராதாம
அஞசனைவேலியாரூராதரிததிடங்கொண்டாரே. (௭)

வணஙகிமுனனமரரேததவலவினையானதீரப
பிணங்குடைசசடையிலவைததபிறையுடைபபெருமையணணல்
மணஙகமழோதிபாகாமதிலாவட்டததாடி
யணஙகொடிமாடவீதியாரூரெமமடிகளாரே. (௮)

நகலிடமபிறர்கட்காகநானமறையோாகடஙகள்
புகலிடமாகிவாழுயபுகலிலியிருவாகூடி
யிகலிடமாகநீணடஙகிணடெழிலழலதாகி
யகலிடமபரவியேததவடிகளாரூரிலாரே. (௯)

ஆயிரந்திஙகள்மொயததவலைகடலமுதமவாஙகி
யாயிரமசுராவாழுமணிமதினமூனறுமவேவ
வாயிரநதோளுமட்டிததாடியவனசவுதிர
வாயிரமடியும்வைததவடிகளாரூரனே. (௧௦)

திருசசிறறமபலம.

ஆகபபதிகம - ௫௧.

திருபபுகலூா - திருநேரிசை.

திருசசிறறமபலம.

பகைத்திட்டாாபுரஙகண்மூனறும்பறறீருகிவீழப
புகைததிட்டதேவாகோவேபொறியிலேனுடலாதனனு
ளகைததிட்டஙகதனைநாளுமைவா்கொண்டாட்டவாடித
திகைத்திட்டேன்செய்வதென்னேதிருபபுகலூரனீரே. (௧)

மையரிமதாததவொணகண்மாதாார்வலையிற்பட்டுக
கையெரிசூலமேந்துஙகடவுளைநினையமாட்டே
னைதெரிந்தகமிடற்றேயடைக்கும்போதாவியார்தாஞ்
செயவதொன்றறியமாட்டேன்றிருப்புகலூரனீரே. (௨)

67 மூப்பதுமுப்பத்தாறுமுப்பதுமிடுகுரம்பை
யப்பர்போலைவர்வந்துவதுதருகிதுவிடென்று
வொப்பவேநலியலுற்றாலுய்யுமாறறியமாட்டேன்
செப்பமேதிகழுமேனித்திருப்புகலூரனீரே. (௩)

68 பொறியிலாவழுக்கையோம்பிப்பொய்யினைமெய்யென்றெண்ணி
நெறியலாநெறிகள்சென்றேனீதனேனீதியேது
மறிவிலேனமரர்கோவேயமுதினைமண்ணில்வைக்குஞ்
செறிவிலேன்செய்வதென்னேதிருப்புகலூரனீரே. (௪)

69 அளியினார்குழலினார்கள்வர்களுக்கன்பதாகிக்
களியினார்பாடலோவாக்கடவூர்வீரட்டமென்னுந்
தளியினார்பாதநாளுநினைவிலாத்தகவினெஞ்சந்
தெளிவிலேன்செய்வதென்னேதிருப்புகலூரனீரே. (௫)

70 இலவினார்மாதர்பாலேயிசைந்துநானிருந்துபின்னு
நிலவுநாள்பலவென்றெண்ணிநீதனேனாதியுன்னை
யுலவிநானுள்கமாட்டேனுன்னடிபரவுஞானஞ்
செலவிலேன்செய்வதென்னேதிருப்புகலூரனீரே. (௬)

71 காத்திலேனிரண்டுமூன்றுங்கல்வியேயில்லையென்பால்
வாய்த்திலேனடிமைதன்னுள்வாய்மையாற்றூயனல்லேன்
பார்த்தனுக்கருள்கள்செய்தபரமனேபரவுவார்க்
டார்த்தமேதிகழும்பொய்கைத்திருப்புகலூரனீரே. (௭)

72 நீருமாய்த்தீயுமாகிநிலனுமாய்விசும்புமாகி
யேருடைக்கதிர்களாகியிமையவரிறைஞ்சநின்று
ராவதற்கரியராகியங்கங்கேயாடுகின்ற
தேவர்க்குந்தேவராவார்திருப்புகலூரனீரே. (௮)

73 மெய்யுளேவிளக்கையேற்றிவேண்டளவுயரத்தூண்டி
யுய்வதோருபாயம்பற்றியுகக்கின்றேனுகவாவண்ண
மைவரையகத்தேவைத்தீரவர்களேவலியராலச்
செய்வதொன்றறியமாட்டேன்றிருப்புகலூரனீரே. (௯)

74 அருவரைதாங்கினானுமருமறையாதியானு
மிருவருமறியமாட்டாவீசனாரிலங்கைவேந்தன்
கருவரையெடுத்தஞான்றுகண்வழிகுருதிசோரத்
திருவிரல்சிறிதுவைத்தார்திருப்புகலூரனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம். [ஆகப்பதிகம் - இ௪.

இது சோழநாட்டிலுள்ளது. சுவாமிபெயர் • அக்கினீசுவரர் • தேவியார் • கருந்தார்க்குழலியம்மை.

திருவலம்புரம் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்

தெண்டிரை யோங்கியோதஞ் சென்றடி வீழுங் காலைத்
தொண்டிரைத் தண்டர் கோனைத் தொழுதடி வணங்கி யெங்கும்
வண்டுகள் மதுக்கள் மாந்தும் வலம்புரத் தடிகள் தம்மைக்
கொண்டுநற் கீதம் பாடக் குழகர்தா மிருந்த வாறே (க)

மடுக்களில் வாளை பாய வண்டின மிரிந்த பொய்கைப்
பிடிக்களி றென்னத் தம்மிற் பிணைபயின் றணைவ ராலக்
தொடுத்தநன் மாலை யேந்தித் தொண்டர்கள் பரவி யேத்த
வடித்தடங் கண்ணி பாகர் வலம்புரத் திருந்த வாறே. (உ)

தேனுடை மலர்கள் கொண்டு திருந்தடி பொருந்தச் சாத்தி
யானிடை யஞ்சுங் கொண்டு வன்பினா லமர வாட்டி
வானிடை மதியஞ் சூடும் வலம்புரத் தடிகள் தம்மை
நானடைந் தேத்தப் பெற்று நல்வினைப் பயனுற் றேனே. (ங)

முளையெயிற் றிளநல் லேனம் பூண்டுமொய்ச் சடைகள் தாழ
வளையெயிற் றிளைய நாகம் வலித்தரை யிசைய வீக்கிப்
புளைகைய போர்வை போர்த்துப் புனலொடு மதியஞ் சூடி
வளைபயி லிளைய ரேத்தும் வலம்புரத் தடிக ளாமே. (ச)

சுருளுறு வரையின் மேலாத் துளங்கிளம் பளிங்கு சிந்த
விருளுறு கதிர்நு ழைந்த விளங்கதிர்ப் பசலைத் திங்க
ளருளுறு மடியரெல்லா மங்கையின் மலர்க ளேந்த
சுடர்மூன்றுங்கண்மூன்றாகக்கொண்டான்றான்கா, ணேவணத்தாலென்
றனையாட்கொண்டான்கா ணனலாடிகாண் டியார்க்கமிர்தானான்கா
ண், டீவணத்ததிருவுருவிற்கரியுருவன்காண் டிருவாரூரான்காணென்
சிந்தையானே. (௩)

கொங்குவார்மலர்க்கண்ணிக்குற்றாலன்காண் கொடுமழுவன்கா 6477
ண்கொல்லைவெள்ளேற்றான்கா, ணெங்கள்பாற்றுயர்கெடுக்குமெம்பி
ரான்கா ணேழ்கடலுமேழ்மலையுமாயினான்காண், பொங்குமாகருங்கட
னஞ்சுண்டான்றான்காண் பொற்றூண்காண்செம்பவளத்திரள்போல்
வான்காண், செங்கண்வாளரவமதியுடன்வைத்தான்காண் டிருவாரூரா
ன்காணென்சிந்தையானே. (௪)

காரேறுநெடுங்குடுமிக்கயிலாயன்காண் கறைக்கண்டன்காண்கண் 6478
ணார்நெற்றியான்காண், போரேறுநெடுங்கொடிமே லுயர்த்தினான்

காண் புண்ணியன்காணெண்ணரும்பல்குணத்தினன்கா, ணீறேறு
டர்சூலப்படையினன்கா ணின்மலன்காணிகரேதுமில்லாதான்காண்
ஏறேறுதிருமாலோர்பாகத்தான்காண் டிருவாரூரான்காணென்சிந்தை
யானே. (௫)

479 பிறையரவக்குறுங்கண்ணிச்சடையினன்காண் பிறப்பிலிகாண்பெ
ண்ணோடாணாயினன்காண், கறையுருவமணிமிடற்றுவெண்ணீற்றான
காண், கழறெருபூவார்பிறப்பறுக்குங்கபாலிகா, ணிறையுருவக்கனவ
ளையாளிடப்பாகன்கா ணிருநிலன்காணிருநிலத்துக்கியல்பானான்காண்
சிறையுருவக்களிவண்டாரசெம்மையான்காண் டிருவாரூரான்காணெ
ன்சிந்தையானே. (௬)

480 தலையுருவச்சிரமாலைசூடினனகாண டமருகந்தலைகலனாப்பலி
கொள்வான்கா, ணலையுருவச்சுடராழியாக்கினான்கா ணவ்வாழிநெடு
மாலுக்கருளினான்காண், கொலையுருவக்கூற்றுதைத்தகொள்கையான
காண்கூரெரிநீர்மண்ணொடுகாற்றாயினனகாண், சிலையுருவச்சரந்துர
ந்ததிறத்தினான்காண் டிருவாரூரானகாணென்சிந்தையானே. (௭)

481 ஐயன்காண் குமரன்காணாதியான்கா, ணடல்மழுவாடானென்றுழி
யன்மேலேந்து, கையன்காண்கடற்பூதப்படையினான்காண் கணனெ
றியாலைக்கணையோனுடல்காய்ந்தானகாண், வெய்யன்காண்டண்புன
ல்சூழ்செஞ்சடையான்காண் வெண்ணீற்றான்காண்விசயற்கருள்செய்
தானகாண், செய்யன்காண்கரியன்காண்வெளியோனானகாண் டிரு
வாரூரான்காணென்சிந்தையானே. (௮)

482 மலைவளர்த்தமடமங்கைபாகத்தான்காண் மயானத்தான்காண்மதிய
ஞ்சூடினான்கா, ணிலைவளர்த்தமலர்க்கொன்றைமாலையான்கா ணிறை
யவன்கா ணெறிநின்றார்நெஞ்சுண்டான்காண், கொலைவளர்த்தமூவிலை
யசூலத்தான்காண் கொடுங்குன்றன்காண்கொல்லையேற்றினான்காண்
சிலைவளர்த்தசரந்துரந்ததிறத்தினான்காண் டிருவாரூரான்காணென்சிந்
தையானே. (௯)

483 பொற்றாதுமலர்க்கொன்றைசூடினான்காண் புரிநூலன்காண்பொ
டியார்மேனியான்காண், மற்றொருந்தன்னொப்பாரில்லாதான்காண்ம
றையோதிகாணெறிநின்றார்நெஞ்சுண்டான்கா, ணொற்றொலுங்குறைவொன்
றுமில்லாதான்கா ணிறையவன்காண் மறையவன்காணீசன்றான்காண்
செற்றார்கடிரிபுரமூன்றுஞ்செற்றான்றான்காண் டிருவாரூரான்காணென்
சிந்தையானே. (௰)

திருச்சிற்றம்பலம்.

ஆகப்பதிகம் ௪௨.

திருவாரூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

உயிராவணமிருந்துற்றுநோக்கி யுள்ளக்கிழியினுருவெழுதி,யுயிரா 6484
வணஞ்செய்திட்டுன்கைத் தந்தாலுணரப்படுவாரோடொட்டிவாழ்தி,யு
யிராவணமேறாதானேறியமரர்நாடாளாதேயாரூராண்ட,வயிராவ
ணமே யென்னம்மானேநின்னருட்கண்ணானோக்காதாரல்லாதாரே.(க)

எழுதுகொடியிடையாரேழைமென்றோ ளிளையவர்கணம்மையிக 6485
ழாமுன்னம், பழுதுபடநினையேல்பாவிநெஞ்சே பண்டுதானென்னோ
டுபகைதானுண்டோ, முழுதுலகிலவானவர்கண் முறறுங்கூடிமுடியா
லுறவணங்கிமுற்றம்பற்றி, யழுதுதிருவடிக்கேபூசைசெய்யவிருக்கின
ற்ஞானாபோலு மாரூரதானே. (உ)

தேரூரார்மாவூரார்திங்களூரார்திகழ்புன சடைமுடிமேற்றிங்களசூ 6486
டிக, காரூரநின்றகழனிச்சாயற் கண்ணார்ந்தமாடங்கலந்துதோன்று
மோரூராவுலகெலாமொப்பக்கூடி யுமையாண மணவாளாவென்றுவா
ழ்த்தி,யாரூரராவாரூராவென்கின்றாக ளமரர்கடம்பெருமானேயெங்
குற்றாயே. (ஙு)

கோவணமோதோலோவுடையாவது கொலலேறோவேழமோவூ 6487
ர்வதுதான,பூவணமோபுறம்பயமோவன்றாயிற்றன பொருந்தாதார
வாழ்க்கைதிருந்தாமையோ, தீவண்ணத்தசெஞ்சடைமேற்றிங்கள்சூடித
திசைநானகுமவைத்துகந்தசெந்தீவண்ண, ராவணமோவொற்றியோ
வமமானார்தா மறியேன்மற்றூராமாரூராதானே. (ச)

ஏந்துமழுவாளரின்னம்பரா ரெரிபவளவண்ணர்குடமூக்கிலார் 6488
வாய்ந்தவளைக்கையாள்பாகமாக வார்சடையாரவந்துவலஞ்சுழியார
போந்தாரடிகள்புறம்பயத்தே புகலூர்க்கேபோயினார்போரேறறி
யாய்ந்தேயிருப்பார்போயாரூர்புக்கா ரண்ணலார்செய்கின்றகணமாய
மே. (ரு)

கருவாகிக்குழம்பிருந்துகலித்துமூளை கருநரம்பும்வெள்ளெலும்புஞ் 6489
சேர்ந்தொன்றாகி, யுருவாகிப்புறப்பட்டிங்கொருத்திதன்னால் வளர்க்கப்
பட் டுயிராருங்கடைபோகாரான், மருவாகிநின்னடியே மறவேனம
மான் மறித்தொருகாற்பிறப்புண்டேல் மறவாவண்ணந், திருவாரூர்ம
ணவாளாதிருத்தெங்கூராசெம்பொனேகம்பனேதிகைத்திட்டேனே.()

முன்னமவனுடையநாமங்கேட்டாண் மூர்த்தியவனிருக்கும்வண் 6490
ணங்கேட்டாள், பின்னையவனுடையவாரூர்கேட்டாள் பெயர்த்துமவ

னுக்கேபிச்சியானு, என்னையுமத்தனையுமன்றேசீத்தா னகன்றுள கவிடத்தாராசாரத்தைத், தன்னைமறந்தாடன்னுமங்கெட்டாடலைப்பட் டாணங்கைத்தலைவன்றுளே. (எ)

491 ஆடுவாயநீநட்டமளவிற்குன்று வலியடுவாருமறையோரறிந்தே னுன்னைப், பாடுவாதுமபுருயுநாரதாதி பரவுவாரமரர்களுமமரர்கோ னும், தேடுவார்திருமாலு நான்முகனுந் தீண்டுவாளமலைமகளுங்கங்கை யாளுங், கூடுமேநாயடியேன்செய்குற்றேவல் குறையுண்டேதிருவா ரூரமுடிகொண்டீர்க்கே. (அ)

492 நீருருஞ்செஞ்சடையாயநெற்றிக்கண்ணாய் நிலாத்திங்கட்டுண்டத் தாயனென்னைத்தேடி, யோருருமொழியாமேயொற்றித்தெங்கு மூலக மெலாந்திரிதந்துநின்னைக் காணபான், றேருருநெடுவீதிபற்றிநின்றுதிரு மாலுநான்முகனுந்தேர்ந்துங்காணு, தாரூராவாரூராவென்கின்றார்களம ரர்கடம்பெருமானேயாரூராயே. (௯)

493 நில்லுரோநன்றுகநட்டமிடு நறையேறறைப்பழையாறேபாயவே றிய, பலலூரும்பலிதிரிந்துசேறறூர்மீதே பலர்காணத்தலையாலங்கா டினூடே யிலலாநதபெருவேளூர்த்தளியேபேணி யிராபபட்டீச்சரங் கடந்துமணற்கால்புக, கெலலாருந்தனிச்சாத்தங்குடியிற்காண விளைப பொழுதிற்றிருவாரூர்புக்கார்தாமே. (௧௦)

494 கருத்துத்திக்கத்நாகங்கையிலேந்திக் கருவரைபோறகளியானைகதற க்கையா, லுரித்தெடுத்துச்சிவந்ததன்றோலபொருந்தமூடி யுமையவளை யச்சுறுத்துமொளிகொண்மேனித், திருத்துருத்திதிருப்பழனந்திருநெய் த்தானந்திருவையாறிடங்கொண்டசெலவர்நா, ளரிபெருத்தவெள் ளேற்றையடரவேறியபபனுரிப்பருவமாரூரரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

ஆகபதிகம் - ௨௫

திருவாரூர் - திருத்தாண்டகம்,

திருச்சிற்றம்பலம்

495 பாதித்தன்றிருவுருவிற்பெண்கொண்டானைப்பண்டொருகாற்றச முகனையழுவித்தானை, வாதித்துத்தடமலரான்சிரங்கொண்டானை வெண் கருப்புச்சிலைக்காமனுடல்கொண்டானைச், சோதிச்சந்திரன்மேனிமறு ச்செய்தானைச்சுடராங்கிதேவனையோர்கைகொண்டானை, யாதித்தன் பற்கொண்டவெம்மான்றன்னையாரூரிற்கண்டடியேனயர்த்தவாறே. (௧)

496 வெற்புறத்திருவடியாற்கூற்றட்டானை விளக்கினொளியின்னொ ளிமுத்தின்சோதி, யொப்புறத்திருவுருவத்தொருவன்றன்னை யோதா

தேவேதமுணர்ந்தான்றன்னை யப்புறத்தகடனஞ்சமுண்டான்றன்னை ய
முதுண்டாருலந்தாலுமுலவாதானை, யப்புறத்தநீரகத்தேயழலானானை
யாரூரிற்கண்டடியேனயாத்தவாறே. (௨)

ஒருகாலத்தொருதேவர்கண்கொண்டானை யூழிதோறூழியுயர்ந்தா 1497
னறன்னை, வருகாலஞ்செல்காலமாயினானை வனசருப்புசிலைக்காமனு
டலட்டானைப் பொருவேழக்களிறுரிவைபோர்வையானைப் புள்ள
மையனுடன்னைப்பொடிசெய்தானை, யருவேளவித்காத்தெச்சன்றலை
கொண்டானை யாரூரிற்கண்டடியேனயாத்தவாறே. (௩)

மெய்ப்பாலவெண்ணீறணிந்தமேனியானை வெண்பளிங்கினுடப் 1498
த்தசோதியானை, பொய்ப்பானைப்பொய்யிலாவொருவன்றன்னை யுத்தம
னைநித்திலத்தையுலகமெல்லாம், வைப்பானைக்களைவானைவருவிடபானை
வல்வினையேன்மனத்தகத்தேமன்னினானை, யப்பாலைக்கப்பாலைக்கடப்பா
லானை யாரூரிற்கண்டடியேனயாத்தவாறே. (௪)

பிண்டத்திற்பிறந்ததொருபொருளைமற்றைப் பிண்டத்தைப்படை 1499
த்ததனைப்பெரியவேதத், துண்டத்திற்பணிபொருளைச்சுடர்தீயாகிச் சுழ
ல்காலாயநீராகிப்பாராயிறைதை, கண்டத்திற்றீநஞ்சமுதுசெய்துக
ண்மூன்றுபடைத்ததொருகரும்பைப்பாலை, யண்டத்துக்கப்புறத்தார்த
மக்குவித்தைதையாரூரிற்கண்டடியேனயாத்தவாறே. (௫)

நீதியாய்நிலனாகிநெருப்பாய்நீராய்நிறைகாலாயிவையிற்றினியமமாகிப் 1500
பாதியாயொன்றாகியிரண்டாய மூன்றாய பரமாணுவாய்ப்பழுத்தடண்
களாகிச், சோதியாயிருளாகிச்சுவைகளாகிச்சுவைகலந்தவப்பாலாய்வீ
டாய்வீட்டி, லாதியாயந்தமாய்நின்றான்றன்னையாரூரிற்கண்டடியேனய
ாத்தவாறே. (சு எ-அ-கூ-க0)

திருச்சிற்றம்பலம்.

ஆகப்பதிகம் - உசு.

திருவாரூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பொய்ம்மாயப்பெருங்கடலிற் புலம்பாநின்ற புண்ணியங்காள்தீ 1501
வினைகாள்திருவேநீங்க, ளிம்மாயப்பெருங்கடலையரித்துத்தின்பீர்க ளில்லை
யேயிடந்துதான்யானேல்வாரேன், தம்மானைத்தலைமகனைத்தண்ணலா
ரூர்த்தடங்கடலைத்தொடர்ந்தோரையடங்கச்செய்யு, மெம்மானறனடித்
தொடர்வானுழிதாகின்றே னிடையிலேன்கெடுவீர்காளிடேறேன்மி
ன்னே. (௧)

502 ஐம்பெருமாபூதங்காளொருவிர்வேண்டிற் றொருவிர்வேண்டீண்டிவ்வவனியெல்லா மும்பரமேயுமவசமேயாக்கவல்லீர்க் கில்லையேனு காபோகம்பானேல்வானே, ருமபருமாயூழியுமாயுலகேழாகி யொளளாரூர்நளளமிர்தாம்வள்ளல்வானோ, தம்பெருமானுய நின்றவரனைக காண்பேன்றடைபபடுவேனுககருதிததருககேனமினனே. (௨)

503 சில்லுருவிற் குறியிருததிநிததலபற்றிசசெழுங்கணுேனகுமிதுலுக கடன்றா, பல்லுருவிற்றொழில்பூணடபஞ்சபூதப் பளகிருமவசமன்றே பாரேலெலலாஞ், சொல்லுருவிறசுடாமூன்றுயுருவமூனறுயததூாயன மூன்றுகியாண்டவாரூா, நலலுருவிறசிவனடியேயடைவேனுமமா னைமைப்புண்ணேன்கைமததுநீர்நடமின்களே. (௩)

504 ஊன்னுருவிற்சுவையொளியூறோசைநாற்றத துறுபபினதுகுறிபபாகுமைவீர் நுங்கண், மன்னுருவததியற்கைகளாலவைப்பீாக்கையோவையகமேபோதாதேயானேலவானோ, பொன்னுருவைததென்னூாமன்னுகுன்றைப்புவிக்கெழிலாஞ் சிவக்கொழுந்தைபபுகுந்தென்சிந்தைதன்னுருவைததந்தவனையெங்கைதன்னைத தலைப்படுவேன்றலைப்படுப்பான்றருக்கேன்மின்னே. (௪)

505 துப்பினைமுன்பற்றறுவிறலேமிககசோர்வுபடுசூட்சியமேசுகமேநீங்க, ளொப்பினையைப்பாவிததிவ்வுலகமெல்லாமுழறுமிதுகுறைமுடிப்பீாக்கரிதேயென்றன், வைப்பினைப்பொன்மதிலாரூர்மணியைவைகண் மணனையெம்பெருமானைவானோர்தங்க, ளப்பனைசசெப்பிடவடைவேனும்மானுனுமாட்டுவேணேடீட்டந்தீங்கலையேன்மின்னே. (௫)

506 பொங்குமதமானமேயார்வச்செற்றக் குரோதமேயுலோபமேபொறையேநீங்க, ளுங்கள்பெருமாநிலசதினெல்லையெல்லா முழறுமதுகுறைமுடிபபீர்க்கரிதேயானே, லங்கமலத்தயனொடுமாலாகிமற்று மதறகப்பாலொன்றாகியறியவொண்ணுச, செங்கனகததனிக்குன்றைசசிவனையாரூர்சசெல்வனைசசோவேனும்மாற்செலுததுவேனே. (௬)

507 இடர்பாவமெனமிக்கதுக்கவேட்கை வெறுப்பேயென்றனைவீருழலைகையோடிக், குடைகின்றீரக்குலங்கள் குலுங்கிநுங்கள்குறிநின்றமையாதே யானேல்வானே, ரடையார்தம்புரமூன்றுமெரிசெய்தானையமரர்கடம்பெருமானையரனையாரூருடையானைக்கடுகச்சென்றடைவேனும்மாலாட்டுவேணேடீட்டந்தீங்கலையேன்மின்னே. (௭)

508 விரைந்தாளுநல்குரவேசெல்வேபொல்லாவெகுட்சியேமகிழ்ச்சியே வெறுப்பேநீங்க, ணிரைந்தோடிமானிலத்தையரித்துத்தின்பீர்க்கெல்லை

யேறுகர்போகம்யானேல்வானோர், கரைநதோடவருநஞ்சையமுதுசெ
யதகற்பகததைத் தறபரததைததிருவாரூரிற், பரஞ்சோதிதனைக்காண
பேண்பேடேனும்பண்பிற்பரிந்தோடியோட்டநதுபகட்டன்மின்னே. ()

ஊள்வாயதொழிற்பஞ்சேந்திரியவஞ்ச முகரிகாண்முழுதுமிவ்வுல 5509
கையோடி, நாளவாயுநமமுடையவமமராணைநடாததுகினறீாககனம
யாதேயானேல்வானோர், கீள்வானமுகடதனைததாஙகினற நெடுந்தூ
ணைப்பாதாளக்கருவைப்பாரூ, ராள்வானைககடுகசென்றடையேனும்மா
லாட்டுணேனேட்டநதீஙகலையேனமினனே. (௯)

சுருக்கமொடுபெருககிலேநீததல்பறறித துபபறையென்றனைவீரி 5510
வவுலகையோடிச, செருககிமிகைசெலுததியுமசெயகைவைகல் செய்தி
னறீர்ககமையாதேயானேன்மிக்க, தருககிமிகவரையெடுததவாக்கனுகந
தளரவடியெடுததவன்றன்பாடல்கேட, டிரககமெழுந்தருளியவெமபெ
ருமான்பாததிடையிலேனகெடுவீாகாளிடறேன்மினனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆகப்பதிகம் ௨௭.

திருஆரூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நீறறினையுநெறறிமேலிட்டாாபோலுநீஙகாமேவெள்ளெலும்பூ 5511
ண்டாாபோலுங, காறறினையுஙகடிதாககடாததாாபோலுங்கண்ணின்
மேற்கண்ணொன றுடையாாபோலுங, கூறறினையுங்குரைகழலா லு
தைததாாபோலுங ,கொல்புலிததோலாடைககுழகாபோலும், ஆற்றி
னையுஞ்செஞ்சடைமேலவைததாாபோலு ,மணியாரூாததிருமூலததான
னாரே. (௧)

பரியதோர்பாமபரைமேலார்த்தாாபோலும பாசுபதமபார்ததற்க 5512
ளித்தார்போலுங், கரியதோர்களிறறுரிவைபோாத்தார்போலுங காபா
லங்கட்டங்கக கொடியாாபோலும, பெரியதோாமலைவிலலா லெயதாா
போலும் பேர்நந்தியென்னும் பெயராாபோலும, அரியதோரரணங்க
ளட்டார்போலுமணியாரூாததிருமூலததானனாரே. (௨)

ஆணியுடையார்தோலுடையரெனபாாபோலுந் தூயதிருமேனிச்செ 5513
லவர்போலும, பிணியுடையவடியாரைததீாபபாாபோலும் பேசுவார்க
கெல்லாமபெரியார்போலு, மணியுடையமாநாகமார்பபாாபோலும்வா
சுகிமாநாணகவைததார்போலு, மணியுடையநெடுவீதிநடபயாாபோலு
மணியாரூர்த்திருமூலததானனாரே. (௩)

514 ஓட்டகத்தேயூணாகவுகந்தாரபோலு மோருருவாயத்தோன்றியுயர்ந்தார்போலு, நாட்டகத்தேநடைபலவுநவின்றாரபோலும் ஞானப்பெருங்கடற்கோர்நாதர்போலுங், காட்டகத்திலாடலுடையாரபோலுங் காமரங்கள்பாடித்திரிவாரபோலு, மாட்டகத்திலானைந்துகந்தாரபோலு மணியாரூர்த்திருமூலட்டானனாரே. (ச)

515 ஏனத்தினிளமருப்புப்பூண்டார்போலு மிமையவர்களேத்தவிருந்தாரபோலுங், கானக்கல்லாற்கீணிழலாரபோலுங் கடனஞ்சமுண்டிருண்டகண்டாரபோலும், வானத்திளமதிசேர்சடையாரபோலும் வான்கயிலைவெற்பினமகிழ்ந்தாரபோலு, மானத்துமுனனெழுத்தாயினாரபோலு மணியாரூர்த்திருமூலட்டானனாரே. (ரு)

516 காமனையுங்கரியாகக்காய்ந்தாரபோலுங் கடனஞ்சமுண்டிருண்டகண்டாரபோலுஞ், சோமனையுஞ்செஞ்சடைமேல வைத்தாரபோலுஞ் சொல்லாகிச்சொற்பொருளாயினாரபோலு, நாமனையுமவேதத்தாரமேபோலு நங்கையோர்பானமகிழ்ந்தநம்பாபோலு, மாமனையுந்திருமுடியாரமேபோலு மணியாரூர்த்திருமூலட்டானனாரே. (சு)

517 முடியாரமதியரவமவைத்தாரபோலு மூவுலகுந்தாமேயாயினாரபோலுஞ், செடியார்தலைகொண்டுழல்வாரபோலுஞ் செல்கதிதான்கண்டிவனாரபோலுங், கடியாரநஞ்சுண்டிருண்டகண்டாரபோலுங் கங்காளவேடக்கருத்தாரபோலும், அடியாரடிமையுகப்பாரபோலு மணியாரூர்த்திருமூலட்டானனாரே. (எ)

518 இந்திரனைத்தையினிதாகவீந்தாரபோலு மிமையவர்கள்வந்திறைஞ்சுமிறைவாரபோலுஞ், சுந்தரத்தபொடிதன்னைத்துதைந்தாரபோலுந் தூயதிருமேனித்தோனறலபோலு, மந்திரத்தைமனத்துள்ளேவைத்தார்போலு மாநாகநாணாகவார்த்தாரபோலு, மந்தரத்தேயணியார்ஞ்சுண்டார்போலு மணியாரூர்த்திருமூலட்டானனாரே. (அ)

519 பிண்டத்தைக்காக்கும்பிரானார்போலும் பிறவியிறவியிலாதார்போலு, முண்டத்துமுக்கண்ணுடையார்போலு முழுநீறுபூசுமுதல்வாபோலுங், கண்டத்திறையேகறுத்தார்போலுங் காளத்திகாரோணமேயாரபோலு, மண்டத்துக்கப்புறமாய்நின்றார்போலு மணியாரூர்த்திருமூலட்டானனாரே. (க)

ஒருகாலத்தொன்றாகிநின்றார்போலு மூழிபலகண்டிருந்தார்போலு
ம், பெருகாமேவெள்ளந் தவிர்த்தார்போலும் பிறப்பிடும்பைசாக்கா
டொன்றில்லார்போலும், உருகாதாருள்ளத்துறையார்போலுமுகப்பார்
மனத்தென்றுநீங்கார்போலும், அருகாகவந்தென்னையஞ்சலென்பாரணி
யாரூர்த்திருமூலத்தானனாரே. (கo)

நன்றாகநடைபலவுநவின்றார்போலும் ஞானப்பெருங்கடற்கோர்நா
தாபோலுங், கொன்றாகிக்கொன்றத்தொன்றுண்டார்போலுங் கோளரக்
கர்கோன்றலைகள்குறைத்தார்போலுஞ், சென்றார்திரிபுரங்களெய்தார்
போலுந் திசையனைத்துமாடனைத்துமானார்போலு, மன்றாகிலாயிரம்
பேரார்போலு மணியாரூர்த்திருமூலத்தானனாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆகப்பதிகம் . உஅ.

திருஆரூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

திருமணியைத்தித்திக்குந்தேனைப்பாலைத் தீங்கரும்பினின்சுவையை
த்தெளிந்ததேறற், குருமணியைக்குழன்மொந்தைதாளம்வீணை கொக்
கரையின்சச்சரியின் பாணியானைப், பருமணியைப்பவளத்தைப் பசும்
பொன்முத்தைப் பருப்பதத்திலருங்கலத்தைப்பாவந்தீர்க்கும், அருமணி
யையாரூரிலம்மான்றன்னை யறியாதடிநாயேனயர்த்தவாறே. (க)

பொன்னேபோற்றிருமேனியுடையான்றன்னைப் பொங்குவெண்
ணூலானைப்புனிதன்றன்னை, மின்னானைமின்னிடையாள்பாகன்றன்னை
வேழத்தினுரிவிரும்பிப் போர்த்தான்றன்னைத், தன்னானைத்தன்னொப்பா
ரில்லாதானைத் தத்துவனையுத்தமனைத்தழல்போன்மேனி, யன்னானையா
ரூரிலம்மான்றன்னையறியாதடிநாயேனயர்த்தவாறே. (உ)

ஏற்றானையேழுலகுமானான்றன்னை யேழ்கடலுமேழ்மலையுமானா
ன்றன்னைக், கூற்றானைக்கூற்றமுதைத்தான்றன்னைக் கொடுமழுவாள்
கொண்டதோர்கையான்றன்னைக், காற்றானைத்தீயானைநீருமாகிக் கடி
கமழும்புன்சடைமேற்கங்கைவெள்ள, ஆற்றானையாரூரிலம்மான்றன்
னையறியாதடிநாயேனயர்த்தவாறே. (ங)

முந்தியவல்வினைகடீர்ப்பான்றன்னை மூவாதமேனிமுக்கண்ணினா
னைச், சந்திரனும்வெங்கதிருமாயினானைச் சங்கரனைச்சங்கக்குழையான்
றன்னை, மந்திரமுமறைப்பொருளுமானான்றன்னை மறுமையுமிம்மையு
மானான்றன்னை, யந்தரனையாரூரிலம்மான்றன்னையறியாதடிநாயேனய
ர்த்தவாறே. (ச)

26 பிறநெறியாய்ப்பீடாகிப்பிஞ்ஞகனுமாய்ப் பித்தனாய்ப்பத்தர்மனத்தி
னுள்ளே, யுறநெறியாயோமமாய்யீமக்காட்டிலோரிபலவிடநட்டமாடி
னானைத், துறநெறியாய்த்தூபமாய்த்தோற்றமாகிநாற்றமாய் நன்மலர்
மேலுறைகின்றானை, அறநெறியையாரூரிலம்மான்றன்னையறியாதடிநா
யேனயர்த்தவாறே. (௫)

27 பழகியவல்வினைகள்பாறுவானைப் பசுபதியைப்பாவகனைப்பாவந்
தீர்க்குங், குழகனைக்கோளரவொன்றாட்டுவானைக் கொடுகொட்டி
கொண்டதோர்கையான்றன்னை, விழவனைவீரட்டமேவினானைவிண்
ணவர்களேத்திவிரும்புவானை, யழகனையாரூரிலம்மான்றன்னையறியா
தடிநாயேனயர்த்தவாறே. (௬)

28 சூளாமணிசேர்முடியான்றன்னைச் சுண்ணவெண்ணீறணிந்தசோ
தியானைக், கோளவாயரவமசைத்தான்றன்னைக் கோலப்புலித்தோலா
டைக்குழகன்றன்னை, நாள்வாயும்பத்தர்மனத்துளானை நம்பனைநக்கனை
முக்கண்ணனை, ஆளானையாரூரிலம்மான்றன்னையறியாதடிநாயேனயர்
த்தவாறே. (௭)

29 முத்தினைமணிதன்னைமாணிக்கத்தை மூவாதகற்பகத்தின்கொழுந்
துதன்னைக், கொத்தினைவயிரத்தைக்கொல்லேறூர்ந்து கோளரவொன்
றாட்டுங்குழகன்றன்னைப், பத்தனைப்பத்தர்மனத்துளானைப் பருதிபோ
ற்றிருமேனியுடையான்றன்னை, யத்தனையாரூரிலம்மான்றன்னையறி
யாதடிநாயேனயர்த்தவாறே. (௮)

30 பையாடரவங்கையேந்தினானைப் பருதிபோற்றிருமேனிப்பானீ
ற்றானை, மெய்யாடுதிருமேனிவிமலன்றன்னை நெற்றிமேனமற்றொருக
ண்ணிறைவித்தானைச், செய்யானைச்செழும்பவளத் திரளொப்பானைச்
செஞ்சடைமேல்வெண்டிங்கள்சோதினானை, மையாறுமேயானையா
ரூரானையறியாதடிநாயேனயர்த்தவாறே. (௯)

31 சீரார்முடிபத்துடையான்றன்னைத்தேசழியத்திருவிரலாற்சிதையநூ
க்கிப், பேரார்பெருமைகொடுமைகொடுத்தான்றன்னைப் பெண்ணிர
ண்டுமாணுமாய்நின்றான்றன்னைப், போரார்புரங்கள்புரளநூறும்புண்
ணியனைவெண்ணீறணிந்தான்றன்னை, யாரானையாரூரிலம்மான்றன்
னையறியாதடிநாயேனயர்த்தவாறே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

ஆகப்பதிகம் - உக.

திருஆரூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்

எம்பந்தவல்வினைநோய்தீர்த்திட்டான்கா ணேழ்கடலுமேழுலகு 5532
மாயினான்காண், வம்புநறுங்கொன்றையந்தார்மாலையான்காண் வளாம
திசேர்கண்ணியனகாணவானோர்வேண்ட, அம்பொனருனமூவெயிலு
மெரிசெய்தானகாணனலாடியானருர்மாடினான்காண, செம்பொன
செயமணிமாடத்திருவாரூரிற் றிருமூலத்தானத்தெஞ்செல்வன்றானே()
அக்குலாமரையினன்காண்டியார்க்கென்று மாரமுதாயண்ணிக்கு 5533
மையாறருன்காண், கொக்குலாம்பீலியொடுகொன்றைமாலை குளிர்ம
தியுங்கூரரவுநீருஞ்சென்னித், தொக்குலாஞ்சடையினன்காண்டொண்
டர்சொல்லுந் தூநெறிகாண்வானவர்கடுதிசெய்தேத்துர், திக்கெலாநி
றைந்தபுகழ்த்திருவாரூரிற் றிருமூலத்தானத்தெஞ்செல்வன்றானே. (உ)
நீரேறுசடைமுடியெம்மிமலன்றானகா ணெற்றிமேலொற்றைக்க 5534
ண்ணிறைவித்தான்காண், வாரேறுவனமுலையாள்பாகத்தானகாண் வ
ளர்மதிசேர்சடையான்காண்மாதேவன்காண், காரேறுமுகிலனையகண்
ட்த்தான்காண் கல்லாலின்கீழறங்கள்சொல்லினான்காண், சீரேறுமணி
மாடத்திருவாரூரிற் றிருமூலத்தானத்தெஞ்செல்வன்றானே. (ந)
கானேறுகளிற்றுரிவைப்போர்வையானகாண் கற்பகங்காண்கால 5535
னையன்றுதைசெய்தானகாண், ஊனேறுமுடைதலையிற் பலிகொள்வா
ன்காணுத்தமன்காணொற்றியூர்மேவினான்கா, ணானேறொன்றதுவேறு
மண்ணருன்கா ணாதித்தன்பல்லிறுத்தவாதிதான்காண், டேனேறுமலர்
ச்சோலைத்திருவாரூரிற் றிருமூலத்தானத்தெஞ்செல்வன்றானே. (ச)
பிறப்போடிறப்பென்றுமில்லாதான்காண் பெண்ணுருவோடா 5536
ணுருவமாயினான்காண், மறப்படுமென்சிந்தைமருணீக்கினான்காண்
வானவருமறியாதநெறிதந்தானகா, ணறப்படுபூமலர்தூபந்தீபநல்லநறு
ஞ்சாந்தங்கொண்டேத்திநாளுமவானோர், சிறப்போடுபூசிக்குந்திருவா
ரூரிற் றிருமூலத்தானத்தெஞ்செல்வன்றானே. (ரு)
சங்கரன்காண்சக்கரமாற்கருள்செய்தான்காண் தருணேந்துசேகர 5537
ன்காண்டலைவன்றான்கா, ணங்கமலத்தயன்சிரங்களைந்திலொன்றையறு
த்தவன்காணணிபொழில்சூழையாற்றான்கா, ணெங்கள்பெருமானகா
ணென்னிடர்கள்போகவருள்செய்யு மிறைவன்காணிமையோரேத்து
ஞ், செங்கமலவயல்புடைசூழ்திருவாரூரிற் றிருமூலத்தானத்தெஞ்செ
ல்வன்றானே. (சா)

நன்றருளித்தீதகற்றுநம்பிரான்காணான்மறையோடாறங்கமாயினா
ன்காண், மின்றிகழுஞ்சோதியன்காணாதிதான்காண் வெள்ளேறுநின்று
லவுகொடியினான்காண், டுன்றுபொழிற்கச்சியேகம்பன்றான்காண்சோ
ற்றுத்துறையான்காண் சோலைசூழ்ந்த, தென்றலார்மணங்கமழுந்திரு
வாரூரிற்றிருமூலத்தானத்தெஞ்செல்வன்றானே. (எ)

பொன்னலத்தநறுங்கொன்றைச்சடையினான்காண் புகலூரும்பூவ
ணமும்பொருந்தினான்காண், மின்னலத்தநுண்ணிடையாள்பாகத்தான்
காண் வேதியன்காண்வெண்புரிநூன்மார்பினான்காண், கொன்னலத்த
மூவிலைவேலேந்தினான்காண் கோலமாநீறணிந்தமேனியான்காண், செ
ந்நலத்தவயல்புடைசூழ்திருவாரூரிற் றிருமூலத்தானத்தெஞ் செல்வன்
றானே. (அ)

விண்டவர்தம்புரமூன்று மெரிசெய்தான்காண் வேலைவிடமுண்டி
ருண்டகண்டத்தான்காண், மண்டலத்திலொளிவளரவிளங்கினான்காண்
வாய்மூருமறைக்காடுமருவினான்காண், புண்டரிகக்கண்ணானும்பூவின்
மேலைப் புத்தேளுங்காணபரியபுராணன்றான்காண், டெண்டிரைநீர்
வயல்புடைசூழ்திருவாரூரிற் றிருமூலத்தானத்தெஞ்செல்வன்றானே. ()

செருவளருஞ்செங்கண்மாலேற்றினான்காண் டென்னானைக்காவா
ன்காண்டயில்வீழ, மருவலர்தம்புரமூன்றுமெரிசெய்தான்காண் வஞ்சக
ர்பாலணுகாதமைந்தன்றான்காண், ணருவரையையெடுத்தவன்றன்சிரங்
கள்பத்து மைந்நான்குதோளுநெரிந்தலறவன்று, திருவிரலாலடர்த்தவ
ன்காண் திருவாரூரிற்றிருமூலத்தானத்தெஞ்செல்வன்றானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆகப்பதிகம் ௬௦.

திருஆரூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

இடர்கெடுமாறெண்ணுதியேனெஞ்சேநீவா வீண்டொளிசேர்கங்
கைச்சடையாயென்றுஞ், சுடரொளியாயுள்விளங்கு சோதியென்றுந்
தூநீறுசேர்ந்திலங்குதோளாயென்றுங், கடல்விடமதுண்டிருண்டகண்
டாவென்றுங் கலைமான்மறியேந்துகையாவென்றும், அடல்விடையா
யாரமுதேயாதியென்றுமாரூராவென்றென்றேயலறாநில்லே. (௧)

செடியேறுதீவினைகடீரும்வண்ணஞ் சிந்தித்தேநெஞ்சமேதிண்ண
மாகப், பொடியேறுதிருமேனியுடையாயென்றும் புரந்தரன்றன்றோடு
ணித்தபுனிதாவென்று, மடியேனையாளாகக்கொண்டாயென்று மம்மா

னேயாரூரெம்மரசேயென்றுங், கடிநாறுபொழிற்கச்சிக்கம்பாவென்று
ங் கற்பகமேயென்றென்றேசதருநிலலே. (௨)

நிலைபெறுமாறெண்ணுதியே னெஞ்சேநீவா நித்தலுமெம்பிரானு
டையகோயிலபுககுப, புலாவதன்முன்னலகிடடுமெழுககுமிட்டுப பூமா
லைபுனைநதேததிபபுகழநதுபாடித, தலையாரககுமபிட்டுக கூததுமாடிச்
சஙகராசயபோறறிபோறறியெனறும, அலைபுனலசோசெஞசடையெ
மமாதியெனறு மாரூராவெனறெனறேயலருநிலலே (௩)

புண்ணியமுநனனெறியு மாவதெல்லா நெஞசமேயிதுகணடாய்
பொருநதககேணீ, நுண்ணியவெண்ணூல்கிடநதமாாபாவென்று நுந்
தாதவொண்சுடரேயென்றுநாளும், விண்ணியஙகுதேவாகளும வேத
நானகும விரைமலாமேலான்முகனுமாலுஙகூடி, யெண்ணரியதிருநாம
முடையாயெனறு மெழிலாரூராவெனறேயேததாநிலலே. (௪)

இழைத்தநாளெலலைகடபபதெனறு லிரவிறெடுநண்பகலுமேததி
வாழததிப, பிழைததெலாம்பொறுததருளசெய் பெரியோயெனறும்பி
ஞஞகனேமைஞஞவிலுஙகண்டாவெனறும, அழைததலறியடியே னுன்
னரணஙகண்டா யணியாரூரிடஙகொண்டவழகாவெனறுங, குழற்ச
டையெஙகோனெனறுஙகூறுநெஞசே குறறமிலலையெனமேனான்கூறி
னேனே. (௫)

நீபபரியபலபிறவிநீககுமவண்ண நினைத்திருநதேன்காணெஞ்சேசி
த்தமாகச, சேபபிரியாவெல்கொடியினானேயெனறுஞ சிவலோகநெறி
தந்தசிவனேயெனறும், பூபபிரியாநானமுகனும்புள்ளினமேலைப் புண்ட
ரிககண்ணனும்போற்றியென்னத, தீபபிழம்பாயநினறவனேசெல்வம
ல்கு திருவாரூராவென்றேசிநதிநெஞசே. (௬)

பறறிநின்றபாவங்கள்பாறறவேண்டிற் பரகதிககுச்செல்வதொருப
ரிசுவேண்டிற், சுற்றிநின்றசூழ்வினைகள்வீழ்ககவேண்டிற் சொலலுகே
னகேணெஞ்சேதுஞசாவண்ணம், உற்றவருமுறறுதுணையுநீயேயென்று
முன்னையலாலொருதெய்வமுள்கேனென்றும், புற்றரவககசசார்ததபுனி
தாவென்றும் பொழிலாரூராவென்றேபோறறுநில்லே. (௭)

மதிதருவாய்நெஞ்சமேயுஞ்சுபோக வழியாவதிதுகண்டாய்வானோ
ரக்கெல்லாம், அதிபதியேயாரமுதேயாதியென்று மம்மானேயாரூரெம்
மையாவென்றுந், துதிசெய்துதுன்றுமலர்கொண்டுதூவிச சூழுமவலஞ்
செய்துதொண்டுபாடிக், கதிர்மதிசேர்சென்னியனேகாலகாலா கற்பக
மேயென்றென்றேகதறுநில்லே. (௮)

50 பாசத்தைப்பற்றறுக்கலாகுநெஞ்சே பரஞ்சோதிபண்டரங்காபாவநாசா, தேசத்தொளிவிளக்கேதேவதேவே திருவாரூர்த்திருமூலத்தானாவென்று, நேசத்தைநீபெருக்கிநேர்நினைந்துள்கி நித்தலுஞ்சென்றடிமேலவீழ்ந்துநின்று, ஏசற்றுநின்றிமையோரேறேயென்றுமெம்பெருமானென்றென்றேயேத்தாநில்லே. (௯)

51 புலன்களைந்தாலாட்டுண்டுபோதுபோக்கிப் புறம்புறமேதிரியாதே போதுநெஞ்சே, சலங்கொள்சடைமுடியுடைய தலைவாவென்றுந் தக்கனசெய்பெருவேள்விதகர்த்தாயென்றும் இலங்கையர்கோன்சிரநெரித்தவிறைவாவென்றும் எழிலாரூரிடங்கொண்ட எந்தாயென்றும், நலங்கொளடியென்றலைமேலவைத்தாயென்று நாடோறு நவின்றேத்தாய் நன்மையாமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

ஆகப்பதிகம் • ௩௧

திருஆரூர்-போற்றித்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்

52 கற்றவர்களுண்ணுங்கனியேபோற்றி கழலடைந்தார்செல்லுங்கதியேபோற்றி, அற்றவர்கட்காரமுதமானாய்போற்றி யல்லலறுத்தடியேனையாண்டாய்போற்றி, மற்றொருவரொப்பில்லா மைந்தாபோற்றி வானவர்கள்போற்று மருந்தேபோற்றி, செற்றவர்தம்புரமெரித்தசிவனேபோற்றி திருமூலத்தானனே போற்றி போற்றி. (௧)

53 வங்கமலிகடனஞ்ச முண்டாய்போற்றி மதயானையீருரிவைபோர்த்தாய்போற்றி, கொங்கலருநறுங்கொன்றைத்தாராய்போற்றி கொல்புலித்தோலாடைக்குழகாபோற்றி, அங்கணனே யமரர்கடம் மிறைவாபோற்றி யாலமர்நீழலறஞ்சொன்னாய்போற்றி, செங்கனகத்தனிக்குன்றே சிவனேபோற்றி திருமூலத்தானனேபோற்றிபோற்றி. (௨)

54 மலையான்மடந்தைமணாளாபோற்றி மழவிடையாய் நின்பாதம்போற்றிபோற்றி, நிலையாகவென்னெஞ்சி னின்றாய்போற்றி நெற்றிமேலொற்றைக் கண்ணுடையாய்போற்றி, இலையார்ந்தமூவிலைவேலேந்திபோற்றி யேழ்கடலுமேழ்பொழிலுமானாய்போற்றி, சிலையாலன் றெயிலெரித்தசிவனேபோற்றி திருமூலத்தானனேபோற்றிபோற்றி. (௩)

55 பொன்னியலுமேனியனே போற்றிபோற்றி பூதப்படையுடையாய் போற்றிபோற்றி, மன்னியசீர்மறைநான்குமானாய்போற்றிம

றியேறுகையானே போற்றிபோற்றி, யுன்னுமவர்க்குண்மையனே
போற்றிபோற்றி யுலகுக்கொருவனேபோற்றிபோற்றி, சென்னி
மிசைவெண்பிறையாயபோற்றிபோற்றி திருமூலத்தானனே போற்
றிபோற்றி. (௪)

நஞ்சுடையகண்டனேபோற்றிபோற்றி நற்றவனேநின்பாதம்போ
ற்றிபோற்றி, வெஞ்சுடரோன்பல்லிறுத்தவேந்தேபோற்றி வெண்ம
திபங்கண்ணிவிகிர்தாபோற்றி, துஞ்சிருளிலாடலுகந்தாயபோற்றி தூ
நீற்மெய்யக்கணிந்தசோதிபோற்றி, செஞ்சடையாயநின்பாதம்போற்றி
போற்றிதிருமூலத்தானனேபோற்றிபோற்றி. (௫)

சங்கரனேநின்பாதம்போற்றிபோற்றி சதாசிவனேநின்பாதம்போற்
றிபோற்றி, பொங்கரவாநின்பாதம்போற்றிபோற்றிபுண்ணியனே
நின்பாதம்போற்றிபோற்றி, யங்கமலத்தயனோடுமாலுங்காணாவனலு
ருவாநின்பாதம்போற்றிபோற்றி, செங்கமலத்திருப்பாதம்போற்றி
போற்றி திருமூலத்தானனேபோற்றிபோற்றி. (௬)

வம்புலவுகொன்றைச்சடையாயபோற்றி வான்பிறையுமவ்வரவு
மணைத்தாயபோற்றி, கொம்பனையநுண்ணிடையாள் கூறுபோற்றி
குரைகழலாற்கூற்றுதைத்தகோவேபோற்றி, நம்புமவர்க்கரும்பொரு
ளேபோற்றிபோற்றி நால்வேதமாறங்கமானாயபோற்றி, செம்பொ
னேமரகதமேமணியேபோற்றி திருமூலத்தானனேபோற்றிபோற்றி.

உள்ளமாயுள்ளத்தேநின்றாயபோற்றி யுகப்பார்மனத்தென்றுநீங்கா
யபோற்றி, வள்ளலேபோற்றிமணாளாபோற்றி வானவர்கோன்றோ
ளிணைத்தமைந்தாபோற்றி, வெள்ளையேறேறுமவிகிர்தாபோற்றி மே
லோர்க்குமேலோர்க்குமேலாயபோற்றி, தெள்ளுநீர்க்கங்கைச்சடை
யாய்போற்றி திருமூலத்தானனேபோற்றிபோற்றி. (௮)

பூவார்ந்தசென்னிப்புனிதாபோற்றி புத்தேளிர்போற்றுமெய்ப்பொரு
ளேபோற்றி, தேவார்ந்ததேவர்க்குந்தேவேபோற்றி திருமாலுக்காழி
யளித்தாய்போற்றி, சாவாமேகாத்தென்னையாண்டாயபோற்றி சங்
கொத்தநீற்றெஞ்சதுராபோற்றி சேவார்ந்தவெல்கொடியாயபோற்றி
போற்றி திருமூலத்தானனேபோற்றிபோற்றி. (௯)

பிரமன்றன்சிரமரிந்தபெரியோய்போற்றி பெண்ணுருவோடாணு
ருவாய்நின்றாய்போற்றி, கரநான்குமுக்கண்ணுமுடையாயபோற்றிகா
தலிப்பார்க்காற்றவெளியாயபோற்றி, அருமந்ததேவர்க்கரசேபோற்

ழியன்றரக்கனைநானகுதோளுநதாளுஞ், சிரநெரிததசேவடியாயபோ
ற்றிபோற்றி திருமூலததானனேபோறறிபோறறி. (௧௦)

திருசசிறறமபலம.

ஆசபபதிகம் - ௬௨.

திருஆரூர் - அரநெறிததிருததாணடகம.

திருசசிறறமபலம.

பொருங்கைமதகரியுரிவைபபோர்வையானைப பூவணமுமவலஞ
சுழியும்பொருந்தினானைக, கருமபுதருகட்டியையின்னமிர்தைததேனைக
காண்பரியசெழுஞ்சுடரைககனககுன்றை, யிருங்கனகமதிலாரூர்மூ
லததானததெழுந்தருளியிருந்தானையிமையோரேததும, அருந்தவனைய
ரநெறியிலபபன்றனையடைந்தடியேனருவினைநோயறுததவாறே.(௧)

கறபகமமிருசுடருமாயினானைக் காளத்திகயிலாயமலையுளானை, விற
பயிலுமதனழிய விழிததானறனனை விசயனுககுவேடுவனாய நின்றான
றன்னைப், பொற்பமருமபொழிலாரூர்மூலததானம பொருந்தியவெம
பெருமானைப்பொருந்தார்சிந்தை, யற்புதனையரநெறியிலபபன்றனை
யடைந்தடியேனருவினைநோயறுததவாறே. (௨)

பாதியொருபெண்முடிமேறகங்கையானைப் பாசூர்பரங்குன்றமே
யான்றன்னை, வேதியனைததனனடியாரகெளியானறன்னைமெயஞ்ஞா
னவிளக்கானைவிரையோநாறும், போதியலும்பொழிலாரூர் மூலததான
ம் புற்றிடங்கொண்டிருந்தானைப போறறுவார்க, ளாதியனையரநெறி
யி லப்பன்றன்னையடைந்தடியேனருவினைநோயறுததவாறே. (௩)

நந்திபணிகொண்டருளுநம்பனறனனை நாகேசசரமிடமாநண்ணி
னானைச், சந்திமலரிட்டணிந்துவானோரேததுந்தததுவனைச்சககரமாற்கீ
ந்தான்றன்னை, யிந்துநுழைபொழிலாரூர்மூலததான மிடங்கொண்ட
பெருமானையிமையோர்போறறும், அநதணனையரநெறியிலபபன்ற
ன்னை யடைந்தடியேனருவினைநோயறுததவாறே. (௪)

சுடர்ப்பவளததிருமேனிவெண்ணீற்றானைச் சோதிலிங்கத்தூங்கா
னைமாடத்தானை, விடக்கிடுகாடிடமாகவுடையான்றன்னை மிக்கரண
மெரியூட்டவல்லான்றன்னை, மடற்குலவுபொழிலாரூர்மூலத்தானமன்
னியவெம்பெருமானைமதியார்வேள்வி, யடர்ததவனையரநெறியிலப்ப
ன்றன்னையடைந்தடியேனருவினைநோயறுததவாறே. (ரு)

தாயவனையெவ்வுயிர்க்குந்தன்னொப்பில்லாத் தகுதில்லைநடம்பயிலு
ந்தலைவன்றன்னை, மாயவனுமலரவனும்வானோரேததமறிகடனஞ்சுண்
டுகந்தமைந்தன்றன்னை, மேயவனைப்பொழிலாரூர் மூலத்தானம்விரும்

பியஎம்பெருமானையெல்லாமுன்னே, யாயவனையரநெறியிலப்பன்றன்
னை யடைந்தடியேனருவினைநோயறுத்தவாறே. (சு)

பொருளியல்நற்சொற்பதங்களாயினானைப்புகலூரும்புறம்பயமுமே
யான்றனனை, மருளியலுஞ்சிந்தையர்க்கு மருந்துதனனை மறைக்காடு
நாயககாமென்னினானை, யிருளியலநறபொழிலாரூர்மூலத்தானத்தினித
மரும்பெருமானையிமையோரேத்த, வருளியனையரநெறியிலப்பன்றன்
னையடைந்தடியேனருவினைநோயறுத்தவாறே. (எ)

காலனைககாலாற்காயந்தகடவுடனனைக்காரோணங்கிழிப்பாலேமே
யான்றன்னைப, பாலனுக்குப்பாற்கடலன் றீந்தான்றன்னைப்பணியுக
ந்தவடியார்கட்கினியான்றனனைச், சேலுகளும்வயலாரூர்மூலத்தானஞ்
சேர்ந்திருந்தபெருமானைபபவளமின்ற, ஆலவனையரநெறியிலப்பன்ற
ன்னையடைந்தடியேனருவினைநோயறுத்தவாறே. (அ)

ஒப்பொருவரில்லாதவொருவன்றன்னை யோதத்தூருமுறையூருமே
வினானை, வைப்பவனைமாணிக்கச்சோதியானைமாருதமுந்தீவெளிநீர்ம
ண்ணானைப், பெ (கூ)

பகலவன்றனபல்லுகுத்தபடிறன்றன்னைப் பராய்த்துறைபைஞ்ஞீ
லியிடமபாவித்தானை, யிகலவனையிராவணனையிடர்செய்தானை யேத
தாதார்மனத்தகத்துளிருளானானைப், புகழ்நிலவுபொழிலாரூர்மூலத்தா
னம் பொருந்தியஎம்பெருமானைப் போற்றாசிந்தை, யகலவனையரநெ
றியி லப்பனறன்னையடைந்தடியேனருவினைநோயறுத்தவாறே. (கo)

திருச்சிற்றம்பலம.

ஆசப்பதிகம் . கக,

திருஆரூர் - திருத்தாணடகம.

திருச்சிற்றம்பலம்.

ஒருவனையுலகேத்தநின்றநாளோ ரோருருவேமூவுருவமானநாளோ
கருவனைய்க்காலனைமுனகாயந்தநாளோ காமனையுங்கண்ணழலால்விழி
த்தநாளோ, மருவனும்மண்ணுமவிண்ணும தெரித்தநாளோ மானமறி
க்கையேந்தியோர்மாதோர்பாகந, திருவினுள்சேர்வதறகு முன்னோபின்
னோதிருவாரூர்கோயிலாகக்கொண்டநாளே. (க)

மலையார்பொற்பாவையொடு மகிழ்ந்தநாளோ வானவரைவலியமு
தமூட்டியநா, ணிலைபேறுபெறுவித்துநின்றநாளோ வினைப்பரியதழற்பி
ழம்பாய்நிமிர்ந்தநாளோ, அலைசாமேயலைகடனஞ்சுண்டநாளோ வமரர்க
ணம்புடைசூழ விருந்தநாளோ சிலையான்முப்புரமெரித்தமுன்னோபின்
னோதிருவாரூர்கோயிலாக்கொண்டநாளே, (உ)

74 பாடகஞ்சேர்மெல்லடிநற்பாவையாளுநீயும்போய்ப் பார்த்தனது பலத்தைக்காண்பான், வேடனாய்வில்வாங்கி யெய்தநாளோ விண்ணவர்க்குங்கண்ணவனாயினநாளோ, மாடமொடுமாளிகைகண்மல்குதில்லை மணிதிகழுமம்பலத்தே மன்னிக்கூத்தை, யாடுவான்புகுவதற்கு முன்னோபின்னோவணியாரூர்கோயிலாகக்கொண்டநாளே. (௩)

75 ஓங்கியுயர்ந்தெழுந்துநின்றநாளோ வோருருவம்போலேழுசமாயினநாளோ, தாங்கியசீர்த்தலையான வானோர்செய் தக்கன்றன்பெருவேள்விதகர்த்தநாளோ, நீங்கியநீர்த்தாமரையானெடுமாலோடுநில்லாயெம்பெருமானேயென்றங்கேத்தி, வாங்கிமதிவைப்பதற்குமுன்னோபின்னோ வளராரூர்கோயிலாகக்கொண்டநாளே. (௪)

76 பாலனாய்வளர்ந்திலாப்பான்மையானே பணிவார்கட்கங்கங்கேபற்றானானே, நீலமாமணிகண்டத்தெண்டோளானே நெருநலாயின்றாகி நாளையாகுஞ், சீலமேசிவலோகநெறியேயாகுஞ்சீர்மையேகூர்மையே குணமேநல்ல, கோலநீகொள்வதற்குமுன்னோபின்னோகுளிராரூர்கோயிலாகக்கொண்டநாளே. (௫)

77 திறம்பலவும்வழிகாட்டிச்செய்கைகாட்டிச்சிறியையாய்ப்பெரியையாய்நின்றநாளோ, மறம்பலவுமுடையாரைமயக்கந்தீர்த்து மாமுனிவர்க்கருள்செய்தங்கிருந்தநாளோ, பிறங்கியசீர்ப்பிரமன்றன்றலைகையேந்திப்பிச்சை யேற்றுண்டுழன்றுதிரிந்தநாளோ, அறம்பலவுமுரைப்பதற்குமுன்னோபின்னோவணியாரூர்கோயிலாகக்கொண்டநாளே. (௬)

78 நிலந்தரத்து நீண்டுருவமானநாளோ நிற்பனவுநடப்பனவுநீயேயாகிக், கலந்துரைக்கக்கற்பகமாய்நின்றநாளோ காரணத்தானாரணனைக்கற்பித்தன்று, வலஞ்சுருக்கி வல்லசுரர் மாண்டுவீழ வாசுகியைவாய்மடுத்துவானோருய்யச், சலந்தரனைக் கொல்வதற்குமுன்னோபின்னோ தண்ணாரூர் கோயிலாகக்கொண்டநாளே. (௭)

79 பாதத்தால்முயலகனைப்பாதுகாத்துப் பாரகத்தேபரஞ்சுடராய்நின்றநாளோ, கீதத்தைமிகப்பாடு மடியார்க்கென்றுங் கேடிலாவானுலகங்கொடுத்தநாளோ, பூதத்தான்பொருநீலிபுனிதன்மேவிப் பொய்யுரையாமறைநால்வர்விண்ணோர்க்கென்றும், வேதத்தைவிரிப்பதற்குமுன்னோபின்னோவிழவாரூர்கோயிலாக்கொண்டநாளே. (௮)

80 புகையெட்டும்போக்கெட்டும்புலன்களெட்டும் பூதலங்களவையெட்டும்பொழில்களெட்டுங், கலையெட்டுங்காப்பெட்டுங்காட்சியெட்டுங்

கழற்சேவடியடைந்தார்களைகண்டு, நகையெட்டு நாளெட்டு நன்மையெட்டு நிலஞ்சிறந்தார்மனத்தகத்துமலர்களெட்டு, திசையெட்டுந்தெரிப்பதற்குமுன்னோபின்னோதிருவாரூர்கோயிலாககொண்டநாளே. (௯)

ஈசனாயுலகேழுமலையுமாகி யிராவணனையீடழித்திட்டிருந்தநாளோ வாசமலர்மகிழ்தென்றலானநாளோ மதயானையுரிபோர்த்து மகிழ்ந்தநாளோ, தாதுமலர்த்தண்டிக்குக்கொடுத்தநாளோ சகரர்களைமறித்திட்டாட்கொண்டநாளோ, தேசமுமையறிவதற்கு முன்னோபின்னோ திருவாரூர்கோயிலாககொண்டநாளே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆகப்பதிகம் • ௧௪,

திருவெண்காட்டுத்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்

தூண்டுசுடர்மேனித்தூநீறாடிச் சூலங்கையேந்தியோர்சுழல்வாய்நாகம், பூண்டுபொறியரவங்காதிற்பெய்து பொற்சடைகளவைதாழப்புரிவெண்ணூலர், நீண்டுகிடந்திலங்குதிங்கட்சூடி நெடுந்தெருவேவந்தென்னெஞ்சங்கொண்டார், வேண்டுநடைநடக்கும்வெள்ளேறேறி வெண்காடுமேவியவிகிர்தனாரே. (௧)

பாதந்தனிப்பார்மேல்வைத்தபாதர்பாதாளமேழுருவப்பாய்ந்தபாதர், ஏதப்படாவண்ணநின்றபாதரேழுலகுமாய்நின்றவேகபாதர், ஓதத்தொலிமடங்கியூருண்டேறியொத்துலகமெல்லாமொடுங்கியபின், வேதத்தொலிகொண்டுவீணைகேட்பார்வெண்காடுமேவியவிகிர்தனாரே. ()

நென்னலையோரோடேந்திப்பிச்சைக்கென்றுவந்தார்க்குவந்தேனென்றில்லேபுக்கேன், அந்நிலையேநிற்கின்றாரையங்கொள்ளா ரருகேவருவார்போனோக்குகின்றார், நுந்நிலைமையேதோநும்மூர்தானேதோ வென்றேனுக்கொன்றாகச்சொல்லமாட்டார், மென்முலையார்கூடிவிரும்பியாடும் வெண்காடுமேவியவிகிர்தனாரே. (௩)

ஆகத்துமையடக்கியாறுசூடி ஐவாயரவசைத்தங்கானேறேறிப் போகம்பலவுடைத்தாய்ப்பூதஞ்சூழப் புலித்தோலுடையாப்புகுந்துநின்றார், பாகிடுவான்சென்றேனைப்பற்றிநோக்கி பரிசழித்தென்வளைகவர்ந்தார்பாவியேனை, மேகமுகிலுரிஞ்சுசோலைசூழ்ந்த வெண்காடுமேவியவிகிர்தனாரே. (௪)

கொள்ளைக்குழைக்காதிற்குண்டைப்பூதங் கொடுகொட்டிகொட்டிக்குனித்துப்பாட, வுள்ளங்கவர்ந்திட்டுப்போவார்போல வுழிதர்வர்நான்றெரியமாட்டேன்மீண்டேன், கள்ளவிழிவிழிப்பார் காணக்கண்ணுற

கண்ணுளார்போலேகரந்துநிற்பர், வெள்ளச்சடைமுடியர்வேதநாவர் வெண்காடுமேவியவிகிர்தனுரே. (௫)

67 தொட்டிலங்குசூலத்தர்மழுவாளேந்திச் சுடர்க்கொன்றைத்தாரணிந்துசுவைகள்பேசிப், பட்டிவெள்ளேறேறிப்பலியுங்கொள்ளார் பார்ப்பாரைப்பரிசழிப்பாரொருவரன்றால், கட்டிலங்குவெண்ணீற்றர்கனலப்பேசிக்கருத்தழித்துவளைகவர்ந்தார்காலைமாலை, விட்டிலங்குசடைமுடியர்வேதநாவர் வெண்காடுமேவியவிகிர்தனுரே. (௬)

68 பெண்பாலொருபாகம்பேணுவாழ்க்கைக் கோணுகம்பூண்பனவு நாணுஞ்சொல்லார், உண்பாருறங்குவாரொவ்வாநங்கா யுண்பதுநஞ்சன்றேலோவியுண்ணுர், பண்பாலவிர்சடையர்பற்றிநோக்கிப் பாலைப் பரிசழியப்பேசுகின்றுர், விண்பான்மதிசூடிவேதமோதிவெண்காடுமேவியவிகிர்தனுரே. (௭)

69 மருதங்களாயமொழிவார்மங்கையோடு வானவருமாலயனுங்கூடித் தங்கள், சுருதங்களாற்றுதித்துத்தூநீராட்டித் தோத்திரங்கள்பலசொல்லித்தூபங்காட்டிக், கருதுங்கொலெம்பெருமான்செயகுற்றேவலென்பாராகுவேண்டும்வரங்கொடுத்து, விகிர்தங்களாநடப்பர்வெள்ளேறேறிவெண்காடுமேவியவிகிர்தனுரே. (௮)

70 புள்ளானுநான்முகனும்புகழும்போந்துங்காணு பொரியழலாய்நின்றுன்றன்னை, யுள்ளானையொன்றல்லாவுருவினானையுலகுக்கொருவிளக்காய் நின்றுன்றன்னைக், கள்ளேந்துகொன்றைதூய்க்காலைமூன்றுமோவாமேநின்றுதவங்கள்செய்த, வெள்ளானை வேண்டும்வரங்கொடுப்பார் வெண்காடு மேவியவிகிர்தனுரே. (௯)

71 மாகுன்றெடுத்தான்றன்மைந்தனுமாவேழம்வில்லா மதித்தான் றன்னை. நோக்குந்துணைத்தேவ ரெல்லாநிற்க நொடிவரையினேவ விழித்தான்றன்னைக், காக்குங்கடலிலங்கைக்கோமான்றன்னைக்கதிர்முடியுங்கண்ணும்பிதுங்கவூன்றி, வீக்கந்தவிர்த்தவிரலார்போலும் வெண்காடுமேவியவிகிர்தனுரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆகப்பதிகம் - ௧௫.

திருப்பழனம் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

72 அலையார்கடனஞ்சமுண்டார்தாமே யமரர்களுக்கருள்செய்யுமாதிதாமே, கொலையாயகூற்றமுதைத்தார்தாமே கொல்வேங்கைத்தோலொன்றசைத்தார்தாமே, சிலையாற்புரமூன்றெரித்தார்தாமே தீநோய்களை

ங்தென்னையாண்டார்தாமே, பலிதேர்ந்தழகாயபண்பர்தாமே பழனநக ரெமபிரானார்தாமே. (க)

வெள்ளமொருசடைமே லேற்றார்தாமே மேலார்கண்மேலாகண்மேலார்தாமே, கள்ளங்கடிந்தென்னையாண்டார்தாமே கருததுடைய பூதப்படையார்தாமே, யுள்ளததுவகைதருவாராதாமே யுறுநோய்சிறுபிணிகடீர்ப்பார்தாமே, பள்ளபரவைநஞ்சுணடார்தாமே பழனநகரெமபிரானாதாமே. (உ)

இரவும்பகலுமாய்நின்றார்தாமே யெபபோதுமென்னெஞ்சத்துள்ளார்தாமே, யரவமரையிலசைததார்தாமே யனலாடியஙகைமறிததார்தாமே குரவஙகமழுஙகுற்றாலதாமே கோலஙகணமேன்மேலுகப்பார்தாமே பரவுமடியார்கடுபபாஙகர்தாமே பழனநகரெம்பிரானாதாமே. (௩)

மாறின்மதின்மூன்றுமெயதாராதாமே வரியரவஙகசசாகவார்ததாராதாமே, நீறுசேர்திருமேனிநிமலாதாமே நெறறிநெருபபுககண்வைததார்தாமே, யேறுகொடுஞ்சூலககையாராதாமே யென்பாபரணமணிநதார்தாமே, பாறுண்டலைபிற்பலியார்தாமே பழனநகரெமபிரானாதாமே.

சீரால்வணஙகடபடுவார்தாமே திசைககெல்லாநதேவாகிநின்றார்தாமே, யாராவமுதமுமானார்தாமே யளவிலபெருமையுடையார்தாமே நீரார்நியமமுடையாராதாமே நீளவரைவிலலாகவளைததாராதாமே பாரார்பரவபபடுவார்தாமே பழனநகரெம்பிரானாதாமே. (ரு)

காலனுயிர்வெளவவல்லார்தாமே கடிதோடும்வெள்ளைவிடையார்தாமே, கோலம்பலவுமுகபபார்தாமே கோணகநாணகபபூண்டார்தாமே, நீலமபொலிந்தமிடறறார்தாமே நீள்வரையினுசசியிருப்பார்தாமே பாலவிருததருமானார்தாமே பழனநகரெம்பிரானார்தாமே. (சு)

ஏய்ந்தவுமைநங்கைபங்கர்தாமே யேழூழிக்கப்புறமாய் நின்றார்தாமே யாய்ந்துமலர்தூவ நின்றார்தாமே யளவில்பெருமை யுடையார்தாமே தேய்ந்தபிறைசடைமேல் வைத்தார்தாமே தீவாயரவதனையார்த்தார்தாமே, பாய்ந்தபடர்கங்கையேற்றார்தாமே பழனநகரெம்பிரானாதாமே

ஓராதாருள்ளத்தினில்லார்தாமே யுள்ளூறுமன்பர்மனத்தார்தாமே பேராதென்சிந்தையிருந்தார்தாமே பிறக்கென்றுங்காட்சிக்கரியார்தாமே, ஊராருமூவுலகத்துள்ளார்தாமே யுலகைநடுங்காமற்காப்பார்தாமே பாரார்முழவத்திடையார்தாமே பழனநகரெம்பிரானார்தாமே. (அ)

நீண்டவர்க்கோர்நெருப்புருவமானார்தாமே நேரிழையையொரு பாகம்வைத்தார்தாமே, பூண்டரவைபபுலித்தோன்மேலார்த்தார்தாமே பொன்னிறத்தவெள்ளசசடையார்தாமே, யாண்டுலகேழனைத்தினையும வைத்தார்தாமே யங்கஙகேசிவமாகிநின்றார்தாமே, பாண்டவரிற்பார்த்தனுக்குப்பரிந்தார்தாமே பழனநகரெம்பிரானார்தாமே. (௯)

விடையேறிவெண்டுலகத் திருப்பார்தாமே விரிகதிரோன் சோற்றுத்துறையார்தாமே, புடைசூழதேவர் குழாத்தார்தாமே பூந்துருத்தி நெய்த்தானமேயார்தாமே, யடைவேபுனல்சூழையாற்றார்தாமேயரகக னையுமாற்ற லழித்தார்தாமே, படையாபபல்பூத முடையார்தாமே பழனநகரெம்பிரானார்தாமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆகப்பதிகம் ௩௬.

திருவையாறு - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆரார்திரிபுரங்கணீறுநோகக மனலாடியாரமுதே யென்றேனே, கூரார்மழுவாட் படையொன்றேந்திக் குறட்பூதபபல்படையா னென்றேனே, பேராயிரமுடையா யென்றேனே பிறைசூடும்பிஞ்ஞகனே யென்றேனே, யாராவமுதே யெனனையாறனே யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (௧)

தீவாயின்முப்புரங்கணீறுநோக்குந் தீர்த்தா புராணனே யென்றேனே, மூவாமதிசூடி யென்றேனே முதல்வாமுக்கண்ணனே யென்றேனே, யேவார்சிலையானே யென்றேனே யிடும்பைக்கடனின்றுமேறவாங்கி, யாவாவென்றருள்புரியுமையாறனே யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (௨)

அஞ்சுண்ணவண்ணனே யென்றேனே யடியார்கட்காரமுதே யென்றேனே, நஞ்சணிகண்டனேயென்றேனே நாவலர்கண்மறையே யென்றேனே நெஞ்சுணரவுள்புக்கிருந்தபோது நிறையுமமுதமே யென்றேனே, யஞ்சாதேயாள்வானே யையாறனே யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (௩)

தொல்லைத்தொடுகடலேயென்றேனே துலங்குமிளம்பிறையா னென்றேனே, யெல்லையிறந்தானேயென்றேனே யெழுநரம்பினின்னிசையாயென்றேனே, யல்லற்கடல்புக்கழுந்துவேனை வாங்கியரு

ள்செய்தாயென்றேனானே, யெல்லையாமையாறுவென்றேனானேயெ
ன்றென்றேநானரற்றி நைகின்றேனே. (௪)

இண்டைச்சடைமுடியாயென்றேனானே யிருசுடர்வானத்தாயெ
ன்றேனானே,தொண்டாற்றொழுப்படுவாயென்றேனானே துருத்திநெய்
த்தானத்தாயென்றேனானே, கண்டங்கறுத்தானேயென்றேனானே கன
லாகுங்கண்ணானேயென்றேனானே, யண்டத்துக்கப்பாலாமையாற
னேயென்றென்றே நானரற்றி நைகின்றேனே. (௫)

பற்றார்புரமெரித்தாயென்றேனானே பசுபதிபாண்டரங்காவென்
றேனானே,கற்றார்கனாவினாயென்றேனானே கடுவிடையொன்றூர்தியா
யென்றேனானே, பற்றானார்நெஞ்சுளாயென்றேனானே பார்த்தற்கருள்
செய்தாயென்றேனானே, யற்றார்க்கருள்செய்யுமையாறனே யென்றெ
ன்றேநானரற்றி நைகின்றேனே. (௬)

விண்ணோர்தலைவனே யென்றேனானே விளங்குமிளம்பிறையா
யென்றேனானே, யெண்ணாரெயிலெரித்தா யென்றேனானே யேகம்ப
மேயானே யென்றேனானே, பண்ணார்மறைபாடி யென்றேனானே ப
சுபதீபாணீற்றாயென்றேனானே, யண்ணாவையாறனேயென்றேனானே
யென்றென்றே நானரற்றி நைகின்றேனே. (௭)

அவனென்று நானுன்னையஞ்சாதேனை யல்லலறுப்பானேயென்றே
னானே, சிவனென்றுநானுன்னை யெல்லாஞ்சொல்லச்செல்வந்தருவா
னேயென்றேனானே, பவனாகியென்னுள்ளத் துள்ளேநின்று பண்டை
வினையறுப்பா யென்றேனானே, யவனென்றேயாதியே யையாறனே
யென்றென்றேநானரற்றி நைகின்றேனே. (௮)

கச்சியேகம்பனே யென்றேனானே கயிலாயாகாரோணா வென்றே
னானே, நிச்சன்மணாளனே யென்றேனானே நினைப்பார்மனத்துளா யெ
ன்றேனானே, யுச்சம்போதேறேறீ யென்றேனானே யுள்குவாருள்ளத்
தீயென்றேனானே, யச்சமபிணிதீர்க்குமையாறனே யென்றென்றே
நானரற்றி நைகின்றேனே. (௯)

வில்லாடிவேடனே யென்றேனானே வெண்ணீறு மெய்க்கணிந்
தாயென்றேனானே, சொல்லாயசூழலா யென்றேனானே சுலாவாய
தொன்னெறியே யென்றேனானே, யெல்லாமாயென்னுயிரே யென்

றேனானே யிலங்கையர்கோன் றோளிறுத்தா யென்றேனானே, யல்லல் வினைதீர்க்குமையாறனே யென்றென்றே நானரற்றி நைகின்றேனே.()

திருச்சிற்றம்பலம்.

ஆகப்பதிகம் ௧௭.

திருவையாறு - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்

ஓசையொலியெலாமானாய்நீயே யுலகுக்கொருவனாய் நின்றாய்நீயே வாசமலரெலாமானாய்நீயே மலையானமருகனாய நின்றாய்நீயே, பேசப் பெரிதுமினியாய்நீயே பிரானாடியென்மேல் வைத்தாய்நீயே, தேசவிளக்கெலாமானாய்நீயே திருவையாறகலாத செம்பொற்சோதீ. (௧)

நோக்கரியதிருமேனி யுடையாய்நீயே நோவாமே நோக்கருளவல்லாய்நீயே, காப்பரியவைம்புலனுங்காத்தாய்நீயே காமனையுங்கண்ணழலாற்காய்ந்தாய்நீயே, யார்ப்பரியமாநாக மார்த்தாய்நீயே யடியானென்றடியென்மேல்வைத்தாய்நீயே, தீர்ப்பரியவல்வினைநோய் தீர்ப்பாய்நீயே திருவையாறகலாத செம்பொற்சோதீ. (௨)

கனத்தகத்துக் கடுஞ்சுடராய்நின்றாய்நீயே கடல்வரைவானாகாயமானாய்நீயே, தனத்தகத்துத்தலைகலனாக் கொண்டாய்நீயே சார்ந்தாரைத்தகைந்தாளவல்லாய்நீயே, மனத்திருந்தகருத்தறிந்து முடிப்பாய்நீயே மலரசேவடியென்மேல் வைத்தாய்நீயே, சினத்திருந்ததிருநீல கண்டனீயே திருவையாறகலாத செம்பொற்சோதீ. (௩)

வானுற்றமாமலைகளானாய்நீயே வடகயிலைமன்னி யிருந்தாய்நீயே யூனுற்றவொளிமழுவாட் படையாய்நீயே யொளிமதியோடரவுபுனல் வைத்தாய்நீயே, ஆனுற்றவைந்துமமர்ந்தாய்நீயே யடியானென்றடியென்மேல் வைத்தாய்நீயே, தேனுற்றசொன்மடவாள்பங்கனீயே திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (௪)

பெண்ணாண் பிறப்பிலியாய் நின்றாய்நீயே பெரியார்கட்கெல்லாம் பெரியாய்நீயே, யுண்ணாவருநஞ்ச முண்டாய்நீயே யூழிமுதல்வனாய்நின்றாய்நீயே, கண்ணாயுலகெலாங்காத்தாய்நீயே கழற்சேவடி யென்மேல் வைத்தாய்நீயே, திண்ணார்மழுவாட்படையாய்நீயே திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (௫)

உற்றிருந்தவுணர்வெலாமானாய்நீயே யுற்றவர்க்கோர் சுற்றமாய் நின்றாய்நீயே, கற்றிருந்தகலைஞானமானாய்நீயே கற்றவர்க்கோர்கற்பகமாய்நின்றாய்நீயே, பெற்றிருந்ததாயவளினல்லாய்நீயே பிரானாயடியெ

ன்மேல்வைத்தாய்நீயே, செற்றிருந்ததிருநீலகண்டனீயே திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (௬)

எல்லாவுலகமுமானாய்நீயே யேகம்பமேவியிருந்தாய்நீயே, நல்லாரை நன்மையறிவாய்நீயே ஞானச்சுடர் விளக்காய்நின்றாய்நீயே, பொல்லாவினைகளறுப்பாய்நீயே புகழ்ச்சேவடி யென்மேல் வைத்தாய்நீயே, செல்வாய செல்வந்தருவாய்நீயே திருவையாறகலாத செம்பொற் சோதீ. (௭)

ஆவினிலைந்துமமர்ந்தாய்நீயே யளவில்பெருமை யுடையாய்நீயே, பூவினிறைற்றமாய்நின்றாய்நீயே போர்க்கோலங்கொண்டெயி லெய்தாய்நீயே, நாவினவுரையாய்நின்றாய்நீயே நண்ணியடியென்மேல் வைத்தாய்நீயே, தேவரறியாததேவனீயே திருவையாறகலாதசெம்பொற் சோதீ. (௮)

எண்டிசைக்குமொண்சுடராய்நின்றாய்நீயே யேகம்பமேயவிறைவனீயே, வண்டிசைக்கு நறுங்கொன்றைத்தாராய்நீயே வாராவுலகருள வல்லாய்நீயே, தொண்டிசைத்துன்னடிபரவ நின்றாய்நீயே தூமலர்ச் சேவடியென்மேல்வைத்தாய்நீயே, திணசிலைக்கோர்சரங்கூட்டவல்லாய்நீயே திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (௯)

விண்டார்புரமூன்றுமெய்தாய்நீயே விண்ணவர்க்குமேலாகிநின்றாய்நீயே, கண்டாரைக்கொல்லுநஞ்சுண்டாய்நீயே காலங்களூழியாய்நின்றாய்நீயே, தொண்டாயடியேனையாண்டாய்நீயே தூமலர்ச்சேவடி யென்மேல் வைத்தாய்நீயே, திண்டோள்விட்டெரியாடலுகந்தாய்நீயே திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (௧௦)

ஆருமறியாவிடத்தாய்நீயே யாகாயந்தேரூரவல்லாய்நீயே, பேரும் பெரியவிலங்கைவேந்தன் பெரியமுடிபத்திறுத்தாய்நீயே, யூரும்புரமூன்றுமட்டாய்நீயே யொண்டாமரையானுமாலுங்கூடித், தேருமடியென் மேல்வைத்தாய்நீயே திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

———— ஆகப்பதிகம் ௧௮.

திருமழபாடி - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நீறேறுதிருமேனியுடையான்கண்டாய் நெற்றிமேலொற்றைக்கண்ணிறைந்தான்கண்டாய், கூறாகவுமைபாகங்கொண்டான் கண்டாய் கொடியவிடமுண்டிருண்ட கண்டன்கண்டாய், யேறேறியெங்குந்திரி

வான்கண்டாயேழுலகு மேழ்மலையுமானான்கண்டாய, மாறானார்தம்ம ரணமட்டான்கண்டாய மழபாடிமன்னுமணாளனன்றே. (க)

24 கொக்கிறகுசென்னியுடையான்கண்டாய் கொல்லைவிடையேறுங் கூத்தன்கண்டா, யக்கரைமேலாடலுடையான்கண்டா யனலங்கையே ந்தியவாதிகண்டா, யக்கொடரவமணிந்தான்கண்டா யடியார்கட்காரமு தமானான்கண்டாய், மற்றிருந்தகங்கைச சடையான்கண்டாய் மழபா டிமன்னுமணாள்ன்றே. (உ)

25 நெற்றிததனிககணுடையான் கண்டாய நேரிழையோர் பாகமா யநின்றான்கண்டாய், பற்றிப்பாம்பாட்டும் படிறன்கண்டாய பலவூா பலிதேர்பரமன்கண்டாட, செற்றார்புரமூன்றுஞ் செற்றான்கண்டாட செழுமாமதி சென்னிவைததான்கண்டாய், மறறொருகுற்றமிலாதான கண்டாய் மழபாடிமன்னுமணாளன்றே. (ஙு)

26 அலையார்ந்த புனற்கங்கைச சடையான்கண்டா யண்டத்துச்கப் பாலாய் நின்றான்கண்டாய், கொலையானகூற்றங் குமைத்தான்கண் டாய் கொல்வேங்கைத் தோலொன்றுடுத்தான்கண்டாய, சிலையாற்றி ரிபுரங்கள் செற்றான்கண்டாய் செழுமாமதி சென்னிவைத்தான் கண் டாய், மலையார்மடந்தை மணாளன்கண்டாய் மழபாடிமன்னுமணாளன் றே. (ச)

27 உலந்தார்தமங்க மணிந்தான் கண்டா யுவகையோடின் னருள்கள் செய்தான்கண்டாய், நலந்திகழுங் கொன்றைச சடையான் கண்டாய் நால்வேதம் ஆறங்கமானான்கண்டா, யுலந்தார்தலைகலனுக் கொண்டா ன்கண்டா யும்பரார்தங்கள் பெருமான்கண்டாய், மலர்ந்தார்திருவடி யென்றலைமேல்வைத்த மழபாடி மன்னுமணாளன்றே. (ரு)

28 தாமரையான்றன்றலையைச் சாய்த்தான்கண்டாய் தகவுடையார்நெ ஞ்சிருக்கை கொண்டான்கண்டாய், பூமலரானேத்தும் புனிதன்கண் டாய் புணர்ச்சிப்பொருளாகி நின்றான்கண்டா, யேமருவுவெஞ்சிலை யொன்றேந்திகண்டா யிருளார்ந்தகண்டத்திறைவன்கண்டாய், மாம ருவுங்கலைகையிலேந்திகண்டாய் மழபாடிமன்னுமணாளன்றே. (சு)

29 நீராகிநெடுவரைகளானான்கண்டாய் நிழலாகிநீள்விசும்புமானான்க ண்டாய், பாராகிப்பவ்வமேழானான்கண்டாய் பகலாகிவானாகிநின்றான் கண்டா, பரோனுந்தன்னடியார்க்கன்பன்கண்டா யணுவாகியாதியாய்நி

ன்றான்கண்டாய், வாரார்ந்தவனமுலையாள்பங்கன்கண்டாய் மழபாடிமன்னுமணாளன்றானே. (௭)

பொன்னியலுந்திருமேனி யுடையான்கண்டாய் பூங்கொன்றைத்தாரொன்றணிந்தானகண்டாய், மின்னியலும்வார்சடையெம் பெருமான்கண்டாய் வேழத்தினுரிவிரும்பிப்போர்த்தான்கண்டாய், தன்னியல்பார்மற்றொருவரில்லானகண்டாய் தாங்கரியசிவந்தானாய் நின்றான்கண்டாய், மன்னியமங்கையோர்கூறனகண்டாய் மழபாடிமன்னுமணாளன்றானே. (௮)

ஆலாலமுண்டுகந்தவாதிகண்டாயடையலார்தம்புரமூன்றுமெய்தான்கண்டாய், காலாலக்காலனையுங்காய்ந்தானகண்டாய் கண்ணப்பர்க்கருள்செய்தகாளைகண்டாய், பாலாருமொழிமடவாள்பாகன்கண்டாய் பசுவேறிப்பலிதிரியும்பண்பன்கண்டாய், மாலாலுமறிவரியமைந்தன்கண்டாய் மழபாடிமன்னுமணாளன்றானே. (௯)

ஒருசுடராயுலகேழு மானான்கண்டா யோங்காரத்துட்பொருளாய் நின்றான்கண்டாய், விரிசுடராய் விளங்கொளியாய் நின்றான்கண்டாய் * விழவொலியும் வேதவொலியு மானான்கண்டா யிருசுடர்மீதோடா விலங்கைக்கோனை யடர்த்தவிருபதுதோளிறுத்தான்கண்டாய், மருசுடரின் மாணிக்கக்குன்றுகண்டாய்மழபாடிமன்னுமணாளன்றானே. (௰)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது. சுவாமிபெயர் வச்சிரத்தம்பேசுவரர். தேவியார் அழகாம்பிகையம்மை.

ஆகப்பதிகம் ௯௧.

திருமழபாடி - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அலையடுத்தபெருங்கடனஞ்சமுதாவுண்டு அமரர்கடந்தலைகாத்த வையர்செம்பொற், சிலையெடுத்துமாநாகநெருப்புக்கோத்துத்திரிபுரங்க ளெரியிட்டசெல்வர்போலு, நிலையடுத்தபசும்பொனனான் முத்தானீண்டநிழல்வயிரப்பலகையாற்குவையார்ந்துற்ற, மலையடுத்தமழபாடிவயிரத்தூணேயென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (௧)

அறைகலந்தகுழன்மொந்தைவீணையாழு மந்தரத்திற்கந்தருவமா சேர்த்த, முறைகலந்தமந்திரமு நீருங்கொண்டு வழிபட்டார்வானனைக் கொடுத்தியன்றே, கறைகலந்தபொழிற்கச்சிக்கம்பமேய கனவயிரத்திரடூணே கலிசூழ்மாட, மறைகலந்தமழபாடிவயிரத்தூணேயென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (௨)

* விழவொலியும் விண்ணொலியுமெனச் சிலபிரதியிலிருக்கின்றது.

35 உரங்கொடுக்குமிருண்மெய்யர் மூர்க்கர்பொல்லா வூத்தைவாயச்ச
மணர்தமையுறவாககொண்ட, பரவகெடுதிங்கடியேனையாண்டுகொ
ண்டபவளத்தின்றிரடேணைபசும்பொன்முதலே, புரங்கெடுதுப்பொல்
லாதகாமனுகம்பொடியாகவிழிததருளிப் புவியோர்க்கென்றும், வரங்
கொடுக்குமழபாடிவயிரதூணே யென்றென்றேநானரற்றி னைகின்
றேனே. (௩)

36 உலனிகந்தாணுறிகையர்குண்டர்பொல்லா வூத்தைவாயசசமண
ருறவாககொண்டு, ஞானகஞ்சேர்நதுள்ளவயிரதைநண்ணு நாயேனை
ப்பொருளாகவாண்டுகொண்ட, மீனகஞ்சேர்வெள்ளநீர் விதியாற்சூடும்
வேநதனைவிண்ணவாதம்பெருமான்மேக, வானகஞ்சேர்மழபாடிவயிர
ததூணே யென்றென்றேநானரற்றினைகின்றேனே. (௪)

37 சிரமேற்றநான்முகன்றன்றலையுமற்றைத திருமால்தன்செழுந்தலையு
ம்பொன்றசிநதி, யுரமேற்றவிரவிபற்றகர்த்துசசோம னொளிகலைகள
படவுழககியுயிளைகல்கி, நளையேறறவிடையேறிநாகம்பூண்ட நம்பி
யையேமறைநான்குமோலமிட்டு, வரமேற்குமழபாடிவயிரதூணே
யென்றென்றே நானரறறினைகினறேனே. (௫)

38 சினந்திருத்துஞ்சிறுபெரியார்குண்டர்தங்கள் செதுமதியார் தீவி
னைக்கேவிழுந்தேனறேடிப், புனந்திருத்தும்பொல்லாதபிண்டிபேணும
பொறியிலியேன்றனைப்பொருளாவாண்டுகொண்டு, தனந்திருததும
வர்திறத்தையொழியப்பாற்றித தயாமூலதன்மவழியெனக்குநல்கி, ம
னந்திருத்துமழபாடி வயிரத்தூணே யென்றென்றே நானரற்றினைகின்
றேனே. (௬)

39 சுழித்துணையாம்பிறவிவழித் துக்கநீக்குஞ் சுருள்சடையெம்பெரு
மானேதூயதென்னீ, ரிழிப்பரியபசுபாசப் பிறப்பைநீக்கு மென்று
னையே யென்னுடையபெம்மான்றம்மான், பழிப்பரியதிருமாலும்பிறு
ங்காணற்பரிதியேசுருதிமுடிக்கணியாய்வாய்த்த, வழித்துணையாமழபா
டிவயிரத்தூணே யென்றென்றே நானரற்றினைகின்றேனே. (எ-அ
க-ல)

திருச்சிற்றம்பலம்.

திருநெய்த்தானம் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வகையெலாமுடையாயுநீயேயென்றும் வான்கயிலைமேவினாய்நீயே யென்று, மிகையெலாமிக்காயு நீயேயென்றும் வெண்காடுமேவினாய் நீயேயென்றும், பகையெலாந்தீர்த்தாண்டாயநீயேயென்றும் பாசூரம ர்ந்தாயுநீயேயென்றுந், திகையெலாந்தொழச்செலவாய்நீயேயென்றுநின் றநெய்த்தானாவென் னெஞ்சுளாயே. (க)

ஆர்த்தவெனக்கன்பனீயேயென்று மாதிகயிலாய னீயேயென் றுங், கூத்தநடமாடிநீயேயென்றுங் கோடிகாமேயகுழகாவென்றும், பார்த்தற்கருள் செய்தாய்நீயேயென்றும் பழையனூர் மேவியபண்பா வென்றுந், தீர்த்தன்சிவலோக னீயேயென்று நின்றநெய்த்தானா வெ ன்னெஞ்சுளாயே. (உ)

அல்லாயப்பகலானாய நீயேயென்று மாதிகயிலாயனீயேயென் றுங, கலலாலமர்ந்தாயு நீயேயென்றுங் காளத்திகற்பகமு நீயேயென் றுஞ், சொல்லாய்ப்பொருளானாய நீயேயென்றுஞ் சோற்றுத்துறையு றைவாய நீயேயென்றுஞ், செல்வாய்த்திருவானாய்நீயேயென்று நின்ற நெய்த்தானாவென்னெஞ்சுளாயே. (௩)

மின்னேரிடைபங்கனீயேயென்றும் வெண்காடுமேவினாய் நீயே யென்றும், பொன்னேர்சடைமுடியாய் நீயேயென்றும் பூதகணநாத னீயேயென்றும், என்னாவிரதத்தாய்நீயேயென்று மேகம்பத்தென்னீ சனீயேயென்றுந் தெனனூராப்பதியுளாயநீயேயெனறு நினறநெய்த்தா னாவெனனெஞ்சுளாயே. (௪)

முந்தியிருந்தாயுநீயேயென்று முன்கயிலைமேவினாய நீயேயென்று நந்திக்கருள்செய்தாய நீயேயென்று நடமாடிநள்ளாற னீயேயென்றும் பந்திப்பரியாயு நீயேயென்றும் பைஞ்ஞீலிமேவினாய்நீயேயென்றுஞ், சி ந்திப்பரியாயுநீயேயென்று நின்றநெய்த்தானா வென்னெஞ்சுளாயே. (௫)

தக்காரடியார்க்கு நீயேயென்றுந் தலையார்கயிலாயனீயேயென்று முக்காரம்பூண்டாயுநீயேயென்று மாகூரிறானாரேன்றி நீயேயென் றும், புக்காயவேழுலகு நீயேயெனறும் புள்ளிருக்கும்வேளூராய் நீயே யென்றுந், தெக்காருமாகோணத் தானேயென்று நின்றநெய்த்தானா வென்னெஞ்சுளாயே. (௬)

புகழும்பெருமையாய் நீயேயென்றும் பூங்கயிலை மேவினாய் நீயே யென்று, மிகழுந்தலையேந்தி நீயேயென்று மிராமேச்சுரத்தின்பனீயே

யென்றும், அகழுமதிலுடையாய நீயேயென்று மாலவாய்மேவினாய் நீயேயென்றுந், திகழுமதிசூடிநீயேயென்று நின்றநெயததாணவென்னெஞ்சுளாயே. (௭)

வானவர்க்கு மூததிளையாய் நீயேயென்றும் வானக்கயிலாயனீயேயென்றுங், கானநடமாடிநீயேயென்றுங் கடவூரில் வீரட்டனீயேயென்று மூன்றூர்முடியறுத்தாய் நீயேயென்று மொற்றியூராரூரா நீயேயென்றுந், தேனையமுதானாய நீயேயென்று நின்றநெயததாண வென்னெஞ்சுளாயே. (௮)

தந்தைதாயில்லாதாய் நீயேயென்றுந் தலையார்கயிலாயனீயேயென்று, மெந்தாயெம்பிரானானாய் நீயேயென்று மேகம்பததென்னீசனீயேயென்று, முந்தியமுககணாய் நீயேயென்று மூவலூர்மேவினாய் நீயேயென்றுஞ், சிந்தையாய்தேனூராய நீயேயென்று நின்றநெய்த்தாண வென்னெஞ்சுளாயே. (௯)

மறித்தான்வலிசெற்றாய் நீயேயென்றும் வான்கயிலைமேவினாய்நீயேயென்றும், வெறுத்தாாபிறப்பறுப்பாய் நீயேயென்றும் வீழிமிழலையாய்நீயேயென்றும், அறததாயமுதீந்தாய நீயேயென்றும் யாவர்கருந்தாங்கொணாநஞ்சமுண்டு, பொறுததாய புலனைந்துநீயேயென்று நின்றநெயததாணவென்னெஞ்சுளாயே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆசப்பதிகம் - ௪௪.

திருநெய்த்தானம் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றமபலம.

மெய்த்தானத்தகம்படியுளைவர்நின்று வேண்டிற்றுக் குறைமுடித்துவினைக்குக்கூடாம், இத்தானததிருந்திங்ஙனுய்வானெண்ணு மிதனையொழியியம்பக்கே ளேழைநெஞ்சே, மைத்தானநீணயனிபங்கன்வங்கம் வருதிரைநீர்நஞ்சுண்டகண்டன்மேய, நெய்த்தானமன்னகரென்றேததிநின்று நினையுமாநினைக்காலுய்யலாமே. (௧)

ஈண்டாவிரும்பிறவி துறவாவாக்கை யிதுநீங்கலாம் விதியுண்டென்றுசொல்ல, வேண்டாவேநெஞ்சமே விளம்பக்கேணீ விண்ணவர்தம் பெருமானார் மண்ணிலென்னை, யாண்டானன்றருவரையாற் புரமூன்றெய்த வம்மானையரியயனுக்காணவண்ணனை, நீண்டானுறைதுறை நெய்த்தானமென்று நினையுமா நினைக்காலுய்யலாமே. (௨)

பரவிப்பலபலவுந்தேடியோடிப் பாழாங்குரம்பை யிடைக்கிடந்து வாளா, குரவிக்குடிவாழ்க்கை வாழவெண்ணிக் குலைகைதவிர்நெஞ்சே கூறக்கேணீ, யிரவிக்குலமுதலாவானோர்கூடி யெண்ணிறந்த கோடி யமரராய, நிரவிக்கரியவனைநெய்த்தானமென்று நினையுமாநினைந்தக்காலுய்யலாமே. (௩)

அலையார்வினைதிறஞ்சே ராக்கையுள்ளே யகப்பட்டுளாசையெனு ம்பாசந்தன்னுட், டலையாயகக்கடையாகும வாழவிலாழ்ந்து தளராதுநெஞ்சமேயஞ்சவேண்டா, விலையார்புனற்கொன்றை யெறிநீர்த்திங்களிருஞ்சடைமேல்வைத்துகந்தா னிமையோரேத்து, நிலையானுறைநெய்த்தானமென்று நினையுமாநினைந்தக்காலுய்யலாமே. (௪)

நினைத்தனையோர்பொறையிலா வுயிர்போங்கூட்டைப்பொருளென்றுமிகவுன்னிமதியாலிந்த, வனைத்துலகுமாளலாமென்றுபேசுமாங்காரந்தவிர்நெஞ்சேயமரர்க்காக, முனைத்துவருமதில்மூன்றும்பொன்றவன்று முடுகியவெஞ்சிலைவளைத்துச்செந்தீமூழ்க, நினைத்தபெருங்கருணையனைநெய்த்தானமென்று நினையுமாநினைந்தக்காலுய்யலாமே. (௫)

மிறைபடுமிவ்வுடல்வாழ்வை மெய்யென்றெண்ணி வினையிலே கிடந்தழுந்தி வியவேநெஞ்சே, குறைவுடையார்மனத்துளான் குமரன்றாதை கூத்தாடுங்குணமுடையான் கொலைவேற்கையா, னறைகழலுந் திருவடிமேற்சிலம்புமார்ப்ப வவனிதலம்பெயரவரு நட்டநின்ற, நிறைவுடையானிடமாநெய்த்தானமென்று நினையுமாநினைந்தக்காலுய்யலாமே. (௬)

பேசப்பொருளலாப்பிறவிதன்னைப் பெரிதென்றுசிறுமனத்தால் வேண்டியீண்டு, வாசக்குழன்மடவார் போகமென்னும் வலைப்பட்டுவீழாதே வருகநெஞ்சே, தூசக்கரியுரித்தான்றூநீற்றாடித் துதைந்திலங்குநூன்மார்பன்றொடரகில்லா, நீசர்க்கரியவனைநெய்த்தா... நினையுமாநினைந்தக்காலுய்யலாமே. (௭)

அஞ்சப்புலனிவற்றா லாட்டவாட்டுண் டருநோய்க்கிடமாயவுடலின்றன்மை, தஞ்சமெனக்கருதித்தாழேனெஞ்சே தாழக்கருதுதியேல் தன்னைச்சேர, வஞ்சமனத்தவர்கள் காணவொண்ணா மணிகண்டன் வானவர்தம்பிரானென்றேத்து, நெஞ்சர்க்கினியவனைநெய்த்தானமென்று நினையுமாநினைந்தக்காலுய்யலாமே. (௮)

பொருந்தாதவுடலகத்திற் புக்கவாவி போமாறறிந்தறிந்தேபுலவாழ்வுன்னி, யிருந்தாங்கிடர்ப்படநீவேண்டாநெஞ்சே யிமையவர்தம்பெருமானன்றுமையாளஞ்சக, கருந்தாண்மதகரியை வெருவச்சீறுங் கண்ணுதல்கண்டமராடிக கருதார்வேள்வி, நிரந்தரமாவினிதுறைநெய்த்தானமென்று நினையுமாநினைந்தககாலுயயலாமே. (௯)

உரிததன்றுனக்கிவ்வுடலின்றன்மை யுண்மையுரைத்தேன் விரதமெல்லாந், தரிததுந்தவமுயன்றும வாளாநெஞ்சே தம்மிடையிலில்லார்க்கொன்றல்லாக்கனன, வெரிததானனலுடையா னெண்டோளானையெம்பெருமானென்றேததா விலஙகைக்கோனை, நெரிததானைநெயத்தானமேவினானை நினையுமாநினைந்தககாலுயயலாமே. (௧௰)

திருச்சிற்றம்பலம்.

ஆகப்பதிகம். – ௭௨,

திருப்பூந்துருத்தி - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நில்லாதநீர்சடைமேனிறபித்தானை நினையாவென்னெஞ்சை நினைவித்தானைக், கல்லாதனவெல்லாங்கறபித்தானைக காணாதனவெல்லாங் காட்டினானைச, சொல்லாதனவெல்லாஞ்சொல்லியென்னைத தொடர்ந்திங்கடியேனையாளாககொண்டு, பொல்லாவென்னோய்தீர்த்தபுனிதன்றன்னைப் புண்ணியனைப் பூந்துருத்திக்கண்டேனே. (௧)

குற்றாலங்கோகரணமேவினானைக் கொடுங்கைக்கடுங்கூற்றைப்பாய்ந்தான்றன்னை, யுற்றாலநஞ்சுண்டொடுக்கினானை யுணராவென்னெஞ்சையுணர்வித்தானைப, பற்றாலின்கீழங்கிருந்தான்றன்னைப்பண்ணார்ந்தவீணைபயின்றான்றன்னைப, புற்றரவார்த்தபுனிதன்றன்னைப புண்ணியனைப்பூந்துருத்திக்கண்டேனே. (௨)

எனக்கென்றுமினியானை யெம்மான்றன்னை யெழிலாருமேகம்பமேயான்றன்னை, மனக்கென்றும்வருவானைவஞ்சர்நெஞ்சி னில்லானை நின்றியூர்மேயான்றன்னைத், தனக்கென்றுமடியேனையாளாக்கொண்ட சங்கரனைச்சங்கவார்குழையான்றன்னைப், புனக்கொன்றைத் தாரணிந்தபுனிதன்றன்னைப் பொய்யிலியைப்பூந்துருத்திக்கண்டேனே. (௩)

வெறியார்மலர்க்கொன்றை சூடினானை வெள்ளானைவந்திறைஞ்சும்வெண்காட்டானை, யறியாதடியேனகப்பட்டேனை யல்லற்கட்னின்றுமேறவாங்கி, நெறிதானிதுவென்றுகாட்டினானைநிச்சலிபிணிக டீர்ப்

பான்றன்னைப், பொறியாடரவார்த்தபுனிதனறன்னைப் பொயயிலி யைப்பூந்துருத்திக்கண்டேனே. (ச)

மிக்கானைவெண்ணீறு சண்ணித்தானை விண்டார்புரமூன்றும வேவநோக்கி, நக்கானைநான்மறைகள்பாடினானை நல்லார்கள்பேணிப பரவநின்ற, தக்கானைத்தண்டாமரைமேலண்ணறலை கொண்டுமாத்தி ராக்கனுலகமெல்லாம, புக்கானைப்புண்ணியனைப்புனிதனறன்னைப பொயயிலியைப்பூந்துருத்திக்கண்டேனே. (ரு)

ஆர்த்தானைவாசுகியையரைக்கோர்க்கச்சா வசைத்தானை யழகாய பொன்னூர்மேனிப், பூத்தானத்தான்முடியைப் பொருந்தாவண்ணம புணர்ந்தானைப்பூங்கணையானுடலம்வேவப், பார்த்தானைப்பரிந்தானைப பனிநீர்க்கங்கை படர்சடைமேற்பயின்றானைப் பதைப்பயானைப், போர்த் தானைப்புண்ணியனைப் புனிதன்றன்னைப் பொயயிலியைப்பூந்துருத் திக்கண்டேனே. (சா)

எரித்தானையெண்ணார் புரங்கண்மூன்று மின்மபபளவிற்பொடி யாகவெழிலார்கையா, லுரித்தானைமதகரியையுறப்பற்றி யுமையதனைக் கண்டஞ்சி நடுங்கக்கண்டு, சிரித்தானைச்சீரார்ந்தபூதஞ்சூழத் திருச் சடைமேற்றிங்களும்பாம்புநீரும், புரித்தானைப் புண்ணியனைப்புனிதன் றன்னைப் பொயயிலியைப்பூந்துருத்திக்கண்டேனே. (எ)

வைத்தானைவானோருலகமெல்லாம வந்திறைஞ்சி மலர்கொண்டு நின்றுபோற்றும், வித்தானைவேண்டிறன்றென்ன றீவானறன்னை விண்ண வாதம்பெருமானை வினைகள்போக, வுய்த்தானையொலிகங்கை சடை மேற்றங்கி யொளித்தானையொருபாகத் துமையோடாங்கே, பொய்த் தானைப்புண்ணியனைப் புனிதன்றன்னைப் பொயயிலியைப் பூந்துருத் திக்கண்டேனே. (அ)

மாடி, வடிவேயுமஙகைதனை வைததமைநதா மதிலானைககாவுளாயமா
காளத்தாய், படியேயுஙகடலிலஙகைக கோமானறன்னைப பருமுடியுந
திரடோளுமடர்த்துகந்த, வடியவர தடைநதடிமையாகபபெறறு
லலலகணடங் கொண்டடியேனெனசெயகேனே. (௧0)

திருசசிறறமபலம

ஆகப்பதிகம் — ௬௨.

திருவானைககா - திருததாணடகம.

திருசசிறறமபலம.

562 மூன்றானைத்தோல்போர்த்த மூர்த்திதன்னை மூவாதசிந்தையேமன
மேவர்க்கே, தன்னானையாப்பண்ணியேறினானைச் சார்தற்கரியானைத்

தாதைதன்னை, யென்னானைக் கன்றினையென் னீசன்றன்னை யெறிநீர்த் திரையுகளுங் காவிரிசூழ், தென்னானைக் காவானைத் தேனைப்பாலைச் செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. (௧)

மருந்தானை மந்திரிப்பார் மனத்துளானை வளர்மதியஞ்சடையானை மகிழ்ந்தென்னுள்ளத், திருந்தானை யிறப்பிலியைப் பிறப்பிலானை யிமையவர்தம்பெருமானை யுமையாளஞ்சக், கருந்தானமதகளிற்றி னுரிபோர்த்தானைக் கனமழுவாட்படையானைப் பலிகொண்டேறா, திரிந்தானைத் திருவானைக் காவுளானைச் செழுநீர்த்திரளைச் சென்றாடினேனே (௨)

முற்றாதவெண்டிங்கட் கண்ணியானை முந்நீர்நஞ்சுண்டிமையோர்க் கமுதநல்கு, முற்றானைப் பல்லுயிர்க்குந் துணையானானை யோங்காரத் துட்பொருளையுலகமெல்லாம், பெற்றானைப் பின்னிரக்கஞ் செய்வான்றன்னைப் பிரானென்று போற்றாதார் புரங்கண்மூன்றுஞ், செற்றானைத் திருவானைக்காவுளானைச் செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. (௩)

காரார்மணிமிடற்றெம் பெருமான்றன்னைக் காதில்வெண்குழையானைக் கமழ் பூங்கொன்றைத், தாரானைப் புலியதளி னுடையானைத் தானன்றி வேறொன்று மில்லாஞானப், பேரானை மணியார மார்பினானைப் பிஞ்ஞகனைத் தெய்வநான்மறைகள்பூண்ட, தேரானைத் திருவானைக்காவுளானைச் செழுநீர்த்திரளைச் சென்றாடினேனே (௪)

பொய்யேது மில்லாத மெய்யன்றன்னைப் புண்ணியனை நண்ணாதார்புரநீறாக, வெய்தானைச் செய்தவத்தின் மிக்கான்றன்னை யேறமரும்பெருமானை யிடமான்றங்கு, கையானைக் கங்காள வேடத்தானைக் கட்டங்கக் கொடியானைக் கனல்போன்மேனிச், செய்யானைத் திருவானைக் காவுளானைச் செழுநீர்த்திரளைச் சென்றாடினேனே. (௫)

கலையானைப் பாசுபதபாணியானைக் கனவயிரத்திரளானை மணிமாணிக்க, மலையானை யென்றலையி னுச்சியானை வார்தருபுன்சடையானை மயானமன்னு, நிலையானை வரியரவு நாணாக்கோத்து நினையாதார்புரமெரியவளைத்தமேருச், சிலையானைத் திருவானைக் காவுளானைச் செழுநீர்த்திரளைச் சென்றாடினேனே. (௬)

ஆதியனை யெறிமணியி னோசையானை யண்டத்தார்க்கறிவொண்ணாத்தப்பான்மிக்க, சோதியனைத் தூமறையின் பொருளான்றன்னைச் சுரும்பமருமலர்க்கொன்றைத் தொன்னூல்பூண்ட, வேதியனை யறமுரைத்த பட்டன்றன்னை விளங்குமலரயன்சிரங்க ளைந்திலொன்றைச், சேதியனைத் திருவானைக்காவுளானைச் செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே.

569 மகிழ்ந்தானைக்கச்சியேகம்பன்றன்னை மறவாதுகழனினைந்து வாழ்த்தியேத்திப், புகழ்ந்தாரைப்பொன்னுலகம்ஆளவிப்பானைப் பூதகணப்படையானைப் புறங்காட்டாட, லுகந்தானைப்பிச்சையே யிச்சிப்பானை யொண்பவளத்திரளை யென்னுள்ளத்துள்ளே, திகழ்ந்தானைத் திருவானைக்காவுளானைச் செழுநீர்த்திரளைச் சென்றாடினேனே. (அ)

570 நசையானைநால்வேதத்தப்பாலானை நல்குரவுந்தீப்பிணிநோய்காப்பான்றன்னை, யிசையானையெண்ணிறந்தகுணத்தான்றன்னை யிடைமருதுமீங்கோயுநீங்காதேற்றின், மிசையானைவிரிகடலுமண்ணுமவிண்ணுமிகுதீயும்புனலெறிகாற்றுமாகியெட்டுத், திசையானைத்திருவானைக்காவுளானைச்செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. (௯)

571 பார்த்தானைக்காமனுடல்பொடியாய்வீழப் பண்டயன்மாலிருவர்க்குமறியாவண்ணஞ், சீர்த்தானைச்செந்தழல்போலுருவினானைத் தேவர்கடம்பெருமானைத்திறமுன்னாதே, யார்த்தோடிமலையெடுத்தவிலங்கைவேந்தனாண்மையெல்லாங்கெடுத்தவன்றனிடர்ப்படாதே, தீர்த்தானைத் திருவானைக்காவுளானைச்செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆசபபதிகம் • ௧௧.

திருவேகம்பம் - திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

572 கூற்றுவன்காண்கூற்றுவனைக்குமைத்தகோன்காண் குவலயன்காண்குவலயத்தினீரானான்காண், காற்றவன்காண்கனலவன்காண்கலிக்குமின்காண் கனபவளச்செம்மேனிகலந்தவெள்ளை, நீற்றவன்காணிலாவூருஞ்சென்னியான்காணிறையாந்தபுனற்கங்கைநிமிர்சடைமே, லேற்றவன்காணெழிலாரும் பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (௧)

573 பரந்தவன்காண்பலவுயிர்களாகியெங்கும் பணிந்தெழுவார்பாவமுமவினையும்போக்க, துரந்தவன்காண்மேலரங்கணணியான்காண் டோற்றநிலைபிறுதிப் பொருளாயவந்த, மருந்தவன்காண்வையங்கள் பொறைதீர்ப்பான்காண் மலர்தூவிநினைந்தெழுவாருள்ளநீங்கா, திருந்தவன்காணெழிலாருமபொழிலார்கச்சி யேகம்பன்காணவனென் னெண்ணத்தானே. (௨)

574 நீற்றவன்காணீராகித்தீயானான்காணிறைமழுவுந்தமருகமுமெரியுங்கையிற், றேற்றவன்காண்டோற்றக்கேடில்லாதான்காண் டுணையிலிகாண்டுணையென்றுதொழுவாருள்ளம், போற்றவன்காண்புகழ்கட

ளைப்படைத்தான்ருன்காண் பொறியரவும்விரிசடைமேற்புனலுங்கங்கை, யேற்றவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (௩)

தூயவன்காணுலகிற்குத்தன்ஞெப்பில்லாத தத்துவன்காண்மலைமங்கைபங்காவெனபார, வாயவனகாண்வரும்பிறவிநோய்தீர்ப்பான்காண்வானவர்கருந்தானவாககுமணுளோாககுஞ், சேயவன்காணினைவார்க்குச்சித்தமாரத திருவடியேயுள்கிநினைந்தெழுவாருள்ள, மேயவன்காணெழிலாருமபொழிலாகச்சி யேகமபன்காணவனென்னெண்ணத்தானே. (௪)

அடுத்தானையுரித்தான்காண். (௫)

அழித்தவனகாணெயின்மூன்றுமயில்வாயம்பாலையாறுமிடைமருதுமாள்வான்ருன்காண், பழித்தவன்காணடையாதையடைவார்தங்கள்பறறவன்காண்புறறரவநாணினுன்காண், சுழித்தவன்காண் முடிககங்கையடியேபோற்றுந் தூயமாமுனிவர்ககாப்பார்மேனிற்க, விழித்தவன்காணெழிலாருமபொழிலாகச்சியேகமபனகாணவனென்னெண்ணத்தானே. (௬)

அசைந்தவன்காணடமாடிபபாடல்பேணியழல்வண்ணத்திலலடியுமுடியுந்தேடப், பசைந்தவனகாணபேயக்கணங்கள்பரவியேத்தும் பான்மையன்காண் பரவிநினைந்தெழுவார்தம்பாற, கசிந்தவன்காண் கரியினுரிபோாத்தான்ருன்காண் கடலிலவிடமுண்டமரர்ககமுதமீய,விசைந்தவன்காணெழிலாருமபொழிலாகச்சி யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (௭)

முடித்தவனகாண்வனகூறறைச சீறறத்தீயால வலியார்தம்புரமூன்றும்வேவச்சாபம, பிடித்தவனகாண பிஞ்ஞகனுமவேடத்தான்காண பிணையல்வெறிகமழகொன்றை யரவுசென்னி, முடித்தவன்காண் மூவிலைநல்வேலினுன்காண் முழங்கியுருமெனத்தோன்றுமழையாய்மின்னி, யிடித்தவன்காணெழிலாருமபொழிலாகச்சி யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (௮)

வருந்தான்காண்மனமுருகிநினையாதார்கரு வஞ்சன்காண் அஞ்செழுத்துநினைவார்க்கென்று, மருந்தவன்காண்வான்பிணிகடீரும்வண்ணம் வானகமுமண்ணகமுமற்றுமாகிப், பரந்தவன்காண்படர்சடையெட்டுடையான்ருன்காண் பங்கயத்தோன்றன்சிரத்தையேந்தியூரு, சிரந்தவ

ன்காணெழிலாரும்பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (கூ)

வெம்மானவுழுவையதளுரிபோர்த்தானகாண் வேதத்தின் பொருளானகாணென்றுமபி, விம்மாதினறழுவாரகட்களிபபானுனகாண விடையேறித்திரிவானகா ணடலுஞ்செயபூதத, தம்மான்காண கலிடஙக டாஙகினனகாண றபுதனகாண் சொறபதமுஙகடந்துநினற, எமமானகாணெழிலாரும பொழிலாரகசசி யேகமபனகாணவனெனனெண்ணத்தானே. (கo)

அறுத்தானகாணயனசிரத்தை யமராவேண்ட வாழகடலினஞ்சுண்டஙகணிநீரககஙகை, செறுத்தானகாணடேவாககுந்தேவன்றனகாணடியைசயனைத்துந்தொழுதேத்தககலைமானகையிற, பொறுத்தான்காணபுகலிடத்தைநலிபவந்து பொருகயிலையெடுத்தவனறன முடிதோளுலஞ, சிறுத்தானகாணெழிலாரும பொழிலாரகசசி யேகமபனகாணவனெனனெண்ணத்தானே. (கக)

திருச்சிற்றம்பலம்

ஆகபபதிகம் • ௪௪.

திருவேகம்பம் • திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

உரித்தவனகாணுரககளிறறை யுமையாளொலக வோஙகாரததொருவனகாணுணாமெயஞ்ஞானம, விரித்தவனகாண் விரித்தநாலவேதத்தானகாண் வியனுலகிறபலலுயிரைவிதியினாலே, தெரித்தவனகாண்சிலவுருவாயத்தோனறியெஙகுந்திரண்டவனகாண் டிரிபுரத்தை வேவவிலலா, லெரித்தவனகாணெழிலாரும பொழிலாரகசசி யேகமபனகாணவனென னெண்ணத்தானே. (க)

நேசன்காணேசாககுநேசநதனபா லிலலாதநெஞ்சத்து நீசாதமைக, கூசனகாண்கூசாதா நெஞ்சத்தஞ்சே குடிகொணடகுழகனகாணழகார்கொன்றை, வாசன்காண்மலைமஙகைபஙகனறன்காண் வானவாகளெப்பொழுதுமவணஙகியேத்து, மீசனகாணெழிலாருமபொழிலார்கச்சி யேகமபன்காணவனெனனெண்ணத்தானே. (உ)

பொறையவன்காண்பூமியேழ தாஙகியோஙகு புண்ணியன்காண்ணியபுண்டரீகபபோதின், மறையவன்காண் மறையவனைப்பயந்தோன்றன்காண் வார்சடைமாசுணமணிந்துவளருமபிள்ளைப், பிறையவன்காண்பிறைதிகழுமெயிற்றுப்பேழ்வாயப பேயோடஙகிடுகாட்டிலெல்லியாடு, மிறையவன்காணெழிலாரும் பொழிலார்கசசி யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (௩)

பாரவன்காண் விசும்பவன்காண் பவ்வந்தான்காண் பனிவரைகளிர
வினொடுபகலாயினான். சீரவன்காண் திசையவன்காண் திசைகளெட்டு
ஞ் செறிந்தவன்காண் சிறந்தடியார் சிந்தைசெய்யும், பேரவன்காண் பே
ராயிரங்களேத்தும் பெரியவன்காண் அரியவன்காண் பெற்றமூர்ந்த, ஏர
வன்காணெழிலாரும் பொழிலார் கச்சி யேகம்பன்காணவனென்னெ
ண்ணத்தானே. (௪)

பெருந்தவத்தெம்பிஞ்ஞகன்காண் பிறைசூடிகாண் பேதையேன்
வாதையுறுபிணியைத்தீர்க்கு, மருந்தவன்காண் மந்திரங்களாயினான்கா
ண்வானவர்கடம்மையாளுமாதேவன்கா, ணருந்தவத்தாளாயிழையா
ளுமையாள்பாக மமர்ந்தவன்காண் அமரர்கடம் சித்தத்த, விருந்தவ
ன்காணெழிலாரும்பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென்னெண்
ணத்தானே. (௫)

ஆய்ந்தவன்காணருமறையோடங்கமாறு மணிந்தவன்காணடர
வேலொடென்புமாமை, காய்ந்தவன்காண் கண்ணழலாற்காமனாகங்கனன்
றெழுந்தகாலனுடல்பொடியாய்வீழப், பாய்ந்தவன்காண் பண்டுபல ச
ருகாற்பந்தர்பயின்றநூற்சிலந்திக்குப்பாராளசெல்வ, மீந்தவன்காணெ
ழிலாரும் பொழிலார்கச்சி யேகம்பன் காணவனென் னெண்ணத்தா
னே. (௬)

உமையவளையொருபாகஞ்சேர்த்தினான்காணுகந்தொளிர்நீர்க்கங்கை
சடையொழுக்கினான்கா, ணிமையவடகயிலைச்செல்வன்றான்காணிலப
விக்குச்சென்றுழலூர்லகூர்த்தான்காண், சனமா மனையார் நினைக்குந்தலை
வனானான்காண் அத்துவன்காணுத்தமன்காண் டானேயாய், விமையவன
காணெழிலாரும் பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென்னெண்
ணத்தானே. (௭)

தொண்டுபடுதொண்டர்துயர்தீர்ப்பான்றான்காண் மேலாஞ்சேவ
டியிணையென்சோதியான்கா, ணுண்டுபடுவிடங்கண்டத்தொடுக்கினான்
காணொலிகடலிலமுதமரர்க்குதவினான்காண், வண்டுபடுமலர்க்கொன்
றை மாலையான்காண் வாண்மதியாய்நாண்மீனுமாயினான்கா, ணெண்
டிசையுமெழிலாரும்பொழிலார்கச்சியேகம்பன்காணவனென்னெண்
ணத்தானே. (௮)

முந்தைகாண் மூவரினுமுதலானான்காண் மூவிலைவேன்மூர்த்திகா
ண்முருகவேட்குத். தந்தைகாண் டண்கடமாமுகத்தினாற்குந் தாதைகா

ண்டாழ்ந்தடியேவணங்குவார்கருக். சிந்தைகாண்சிந்தாத சித்தத்தார்க் குச்சிவனவன்காண் செங்கண்மால் விடையொன்றேறு, மெந்தைகா ணெழிலாரும்பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென்னெண்ணத் தானே. (௯)

பொன்னிசையும்புரிசடையெம்புனிதன்றான்காண் பூதகணநாதன் காண்புலித்தோலாடை, தன்னிசையவைத்தவெழிலரவினான்காண் சங்கவெண்குழைக்காதிற சதிரன்றான்காண், மின்னிசையும வெள்ளெ யிற்றோன்வெகுண்டுவெற்பையெடுக்கவடியடாப்பமீண்டவன்றன்வா யி, வின்னிசைகேட்டிலங்கொளிவாளீந்தோன்கச்சியேகம்பன்காணவ னென்னெண்ணத்தானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

ஆசப்பதிகம் - ௬௫.

திருநாகேச்சரம் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்

தாயவனையாவார்க்குமேன்றுருக்குந்தலையவனைமலையவனையுலக மெல்லா, மாயவனைச்சேயவனையணியானறன்னை யழலவனைநிழலவ னையறியவொண்ணு, மாயவனைமறையவனை மறையோர்தங்கண் ம ந்திரனைத்தந்திரனை வளராநின்ற, தீயவனைத்திருநாகேச்சரத்துளானைச் சேராதார்நன்னெறிக்கட்சேராதாரே. (௧)

உரித்தானைமதவேழந்தன்னைமின்னு ரொளிமுடியெம்பெருமானை யுமையோர்பாகந், தரித்தானைத்தரியலார்புரமெய்தானைத்தன்னடை ந்தார்தம்வினைநோய்பாவமெல்லா, மரித்தானையாலதன்கீழிருந்துநால வர்க்கறம்பொருள்வீடின்பமாறங்கம்வேதந், தெரித்தானைத்திருநாகே ச்சரத்துளானைச்சேராதார்நன்னெறிக்கட்சேராதாரே. (௨)

காரானையுரிபோர்த்த கடவுடன்னைக் காதலித்துநினையாத கயவா நெஞ்சில், வாரானைமதிப்பவர்தம்மனத்துளானை மறறொருவாதன்னொ ப்பாரொப்பிலாத, வேரானையிமையவர்தம்பெருமான்றன்னை யியல்பா னியுலகெலா நிறைந்துமிக்க, சீரானைத்திருநாகேச்சரத்துளானைச் சேரா தார்நன்னெறிக்கட்சேராதாரே. (௩)

தலையானையெவ்வுலகுந் தானானானைத் தன்னுருவம் யாவர்க்குமறி யவொண்ணு, நிலையானைநேசர்க்கு நேசன்றன்னை நீள்வான முகட்டை னைத் தாங்கிநின்ற, மலையானைவரியரவு நாணாக்கோத்து வல்லசுரர் புர மூன்று மடியவெய்த, சிலையானைத்திருநாகேச்சரத்துளானைச் சேரா தார் நன்னெறிக்கட்சேராதாரே. (௪)

மெய்யானைத்தன்பக்கல் விரும்புவார்க்கு விரும்பாதவரும்பாவியவர்கட்கென்றும், பொய்யானைப்புறங்காட்டிலாடலானைப் பொன்பொலிந்தசடையானைப்பொடிகொள்பூதிப், பையானைப்பையரவமசைத்தானறன்னைப் பரந்தானைப்பவளமால்வரைபோன்மேனிச், செய்யானைத்திருநாகேச்சரத்துளானைச் சேராதார்நன்னெறிக்கட்சேராதாரே. (௫)

இறந்தானையறம்புரியாத்துரிசாத்தமமைத்த தோத்திரங்கள்பலசொல்லி வானோரேத்த, நிறைந்தானைநீர்நிலந்தீவெளிகாற்றாகி நிறைபனவு நட்பனவு மாயினானை, மறந்தானைத்தன்னினையாவஞ்சாதம்மையஞ்செழுத்தும்வாயநவிலவல்லோர்கனறாகு, சிறந்தானைத்திருநாகேச்சரத்துளானைச் சேராதாரநன்னெறிக்கட்சேராதாரே. (௬)

மறையானைமாலவிடையொன்றூர்தியானை மாலகடனஞ்சுண்டானைவானோர்தங்கள், இறையானையெனபிறவித்துயர்தீர்ப்பானையின்னமுதை மன்னியசீரோகம்பத்தி, லுறைவானையொருவருமீங்கறியாவண்ணமென்னுள்ளத்துள்ளேயொளித்துவைத்த, சிறையானைத்திருநாகேச்சரத்துளானைச் சேராதாரநன்னெறிக்கட்சேராதாரே. (௭)

எய்தானைப்புரமூன்று மிமைக்கும்போதி லிருவிசும்பில்வருபுனலைத்திருவார்சென்னிப, பெய்தானைப்பிறப்பிலியையறத்தினில்லாப பிரமன்றன்சிரமொன்றைக்கரமொன்றினாற், கொய்தானைக்கூத்தாடவல்லான்றன்னைக் குறியிலாக்கொடியேனையடியேனாக்கச், செய்தானைத்திருநாகேச்சரத்துளானைச் சேராதாரநன்னெறிக்கட்சேராதாரே (௮)

அளியானையண்ணிக்கு மானபாறன்னை வானபயிரையப்பயிரின்வாட்டந்தீர்க்கும், துளியானையயனமாலுந்தேடிக்காணாச் சுடரானைத்துரிசறத்தொண்டுபட்டார்க, கெளியானையாவர்க்கு மரியான்றன்னையின்கரும்பின்றனனுள்ளாலிருந்ததேறற, றெளியானைத்திருநாகேச்சரத்துளானைச் சேராதார்நன்னெறிக்கட்சேராதாரே. (௯)

சீர்த்தானையுலகேழுஞ் சிறந்துபோற்றச் சிறந்தானைநிறைந்தோங்கு செல்வன்றனனைப, பார்த்தானைமதனவேள பொடியாயவீழப் பனிமதியஞ்சடையானைப்புனிதன்றன்னை, யார்த்தோடிமலையெடுத்தவரக்கனஞ்சவருவிரலாலடர்த்தானையடைந்தோர்பாவந், தீர்த்தானைத்திருநாகேச்சரத்துளானைச் சேராதார்நன்னெறிக்கட்சேராதாரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

ஆகப்பதிகம் ௧, ௧௧.

திருக்கீழ்வேளூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்

ஆளானவடியவர்கட் கன்பன்றன்னை யானஞ்சுமாடியைநா னபயம் புக்க, தாளானைத் தன்னொப்பாரில்லாதானைச் சந்தனமுங் குங்குமமுஞ் சாந்துந் தோய்ந்த, தோளானைத் தோளாத முத்தொப்பானைத் தூவெளுத்த கோவணத்தைப் பரையிலார்த்த, கீளானைக் கீழ்வேளூராளுங்கோவைக் கேடிலியை நாடுமவர் கேடிலாரே. (௧)

சொற்பாவும் பொருடெரிந்து தூய்மை நோக்கித் தூங்காதார் மனத்திருளை வாங்காதானை, நற்பான்மை யறியாத நாயினேனை நன்னெறிக்கே செல்லும் வண்ணம் நல்கினானைப், பற்பாவு வாயாரப் பாடியாடிப் பணிந்தெழுந்து குறைந்தடைந்தார் பாவம் போக்கக், கற்பானைக் கீழ்வேளூராளுங்கோவைக் கேடிலியை நாடுமவர் கேடிலாரே. (௨)

அளைவாயி லரவசைத்த வழகன்றன்னை யாதரிக்கு மடியவர்கட் கன்பேயென்றும், விளைவானை மெய்ஞ்ஞானப் பொருளானானை வித்தகனை யெத்தனையும் பத்தர் பத்திக், குளைவானை யல்லாதார் குளையாதானை யுலப்பிலியை யுள்புக்கென் மனப்பாசக், களைவானைக் கீழ்வேளூராளுங்கோவைக் கேடிலியை நாடுமவர் கேடிலாரே (௩).

தாட்பாவு கமலமலர் தயங்குவானைத் தலையறுத்து மாவிரதந் தரித்தான்றன்னைக், கோட்பாவு நாளெல்லா மானான்றன்னைக் கொடுவினையேன் கொடுநரகக் குழியினின்றும், மீட்டானை வித்துருவின் கொத்தொப்பானை வேதியனை வேதத்தின் பொருள்கொள் வீணை, கேட்பானைக் கீழ்வேளூ ராளுங்கோவைக் கேடிலியை நாடுமவர் கேடிலாரே (௪)

நல்லானை நல்விடையொன் றூர்தியானை நால்வேதத் தாறங்க நணுகமாட்டாச், சொல்லானைச் சுடராமூன் றுமானான்றன்னைத் தொண்டாகிப் பணிவார்கட் கணியான்றன்னை, வில்லானை மெல்லியலோர் பங்கன்றன்னை மெய்யாராய் நினையாதார் வினைகட்டாக்கக், கல்லானைக் கீழ்வேளூராளுங்கோவைக் கேடிலியை நாடுமவர் கேடிலாரே. (௫)

சுழித்தானைக் கங்கைமலர் வன்னிகொன்றை தூமத்தம் வாளரவஞ் சூடினானை, யழித்தானை யரணங்கண் மூன்றும் வெவ்வ வாலால நஞ்சதனை யுண்டான்றன்னை, விழித்தானைக் காமனுடல் பொடியாய் வீழ மெல்லியலோர் பங்கனை முன் வேனிலானைக், கழித்தானைக் கீழ்வேளூராளுங் கோவைக் கேடிலியை நாடுமவர் கேடிலாரே. (௬)

உளரொளியை யுள்ளத்தி னுள்ளே நின்ற வோங்காரத் துட்பொருள தாயினானை, விளரொளியை விடுசுடர்க ளிரண்டு மொன்றும் விண்ணொடு மண்ணாகாச மாயினானை, வளரொளியை மரகதத்தி னுருவினானை வானவர்க ளெப்பொழுதும் வாழ்த்தி யேத்துங், கிளரொளியைக் கீழ்வேளூ ராளுங் கோவைக் கேடிலியை நாடுமவர் கேடிலாரே. (௭)

திடுத்தானைக் காலனைக் காலாற் பொன்றத் தன்னடைந்த மாணிக்கன் றருள்செய்தானை, யுடுத்தானைப் புலியதளோ டக்கும் பாம்பு முள்குவா ருள்ளத்தி னுள்ளான்றன்னை, மடுத்தானை யருநஞ்ச மிடற்றடங்கவா னோர்கள் கூடியவத் தக்கன் வேள்வி, கெடுத்தானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக் கேடிலியை நாடுமவர் கேடிலாரே. (அ)

மாண்டா ரெலும்பணிந்த வாழ்க்கையானை மயானத்திற் கூத்தனை வா ளரவோ டென்பு, பூண்டானைப் புறங்காட்டி லாடலானைப் போகாதென் னுள்புகுந் திடங்கொண்டானை, யாண்டானை யறிவரிய சிந்தையானை யசங்கையனை யமரர்க ளஞ்சங்கை செல்லாங், கீண்டானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக் கேடிலியை நாடுமவர் கேடிலாரே. (௯)

முறிப்பான் பேசிமலை யெடுத்தான் றோளு முடிதிறமுனைகை நரம்பை யெடுத்துப் பாடப், பறிப்பானைச் சிறப்பறிவாண் டீட்டினானைப் பாவியே னெஞ்சகத்தே பாதப் போது, பொறித்தானைப் புரமூன்று மெரிசெய்தானைப் பொய்யர்களைப் பொய்செய்து போதுபோக்கிக், கிறிப்பானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக் கேடிலியை நாடுமவர் கேடிலாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

இந்தத்தலம் சோழநாட்டிலுள்ளது

சுவாமிபெயர் - அக்ஷயலிங்கநாதர். தேவியார் - வனமுலைநாயகியம்மை.

ஆகப்பதிகம் - ௧௭.

திருமுதுகுன்றம் - திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

கருமணியைக் கனகத்தின் குன்றொப்பானைக் கருதுவார்க் காற்றவெளியான்றன்னைக், குருமணியைக் கோளரவ மாட்டுவானைக் கொல்வேங்கை யதளானைக் கோவணவன்றன்னை, யருமணியை யடைந்தவர்கட் கமுதொப்பானை யானஞ்சு மாடியை நான்பயம்புக்க, திருமணியைத் திருமுதுகுன்றுடையான்றன்னைத் தீவினையே னறியாதே திகைத்தவாறே. (௧)

காரொளிய கண்டத்தெங் கடவுடன்னைக் காபாலி கட்டங்க மேந்தினானைப், பாரொளியை விண்ணொளியைப் பாதாளத்தானைப் பான்மதியஞ் சூடியோர் பண்பன்றன்னைப், பேரொளியைப் பெண்பாகம் வைத

தான்றன்னைப் பேணுவார்தம்வினையைப்பேணிவாங்குஞ், சீரொளியைத்திருமுதுகுன்றுடையான்றன்னைத் தீவினையேனறியாதே திகைத்தவாறே. (௨)

எத்திசையும்வானவர்க டொழநின்றானை யேறூர்ந்தபெம்மானை யெம்மானென்று, பத்தனாய்ப்பணிந்தடியேன்றன்னைப்பன்னாட் பாமாலைபாடப்பயில்வித்தானை, முத்தினையென்மணியைமாணிக்கத்தைமுளைத்தெழுந்தசெம்பவளக்கொழுந்தொப்பானைச், சித்தனையென்றிருமுதுகுன்றுடையான்றன்னைத்தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (௩)

ஊன்கருவினுண்ணின்றசோதியானை யுத்தமனைப்பத்தர்மனங்குடிகொண்டானைக் கான்றிரிந்துகாண்டிபமேந்தினானைக் கார்மேகமிடற்றானைக்கனலைக்காற்றைத், தான்றெரிந்தங்கடியேனையாளாக்கொண்டு தன்னுடையதிருவடியென்றலைமேல்வைத்த, தீன்கரும்பைத்திருமுதுகுன்றுடையான்றன்னைத்தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (௪)

தக்கனதுபெருவேள்வி தகர்த்தானைத்தாமரையானுமுகுந்தனுந்தானேயாகி, மிக்கதொருதீவளிநீராகாயமாயமேலுலகுக்கப்பாலாயிப்பாலானை, யக்கினொடுமுத்தினையுமணிந்துதொண்டாக்கங்கங்கேயறுசமையமாகின்ற, திக்கினையென்றிருமுதுகுன்றுடையான்றன்னைத் தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (௫)

புகழொளியைப்புரமெரித்தபுனிதன்றன்னைப் பொன்பொதிந்தமேனியனைப்புராணன்றன்னை, விழவொலியும் விண்ணொலியுமானான்றன்னை வெண்காடுமேவிய விகிர்தன்றன்னைக், கழலொலியுங்கைவளையுமார்ப்பவார்ப்பக் கடைதோறுமிடுபிச்சைக்கென்றுசெல்லுந், திகழொளியைத்திருமுதுகுன்றுடையான்றன்னைத் தீவினையேனறியாதே திகைத்தவாறே. (௬)

போர்த்தானையின்னுரிதோல்பொங்கப்பொங்கப்புலியதளேயுடையாகத்திரிவான்றன்னைக், காத்தானையைம்புலனும் புரங்கண்மூன்றுங் காலனையுங்குரைகழலாற்காய்ந்தான்றன்னை, மாத்தாடிப்பத்தராய்வணங்குந்தொண்டர் வல்வினைவேரறும்வண்ணமருந்துமாகித், தீர்த்தானைத்திருமுதுகுன்றுடையான்றன்னைத் தீவினையேனறியாதே திகைத்தவாறே. (௭)

இறவாதேயாக்கைத்துறந்தான்றன்னைச் சோதிமுழுமுதலாய்நின்றான்றன்னைப், பிறவாதேயெவ்வுயிர்க்குந்தானேயாகிப் பெண்ணினோடாணுருவாய்நின்றான்றன்னை, மறவாதேதன்றிறமேவாழ்த்துந்தொ

ண்டர்மனத்தகத்தேயனவரதமன்னிநின்ற, திறலானைத்திருமுதுகுன்று
டையான்றன்னைத் தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (அ)

பொற்றூணைப்புலானாறு கபாலமேந்திப புவலோகமெல்லா மு
ழிதந்தானை, முற்றுருதவெண்டிங்கட்கண்ணியானை முழுமுதலாய்மூ
வுலகுமுடிவொன்றில்லாக, கற்றூணைககாளத்தி மலையான்றன்னைக்
கருதாதார்புரமூன்று மெரியவம்பர்ற, செற்றானைத்திருமுதுகுன்று
டையான்றன்னைத் தீவினையேனறியாதே திகைத்தவாறே. (கூ)

இகழ்ந்தானையிருபதுதோணெரியவூன்றி யெழுநரம்பினிசைபாட
வினிதுகேட்டுப,புகழ்ந்தானைப்பூந்துருத்திமேயான்றன்னைப் புண்ணிய
னை விண்ணவர்கணிதியந்தன்னை, மகிழ்ந்தானை மலைமகளோர்பாகம்
வைத்துவளர்மதியஞ்சடைவைத்து மாலோர்பாகந், திகழ்ந்தானைத்திரு
முதுகுன்றுடையான்றன்னைத் தீவினையேனறியாதேதிகைத்தவாறே.()

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் நடுநாட்டிலுள்ளது—இதுவே விருத்தாசலம்.

சுவாமிபெயர் - பழமலைநாதர் - தேவியார் - பெரியநாயகியம்மை.

ஆகபதிகம் - சஅ

திருப்பள்ளியின்முக்கூடல் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆராதவின்னமுதையம்மான்றன்னை யயனொடுமாலறியாத வாதி
யானைத், தாராருமலர்க்கொன்றைச் சடையான்றன்னைச் சங்கரனைத்
தன்னொப்பாரில்லாதானை, நீரானைக்காற்றானைத் தீயானானை நீள்விசும்
பாயாழ்கடலகளேழுஞ்சூழ்ந்த, பாரானைப்பள்ளியின்முக்கூடலானைப்
பயிலாதேபாழேநாளுழன்றவாறே (க)

விடையானைவிண்ணவர்களெண்ணத்தானை வேதியனைவெண்டி
ங்கள்சூடுஞ்சென்னிச், சடையானைச்சாமம்போல் கண்டத்தானைத்
தத்துவனைத் தன்னொப்பாரில்லாதானை, யடையாதார்மூம்மதிலுந்தீ
யின்மூழ்கவடுகணைகோத்தெய்தானையயில்கொள்சூலப், படையானைப்
பள்ளியின்முக்கூடலானைப்பயிலாதேபாழேநாளுழன்றவாறே. (உ)

பூதியனைப்பொன்வரையே போல்வான்றன்னைப் புரிசடைமேற்பு
னல்கரந்தபுனிதன்றன்னை, வேதியனைவெண்காடுமேயான்றன்னைவெ
ள்ளேற்றின்மேலானை விண்ணோர்க்கெல்லாம், ஆதியனையாதிரை
நன்னாளான்றன்னையம்மானைமைம்மேவு கண்ணியாளோர், பாகனை
ப்பள்ளியின்முக்கூடலானைப் பயிலாதேபாழேநாளுழன்றவாறே. (ங)

126 போர்த்தானையானையின்றோல் புரங்கண்மூன்றும் பொடியாகவெய்தானைப்புனிதன்றன்னை, வார்த்தாங்குவனமுலையாள்பாகன்றன்னை மறிகடலுணஞ்சுண்டுவானோரச்சந், தீர்த்தானைத்தென்றிசைக்கேகாமன்செல்லச் சிறிதளவிலவனுடலம் பொடியாவங்கே, பார்த்தானைப்பள்ளியின்முக்கூடலானைப்பயிலாதேபாழேநாளுழன்றவாறே. (௪)

127 அடைந்தார்தம்பாவங்களல்லலோயக் களருவினைகணல்குரவுசெல்லாவண்ணங், கடிந்தானைக்கார்முகில்போற்கண்டத்தானைக் கடுஞ்சினத்தோன்றன்னுடலைநேமியாலே, தடிந்தானைத்தன்னொப்பாரில்லாதானைத் தத்துவனையுத்தமனை நினைவார்நெஞ்சிற், படிந்தானைப்பள்ளியின் முக்கூடலானைப் பயிலாதேபாழேநாளுழன்றவாறே. (௫)

128 கரந்தானைச்செஞ்சடைமேற்கங்கைவெள்ளங் கனலாடுதிருமேனிக்கமலத்தோன்றன், சிரந்தாங்குகையானைத்தேவதேவைத் திகழொளியைத்தன்னடியேசிந்தைசெய்வார், வருந்தாமைக்காப்பானை மண்ணாய்விண்ணாய் மறிகடலாய்மால் விசும்பாய்மற்றுமாகிப், பரந்தானைப்பள்ளியின்முக்கூடலானைப்பயிலாதேபாழேநாளுழன்றவாறே. (௬)

129 நதியாருஞ்சடையானைநல்லூரானை நள்ளாற்றின்மேயானை நல்லத்தானை, மதுவாரும்பொழிலுடைசூழ் வாய்மூரானை மறைக்காட்டுமேயானை யாக்கூரானை, நிதியாளன்றோழனைநீரோனை நெய்த்தானமேயானையாரூரானும், பதியானைப்பள்ளியின் முக்கூடலானைப் பயிலாதேபாழேநாளுழன்றவாறே. (௭)

130 நற்றவனைநான்மறைகளாயினானை நல்லானைநணுகாதார்புரங்கண்மூன்றுஞ், செற்றவனைச்செஞ்சடைமேற்றிங்கள்சூடுந் திருவாரூர்த்திருமூலத்தானமேயக், கொற்றவனைக்கூரரவம் பூண்டான்றன்னைக் குறைந்தடைந்துதன்றிறமே கொண்டார்க்கென்றும், பற்றவனைப்பள்ளியின்முக்கூடலானைப் பயிலாதேபாழேநாளுழன்றவாறே. (௮)

131 ஊனவனையுடலவனையுயிரானானை யுலகேழுமானானையும்பர்கோவை, வானவனைமதிசூடும வளவியானை மலைமகண்முன்வராகத்தின்பின்பேசென்ற, கானவனைக்கயிலாயமலையுளானைக் கலந்துருகிநைவார்தந் நெஞ்சினுள்ளே, பானவனைப்பள்ளியின்முக்கூடலானைப் பயிலாதேபாழேநாளுழன்றவாறே. (௯)

132 தடுத்தானைத்தான்முனிந்து தன்றோள்கொட்டித் தடவரையையிருபதுதோட்டலையினாலு, மெடுத்தானைத்தாள்விரலான்மாளவூன்றி யெழு

நரம்பினிசைபாடலினிதுகேட்டுக், கொடுத்தானைப்பேரோடுங் கூர்
வாட்டன்னைக் குறைகழலாற்கூற்றுதைத்தானை மாளவன்று, படுத்தானைப்பள்
ளியின்முக்கூடலானைப் பயிலாதேபாழேநானுழன்றவாறே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

இந்தத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - முக்கோணேசுவரர். தேவியார் - மைம்மேவுங்கண்ணியம்மை.

ஆகப்பதிகம். ௬௬.

க்ஷேத்திரக்கோவை - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைச்சிற்றம்பலமுஞ் செம்பொன்பள்ளி தேவன்குடிசிராப்பள்
ளிதெங்கூர், கொல்லிக்குளிரறைப்பள்ளிகோவல்வீரட்டங்கோகரணங்
கோடிகாவு, முல்லைப்புறவம் முருகன்பூண்டி முழையூர்பழையாறைசத்தி
முற்றங், கல்லில்திகழ் சீரார்காளத்தியுங் கயிலாய நாதனையேகாண
லாமே. (௧)

ஆரூர்மூலத்தானமானைக்காவுமாக்கூரிற்றான்றோன்றிமாடமாவூர்
பேரூர்பிரமபுரம் பேராவூரும் பெருந்துறைகாம் பீலிபிடவூர்பேணுங்
கூரார்குறுக்கை வீரட்டானமுங்கோட்டூர் குடமூக்குக்கோழம்பமுங்
காரார்கழுக்குன்றுங்கானப்பேருங் கயிலாயநாதனையேகாணலாமே.

இடைமருதீங்கோயிராமேச்சுரமின்னம்பர் ஏரிடவையேமப்பே
றூர், சடைமுடிசாலைக்குடி தக்களூர்தலையாலங்காடு தலைச்சங்காடு
கொடுமுடிகுற்றாலங் கொள்ளம்பூதூர் கோத்திட்டை கோட்டாறு
கோட்டுக்காடு, கடைமுடிகானூர்கடம்பந்துறை கயிலாயநாதனையே
காணலாமே. (௩)

எச்சிலிளமரேமநல்லூரிலம்பையங் கோட்டூரிறையான்சேரி, யச்சி
றுபாக்கமளப்பூரம்பராவடுதண்டுறையழுந்தூராறைக, கச்சினங்கற்
குடிகச்சூராலக் கோயில்கரவீரங் காட்டுப்பள்ளி,கச்சிப்பலதளியுமேகம்
பத்துங் கயிலாயநாதனையேகாணலாமே. (௪)

கொடுங்கோளூரஞ்சைக்களஞ் செங்குன்றூர் கொங்கணங்குன்றி
யூர் குரக்குக்காவு, நெடுங்களநன்னிலநெல்லிக்காநின்றியூர்நீடூர்நியம
நல்லூர், இடும்பாவனமெழுமூரேழூர்தோழூரெறும்பியூரேராருமேம
கூடங், கடம்பையிளங்கோயிறன்னிலுள்ளுங் கயிலாயநாதனையே
காணலாமே. (௫)

மண்ணிப்படிக்கரை வாழ்கொளிபுத்தூர் வக்கரைமந்தாரம் வாரா
ணசி, வெண்ணிவிளத்தொட்டிவேள்விக்குடி விளமர்விராட்டபுரம்வே

ட்களத்தும், பெண்ணையருட்டுறை தண்பெண்ணாகடம் பிறம்பில்பெ
ரும்புலியூர் பெருவேளூருங், கண்ணைகளாககாறை கழிப்பாலையுங்
கயிலாயநாதனையேகாணலாமே. (௬)

739 வீழிமிழலைவெணகாடு வேஙகூர் வேதிகுடிவிசயமங்கை வியலூ
ராழியகததியான்பள்ளியண்ணாமலையாலங்காடு மரதைபபெரும், பாழி
பழனம்பனந்தாட் பாதாளபராயததுறைபைஞ்ஞீலிபனஙகாட்டூர்தண்
காழிகடவூகைககாரோணத்துங் கயிலாயநாதனையேகாணலாமே.(௭)

740 உஞ்சேனைமாகாளை மூறலோததூ ருருத்திரகோடிமறைககாட்டு
ள்ளூ, மஞசாரபொதியின மலைதஞசைவழுவூர் வீரட்டமாதானஙகே
தாரததும, வெஞசமாககூடல் மீயசசூரவை காவேதிசுரம்வீவிசுரம
வெற்றியூருங், கஞசனூர்கஞசாறு பஞசாககைியுங் கயிலாயநாதனை
யேகாணலாமே. (௮)

741 இண்டைசசரஞ்சேயஞலூாசெமபொனபள்ளி தேவூாசிரபுரஞ சிற
றேமஞ்சேறை, கொண்டீசசரஙகூந்தலூா கூழையூாகூடல் குறுகாவூ
ர்வெள்ளடைகுமரிகொஙகு, அண்டர்தொழுமதிகை வீரட்டானமை
யாறசோகந்தியாமாததூருங்,கண்டியூாவீரட்டஙகருகாவூருங் கயிலாய
நாதனையே காணலாமே. (௯)

742 நறையூரிற்சிததீசசரநளளாறு நாரையூாநாகேசசுர நல்லூர்நல்ல
துறையூர்சோறறுததுறைசூலமஙகை தோணிபுரந்துருததி சோமீசசர
முறையூர்கடலொறறியூரூறறததூ ரோமாமபுலியூரோரோடகததுங்
களையூர்கருபபறியல்கன்றூபபூருங் கயிலாயநாதனையேகாணலாமே.()

743 புலிவலம்புததூர் புகலூர்புன்கூா புறம்பயம்பூவணம் பொயகைநல்
லூர், வலிவலமாற்பேறு வாயமூர்வைகல் வலஞ்சுழிவாஞ்சியம் மரு
கல்வன்னி, நிலமலிநெயததானத தோடெததானதது நிலவுபெருஙகோ
யில் பலகண்டாற்றொண்டீர், கலிவலிமிகோனைக காலவிரலாற் செ
ற்றகயிலாயநாதனையே காணலாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

ஆகபபதிகம் ௭௦.

திருஅடைவு திருததாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

744 பொருப்பள்ளிவரைவில்லாப் புரமூன்றெய்து புலந்தழியச்சலந்
தரனைப்பிளந்தான்பொற்சக், கரபபள்ளிதிருககாட்டுப பள்ளிகள்ளா
மழ்கொல்லியறைப்பள்ளிகலவஞ்சாரற், சிரப்பள்ளி சிவபபள்ளிசெம்

பொன்பள்ளி, செழுநனிபள்ளி தவப்பள்ளி சீரார், பரப்பள்ளியென்றென்று பகர்வோரெல்லாம் பரலோகத்தினிதாகப் பாலிப்பாரே. (க)

காவிரியின்கரைக்கண்டி வீரட்டானங் கடவூர்வீரட்டானங் காமருசீரதிகை, மேவியவீரட்டானம் வழுவைவீரட்டம் வியன்பறியல்வீரட்டம் விடையூர்திக்கிடமாங், கோவலூர்வீரட்டங் குறுக்கைவீரட்டங் கோத்திட்டைக்குடி வீரட்டானமிவைகூறி, நாவினவின்றுரைப்பார்க்கு நணுகச்சென்றால் நமன்றமருஞ்சிவன்றமரென்றகல்வர்நன்கே. (உ)

நற்கொடிமேல்விடையுயர்த்த நம்பன் செம்பங்குடி நல்லக்குடிநளி நாட்டியத்தான்குடி, கற்குடிதென்களக்குடிசெங்காட்டங்குடி கருந்திட்டைக்குடிகடையக்குடிகாணுங்கால், விற்குடிவேள்விக்குடி நல்வேட்டக்குடிவேதிகுடிமாணிகுடிவிடைவாய்க்குடி, புறக்குடிமாகுடிதேவன் குடிநீலக்குடி புதுக்குடியும் போற்றவிடர் போகுமன்றே. (ங)

பிறையூருஞ்சடைமுடி யெம்பெருமானாரூர் பெரும்பற்றப் புலியூரும் பேராவூரு, நறையூருநல்லூரு நல்லாற்றூரு நாலூருஞ்சேற்றூரு நாரையூரு, முறையூருமோத்தூரு மூற்றத்தூரு மாம்பூரமாம்புலியூரொற்றியூரும், துறையூருந்துவையூருந்தோழூர்தானுந் துடையூருந் தொழவிடர்கள் தொடராவன்றே (ச)

பெருக்காறுசடைக்கணிந்த பெருமான்சேரும் பெருங்கோயிலெழுபதினோடெட்டுமற்றுங். கரக்கோயில்கடிபொழில்சூழ்ஞாழற்கோயில்கருப்பறியற்பொருப்பனைய கொகுடிக்கோயில், இருக்கோதிமறையவர்கள் வழிபட்டேத்துமிளங்கோயில்மணிக்கோயிலாலக்கோயில், திருக்கோயில்சிவனுறையுங்கோயில் சூழ்ந்துதாழ்ந்திறைஞ்சத்தீவினைகடீருமன்றே. (ரு)

மலையார்தமகளொடுமாதேவன்சேரு மறைக்காடு வண்பொழில்சூழ்தலைச்சங்காடு, தலையாலங்காடுதடங்கடல்சூழ்தண்சாய்க்காடு தள்ளருபுனற்கொள்ளிக்காடு, பலர்பாடும்பழையனூராலங்காடு பனங்காடு பாவையர்கள்பாவநீங்க, விலையாடுமவளைதிளைக்கக்குடையும்பொய்கை வெண்காடுமடையவினைவேருமன்றே (சு)

கடுவாயர்தமைநீக்கி யென்னையாட்கொள்கண்ணுதலோனண்ணுமிடமண்ணல்வாயில், நெடுவாயில்நிறைவயல்சூழ்நெய்தல்வாயில்நிகழ்முல்லைவாயிலொடுஞாழல்வாயில், மடுவார்தென்மதுரைநகராலவாயில்மறிகடல்சூழ்புனவாயில்மாடநீடு, குடவாயில்குணவாயிலானவெல்லாம் புகுவாரைக்கொடுவினைகள்கூடாவன்றே. (எ)

751 நாடகமாடிடநந்திகேச்சுரமாகாளேசசுர நாகேச்சுரநாகளேசசுரந
ங்கான, கோடீசசுரங்கொண்டீச்சுரந்திண்டீச்சுரங் குக்குடேசசுரமக்கீ
சசுரங்கூறுங்கா, லாடகேசசுரமகததீசசுரமயனீசசுர மத்தீசசுரஞ் சித
தீசசுரமந்தண்கான, லீடுதிரையிராமேசசுரமென்றென்றேததியிறைவ
னுறைசுரம்பலவுமியம்புவோமே. (அ)

752 கந்தமாதனங்கயிலைமலைகேதாரங்காளததி கழுக்குன்றங்கண்ணா
ரண்ணா, மந்தமாம்பொழிற்சாரல்வடபர்ப்பதமயேந்திரமாமலை நீலமேம
கூடம், விந்தமாமலைவேதஞ்சையமிக்க வியன்பொதியின்மலைமேருவு
தையமத்த, மிந்துசேகரனுறையுமலைகண்மற்று மேத்துவோமிடர்கெ
டநின்றேத்துவோமே. (௯)

753 நள்ளாறும்பழையாறுங்கோட்டாறறோடு நலந்திகழுநாலாறுந்திரு
வையாறு, தெள்ளாறும்வளைகுளமுந்தளிக்குளமுநல்லிடைக்குளமுந்
திருக்குளத்தோடஞ்சைக்களம, விள்ளாதநெடுங்களம்வேட்களநெல்லி
க்காகோலக்காவானைக்காவியன்கோடிகா, கள்ளார்ந்தகொன்றையானி
ன்றவாறுங்குளங்களங்காவெனவனைத்துங்கூறுவோமே (௰)

754 கயிலாயமலையெடுத்தான்கரங்களோடு சிரங்களுரநெரியக்கால்விர
லாற்செற்றோன, பயில்வாயபராய்த்துறைதென்பாலைத்துறை பண்
டெழுவாதவத்துறைவெண்டுறைபைம்பொழிற், குயிலாலந்துறை
சோற்றுத்துறை பூந்துறைபெருந்துறையுங்குரங்காடு துறையினோடு,
மயிலாடுதுறைகடம்பந்துறையாவடுதுறைமற்றுந் துறையனைத்தும்வ
ணங்குவோமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

ஆகப்பதிகம் . ௭௧.

திருவலஞ்சுழி - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

755 அலையார்புனற்கங்கைநங்கைகாண வம்பலத்திலருநட்டமாடிவே
டந், தொலையாதவென்றியார்நின்றியூரு நெடுங்களமுமேவி விடையை
மேல்கொண், டிலையார்படைகையிலேந்தியெங்கு மிமையவருமுமைய
வளு மிறைஞ்சியேத்த, மலையார்திரளருவிபொன்னிசூழ்ந்த வலஞ்சு
ழியேபுக்கிடமாமருவினாரே. (௧)

திருச்சிற்றம்பலம்.

ஆகப்பதிகம் ௭௨.

திருவலஞ்சுழியும் - திருக்கொட்டையூர்க்கோடீச்சரமும் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கருமணிபோற்கண்டத்தழகன்கண்டாய் கல்லானிழற்கீழிருந்தான் கண்டாய், பருமணிமாநாகம்பூண்டானகண்டாய் பவளக்குன்றன்ன பரமன்கண்டாய், வருமணிநீர்ப்பொன்னிவலஞ்சுழியான்கண்டாய் மாதேவன்கண்டாய் வரதன்கண்டாய், குருமணிபோலழகமருங்கொட்டையூரிற்கோடீச்சரத்துறையுங்கோமான்றானே. (௧)

கலைக்கன்றுதங்குகரத்தான்கண்டாய் கலைபயில்வோர்ஞானக்கண்ணன்கண்டா, யலைக்கங்கைசெஞ்சடைமே லேற்றான்கண்டா யண்டகபாலத்தப்பாலானகண்டாய், மலைபபண்டங்கொண்டுவருநீர்ப்பொன்னிவலஞ்சுழியின்மேவியமைந்தன்கண்டாய், குலைத்தெங்கஞ்சோலைசூழ்கொட்டையூரிற்கோடீச்சரத்துறையுங்கோமான்றானே. (௨)

செந்தாமரைப்போதணிந்தானகண்டாய்சிவன்கண்டாய்தேவர்பெருமான்கண்டாய், பந்தாடுமெல்விரலாள்பாகனகண்டாய் பாலோடுநெய்தயிர்தேனாடிகண்டாய், மந்தாரமுந்திவருநீர்பபொன்னிவலஞ்சுழியின் மன்னுமணாளனகண்டாய், கொந்தார்பொழிலபுடைசூழகொட்டையூரிற்கோடீச்சரத்துறையுங்கோமானறானே. (௩)

பொடியாடுமேனிபபுனிதனகண்டாய் புட்பாகறகாழிகொடுத்தான்கண்டா, யடியார்கடுமுழககேறாநதான்கண்டாயெண்டிசைக்கும் விளக்காகிநின்றான்கண்டாய், மடலார்திரைபுரளுங்காவிரிவாய வலஞ்சுழியின்மேவியமைந்தனகண்டாய, கொடியாடுநெடுமாடகொட்டையூரிற் கோடீச்சரத்துறையுங்கோமான்றானே. (௪)

அக்கரவமரைக்கசைத்தவம்மான்கண்டா யருமறைகளாறங்கமானான்கண்டாய், தக்கனதுபெருவேள்விதகர்த்தான்கண்டாயசதாசிவன் காணசலந்தரனைப் பிளந்தான்கண்டாய, மைகொண்மயிற்றழைகொண்டு வருநீர்ப்பொன்னி வலஞ்சுழியான்கண்டாயமழுவன்கண்டாய், கொக்கமரும்வயல்புடைசூழ் கொட்டையூரிற் கோடீச்சரத்துறையுங் கோமான்றானே. (௫)

சண்டனைநல்லண்டர்தொழச்செய்தான்கண்டாய் 'சதாசிவன்கண்டாய்சங்கரன்றான்கண்டாய, தொண்டாபலர்தொழுதேத்துங்கழலான்கண்டாய் சுடரொளியாய்த்தொடர்வரிதாய் நின்றான்கண்டாய், மண்டு புனற்பொன்னிவலஞ்சுழியான்கண்டாய்மாமுனிவர்தாமுடைய

மருந்துகண்டாய, கொண்டறவழ கொடிபாடக கொட்டையூரிற்
கோடீசசரததுறையுங்கோமான்றனே. (௮)

962 அணைவரியான்கண்டாயமலன்கண்டா யவிநாசிகண்டாயண்டத
தான்கண்டாய், பணமணிமாநாகமுடையானகண்டாய பண்டரஙகன்
கண்டாய பகவனகண்டாய, மணலவருநீரபொனனிவலஞ்சுழியான்
கண்டாய மாதவறருநானமுகறகும வரதனகணடாய.குணமுடைநல்
லடியாரவாழகொடடையூரிற கோடீசசரததுறையுஙகோமான்றனே.

963 விளைகமழுமலாகொனறைததாரானகணடாய வேதஙகடொழுநி
ன்றநாதன்கண்டா, யளையதனிறபுளளியதளுடையானகண்டாயழலா
டிகண்டாயழகனகண்டாய, வருதிரைநீரபொன்னிவலஞசுழியான்க
ண்டாய வஞசமனததவாககரியமைமாதஙகண்டாய, குரவமருமபொழி
ல்புடைசூழ கொடடையூரிறகோடீசசரததுறையுஙகோமானறனே. ()

964 துளஙகிளருநதாமரையாதனததான கணடாயதசரதனறனமகனைசை
வுதவிர்ததான்கணடா, யிளம்பிறையுமுதிாசடைமேலவைததான்கண்
டாயெட்டெடடிருஙகலையுமானனகணடாய, வளஙகிளாநீரபொன்
னிவலஞ்சுழியானகணடாய மாமுனிகடொழுதெழுபொறகழலானக
ண்டாய், குளஙகிளாசெஙகுவளைகிளாகொடடையூரிற கோடீசசரதது
றையுஙகோமானறனே. (௯)

965 விண்டாாபுரமூன்றெரிததான்கண்டாய விலஙகலிலவல்லரககனு
டலடர்த்தான்கண்டாய, தண்டாமரையானுமாலுநதேடததழற்பிழம
பாய்நீணடகழலான்கண்டாய, வணடாாபூஞசோலைவலஞசுழியானக
ண்டாயமாதேவன்கணடாயமறையோடஙகங, கொண்டாடுவேதியா
வாழ்கொடடையூரிற கோடீசசரததுறையுஙகோமானறனே. (௧௦)

திருச்சிற்றம்பலம.

இது சோழநாட்டிலுள்ளது. சுவாமிபெயர்-சுந்தரகோடீசுவரர். தேவியார்-பந்தாடுநாயகியம்மை.

ஆகப்பதிகம் ௭௧.

திருநாரையூர் - திருத்தாண்டகம.

திருச்சிற்றம்பலம.

966 சொல்லானைபபொருளானைச்சுருதியானைச சுடராழிநெடுமாலுக்
கருள்செய்தானை, யல்லானைப்பகலானை யரியான்றன்னை யடியார்கட்
கெளியானையரணமூன்றெயத, வில்லானைசசரம்விசயற்கருள்செய்தா
னைவெங்கதிரோன்மாமுனிவர்விரும்பியேத்து, நல்லானைத்தீயாடு நம்
பன்றன்னைநாரையூர்நன்னகரிற்கண்டேனே. (௧)

பஞ்சுண்டமெல்லடியாள்பங்கன்றன்னைப் பாரொடுநீர்சுடர்படர்
காற்றாயினானை, மஞ்சுண்டவானாகி வானந்தன்னின் மதியாகிமதிசடை
மேல்வைத்தான்றன்னை, நெஞ்சுண்டநினைவாகி நின்றான்றன்னை நெடுங்
கடலைக்கடைந்தவர்போய்நீங்கவோங்கு, நஞ்சுண்டுதேவர்களுக்கமுதீந்
தானைநாரையூர்நன்னகரிற்கண்டேனே. (௨)

ஆழவாதியாவார்க்கு மூத்தான்றன்னை முடியாதேமுதனடுவுமுடிவானா
னைத், தேவாதிதேவர்க்குந்தேவன்றன்னைத் திசைமுகன்றன்சிரமொ
ன்றறுசிதைத்தான்றன்னை, யாவாதவடலேலொன்றுடையான்றன்னை ய
டியேற்குநினைதோறுமண்ணிக்கின்ற, நாவானைநாவினினல்லுரையா
னானைநாரையூர்நன்னகரிற்கண்டேனே. (௩)

செம்பொன்னைநன்பவளந்திகழுமுத்தைச் செழுமணியைத்தொழு
மவர்தஞ்சித்தத்தானை, வம்பவிழுமலர்க்கணைவேளுலகநோக்கிமகிழ
ந்தானைமதிற்கச்சிமன்னுகின்ற, கம்பனையெங்கயிலாயமலையான்றன்னை
கக்ழுகின்றுகொக்குத்தனகருதிப்போர்த்து, நம்பனையெம்பெருமானைநாதன்
றன்னைநாரையூர்நன்னகரிற்கண்டேனே (௪)

புரையுடையகரியுரிவைப்போர்வையானைப் புரிசடைமேற் புனல
டைத்தபுனிதன்றன்னை, விரையுடையவெள்ளெருக்கங்கண்ணியானை
வெண்ணீறுசெம்மேனிவிரவினானை, வரையுடையமகடவஞ்செய்மணா
ளன்றன்னைவருபிணிநோய்பிரிவிக்குமருந்துதன்னை, நரைவிடைநற்
கொடியுடையநாதன்றன்னைநாரையூர்நன்னகரிற்கண்டேனே. (௫)

பிறவாதுமிறவாதுபெருகினானைப் பேய்பாடநடமாடும்பித்தன்றன்
னை, மறவாதமனத்தகத்துமன்னினானைமலையானைக்கடலானை வனத்து
ளானை, யுறவானைப்பகையானையுயிரானானை யுள்ளானைப் புறத்தானை
யோசையானை, நறவாரும்பூங்கொன்றைசூடினானைநாரையூர்நன்னகரி
ற்கண்டேனே. (௬)

தக்கனதுவேள்விகெடச்சாடினானைத் தலைகலனாப்பலியேற்றதலைவ
ன்றன்னைக், கொக்கரைச்சச்சரிவீணை பாணியானைக் கோணாகம்பூணாக
க்கொண்டான்றன்னை, யக்கினொடுமென்பணிந்தவழகன்றன்னை யறு
முகனோடானைமுகற்கப்பன்றன்னை, நக்கனைவக்கரையானை நள்ளாற்
றானைநாரையூர்நன்னகரிற்கண்டேனே. (௭)

அரிபிரமாதொழுதேத்துமத்தன்றன்னை யந்தகனுக்கந்தகனை யளக்
கலாகா. எரிபரியமிலிங்கபுராணத்துளானையெண்ணாகிப்பண்ணாகி

மூத்தானைத், திரிபுரஞ்செற்றொருமூவர்க்கருள்செய்தானைச் சிலந்திக்குமரசளித்தசெல்வன்றன்னை, நரிவிரவுகாட்டகத்திலாடலானை நாரையூர்நன்னகரிற்கண்டேனானே. (அ)

774 ஆலாலமிடற்றணியா வடகினானை யாலதன்கீழற நால்வர்க்கருள் செய்தானைப், பாலாகித்தேனாகிப் பழமுமாகிப் பைங்கரும்பாயங்கருந் துஞ் சுவையானானை, மேலாயவேதியர்க்கு வேள்வியாகி வேள்வியினின்பயனாய விமலன்றன்னை, நாலாயமறைக்கிறைவனாயினானை நாரையூர்நன்னகரிற் கண்டேனானே. (௯)

775 மீளாதவாளென்னை யுடையான்றன்னை வெளிசெய்தவழிபாடு மேவினானை, மாளாமைமறையவனுக்குயிருமவைத்துவன்கூற்றினுயிர்மாளவுதைத்தான்றன்னைத், தோளாண்மைகருதிவரையெடுத்தவூர்த்தன் றோளவலியுந்தாளவலியுந் தொலைவித்தாங்கே, நாளோடுவாள் கொடுத்தநம்பன்றன்னை நாரையூர்நன்னகரிற்கண்டேனானே. (௰)

திருச்சிற்றம்பலம்.

ஆகப்பதிகம் - ௭௪.

திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம். - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

776 சொன்மலிந்தமறைநான்காறங்கமாகிச் சொற்பொருளுங் கடந்த சுடர்ச்சோதிபோலுங், கன்மலிந்தகயிலைமலைவாணர்போலுங் கடனஞ்சமுண்டிருண்ட கண்டர்போலு, மன்மலிந்தமணிவரைத் திண்டோளர்போலு மலையரையன் மடப்பாவை மணாளர்போலுங், கொன்மலிந்தமூவிலைவேற் குழகர்போலுங் குடந்தைக்கீழ்க்கோட்டத்தெங் கூத்தனாரே. (க)

977 கானவிளங்கலிமறவனாகிப்பார்த்தன் கருத்தளவு செருத்தொகுதி கண்டார்போலும், ஆனவிளங்கொவிடையொன்றேறியண்டத் தப்பாலும் பலிதிரியுமழகர்போலுந், தேனவிளந்துவலைமலிதென்றன் மூன்றிற் செழும்பொழிற்பூம்பாளைவிரிதேறலாறுங், கூனவிளம்பிறைதடவுகொடிகொண்மாடக் குடந்தைக் கீழ்க்கோட்டத் தெங்கூத்தனாரே.

978 நீறலைத்ததிருவுருவு நெற்றிக்கண்ணு நிலாவலைத்தபாம்பினொடுநிறைநீர்க்கங்கை, யாறலைத்தசடைமுடியும்பொற்றோளுமடியவர்க்குங் காட்டியருள்புரிவார்போலும், ஏறலைத்தமிர்கொடியொன்றுடையார்

போலுமேழுலகுந்தொழுகழலெம்மீசர்போலுங், கூறலைத்தமலைமடந்
தைகொழுநர்போலுங்குடந்தைக்கீழ்க்கோட்டத்தெங்கூத்தனாரே. (௫)

தக்கனதுபெருவேள்விதகர்த்தார்போலுஞ் சந்திரனைக்கலைகவர்ந்து
தவிர்த்தார்போலுஞ், செக்கரொளிபவளவொளிமின்னின்சோதிசெழு
ஞ்சுடர்த்தீஞாயிறெனச்செய்யார்போலு, மிக்கதிறன்மறையவரால்விளங்
குவேள்விமிகுபுகைபோய்விண்பொழியக்கழனியெல்லாங்,கொக்கினி
யகனிசிதறித்தேறல்பாயுங் குடந்தைக்கீழ்க்கோட்டத்தெங்கூத்தனாரே.

காலன்வலிதொலைத்தகழற்காலார்போலுங் காமனெழிலழல்விழுங்
கக்கண்டார்போலும். ஆலதனிலறநால்வர்க்களித்தார்போலுமாறொடு
பெண்ணலியல்லரானார்போலும்,நீலவுருவயிரநிரைபச்சை செம்பொன்
னெடும்பளிங்கென்றறிவரியதிறத்தார்போலுங், கோலமணிகொழித்தி
ழியும்பொன்னிநன்னீர்க் குடந்தைக்கீழ்க்கோட்டத்தெங்கூத்தனாரே.

முடிகொண்டவளமதியுமூன்றுயத்தோன்றுமுளைஞாயிறன்னமலர்
க்கண்கண்மூன்று, மடிகொண்டசிலம்பொலியுமருளார்சோதி யணி
முறுவற்செவ்வாயுமழகாயத்தோன்றத், துடிகொண்டவிடைமடவாள்
பாகங்கொண்டுசுடர்ச்சோதிக்கடற்செம்பொன் மலைபோலிந்நாட், கு
டிகொண்டென்மனத்தகத்தேபுகுந்தார்போலுங் குடந்தைக்கீழ்க்கோ
ட்டத்தெங்கூத்தனாரே (ஆ)

காரிலங்குதிருவுருவத்தவற்குமற்றைக் கமலத்திற்காரணற்குங்கா
ட்சியொண்ணாச், சீரிலங்குதழற்பிழம்பிற்சிவந்தார்போலுஞ் சிலைவளைவித்
தவுணர்புரஞ்சிதைத்தார்போலும், பாரிலங்குபுனலனல்கால்பரமாகாச
ம்பருதிமதிசுருதியுமாய்ப்பரந்தார்போலுங், கூரிலங்குவேற்குமரன் றா
தைபோலுங்குடந்தைக்கீழ்க்கோட்டத்தெங்கூத்தனாரே. (எ)

பூச்சூழ்ந்தபொழிற்புழுவுபுகலூருள்ளார் புறம்பயத்தார் றமபுரிபூந்து
ருத்திபுக்கு, மாசூழ்ந்தபழனத்தார் நெய்த்தானத்தார் மாதவத்துவள
சோற்றுத்துறையாரல்ல, தீச்சூழ்ந்ததிகிரிதிருமாலுக்கீந்துதிருவானைக்
காவிலோர்சிலந்திக்கந்நாட், கோச்சோழர்குலத்தரசுகொடுத்தார்போலு
ங்குடந்தைக்கீழ்க்கோட்டத்தெங்கூத்தனாரே. (அ)

பொங்கரவர்புலித்தோலார்புராணர்மார்பிற் பொறிகிளர்வெண்பு
ணநூற்புனிதர்போலுஞ், சங்கரவக்கடன்முகடுதட்டவிட்டுச் சதுரங்க
மாட்டுகந்தசைவர்போலும், அங்கரவத்திருவடிக்காட்பிழைப்பத்தந்தை
யுந்தணையறவெறிந்தார்க்கருளப்போதே, கொங்கரவச்சடைக்கொ
ன்றைகொடுத்தார்போலுங்குடந்தைக்கீழ்க்கோட்டத்தெங்கூத்தனாரே.

ஏ லிபிடர்க்கடலிடைப்பட்டிளைக்கின்றேனை யிப்பிறவியறுத்தேற வாங்கியாங்கே, கூவிமலருலகனைத்துமுருவிப்போகக்குறியிலறுகுணத்தாண்டுகொண்டார்போலுங், தாவிமுதற்காவிரிநல்யமுனைகங்கைசரசுவதிபொற்றாமரைபுட்கரணிதெண்ணீர்க், கோவியொடுகுமரிவருதீர்த்தஞ்சூழ்ந்தகுடந்தைக்கீழ்க்கோட்டத்தெங்கூத்தனாரே. (௧0)

செறிகொண்டசிந்தைதனுட்டெளிந்துதேறித் தித்திக்குஞ்சிவபுவனத்தமுதம்போலு, நெறிகொண்டகுழலியுமைபாகமாக நிறைந்தமரர்க்கணமவணங்கநின்றார்போலு, மறிகொண்டகரத்தமர்ந்தெம்மையாள்வார்போலுமதிலிலங்கைக்கோனமலங்கவரைக்கீழிட்டுக், குறிகொண்டவின்னிசைகேட்டுகந்தார்போலுங் குடந்தைக்கீழ்க்கோட்டத்தெங்கூத்தனாரே.

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது. சுவாமிபெயர்-மடந்தைபாகேசுவரர்-தேவியார்-பெரியநாயகியம்மை.

ஆகப்பதிகம் - ௭௫.

திருப்புத்தூர் - திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

புரிந்தமரர்தொழுதேத்தும் புகழ்த்தக்கானகாண் போர்விடையின்பாகன்காண் புவனமேழும், விரிந்துபலவுயிராகிவிளங்கினனகாண் விரைக்கொன்றைக்கண்ணியனகாண் வேதநான்கும், தெரிந்துமுதலபடைத்தோனைசசிரங்கொண்டோனகாண் டீர்த்தனகாண்டிருமாலோர் பங்கத்தான்காண், டிருந்துவயல்புடைத்தழுவுதிருப்புத்தூரிற்றிருத்தளியான் காணவனென்சிந்தையானே. (௧)

வாரருமுலைமங்கைபங்கத்தான்காண் மாமறைகளாயவன்காண் மண்ணும்விண்ணுங், கூராரவெந்தழலவனுங்காற்றுநீருங் குலவரையுமாயவன்காண்கொடுஞ்சுணட, காரருங்கண்டனகா ணெண்டோளன்காண் கயிலைமலைப்பொருப்பன்காணவிருடபோடென்றுந், தேராருநெடுவீதித்திருப்புத்தூரிற்றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. (௨)

மின்காட்டுங்கொடிமருங்குலுமையாட்கென்றும்விருப்பவன்காண் பொருப்புவலிசிலைக்கையோன்காண், நன்பாட்டுப்புலவனாய்ச்சங்கமேறிநற்கனகக்கிழிதருமிக்கருளினோன்காண், பொன்காட்டக்கடிக்கொன்றைமருங்கேநின்றபுனற்கரந்தன்கைகாட்டக்கண்டுவண்டு, தென்காட்டுஞ்செழும்புறவிற்றிருப்புத்தூரிற்றிருத்தளியான்காணவனென் சிந்தையானே. (௩)

ஏ டேறுமலர்க்கமலத்தயனுமாலுமிந்திரனும் பணிந்தேத்தவிருக்கின்
றான்காண், தோடேறுமலர்க்கடுக்கைவன்னிமத்தந் துன்னியசெஞ்ச
டையான்காண்கெடீர்சங்க, மாடேறிமுத்தீனுங்கானல்வேலிமறைக்கா
டமாமணிகாண்வளங்கொணமேதி, சேடேறிமடுப்படியுந்திருப்புத்
தூரிற்றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. (௪)

கருமருவுவல்வினைநோய்காற்றினான்காண் காமருபூங்கச்சியேகம்ப
த்தான்காண், பெருமருவுபேருலகிற்பிணிகடீர்க்கும்பெரும்பற்றத்தண்
புலியூர்மன்றாடிகாண், டருமருவுகொடைத்தடக்கை யளகைக்கோன்ற
ன சங்காதியாரூரிற்றனியானைகாண், டிருமருவுபொழில்புடைசூழ்தி
ருப்புத்தூரிற்றிருத்தளியானகாணவனென்சிந்தையானே. (ரு)

காம்பாடுதோளுமையாள் காணநட்டங் கலந்தாடலபுரிந்தவன்கா
ண்கையில்வெய்ய, பாம்பாட்டப்படுதலையிற்பலிகொள்வான்காண்பவள
த்தினபருவரைபோற்படிமத்தான்காண், டாம்பாடுசினவிடையேப்பாக
டாகக்கொண்ட சங்கரன்காண்பொங்கரவக்கச்சையோன்காண், சேம்
பாடுவயல்புடைசூழ்திருப்புத்தூரிற் றிருத்தளியானகாணவனென்சிந்
தையானே. (சா)

வெறிவிரவு மலர்க்கொன்றைவிளங்குதிங்கள் வன்னியொடுவிரிச
டையேனமிலைச்சினான்காண், பொறிவிரவுகதநாகமக்கினோடு பூண்டவ
ன்காண்பொருபுலித்தோலாடையான்கா, ணறிவரியநுண்பொருள்க
ளாயினான்காணுயிரமபேருடையவன்காணந்தண்கானற், செறிபொ
ழில்சூழ்மணிமாடத்திருப்புத்தூரிற் றிருத்தளியானகாணவனென்சிந்
தையானே. (எ)

புக்கடைந்தவேதியற்காய்க்காலற்காய்ந்த புண்ணியன்காண்வெண்
ணகைவெள்வளையாளஞ்ச, மிக்கெதிர்ந்தகரிவெருவவுரித்தகோன்காண்
வெண்மதியைக்கலைசேர்த்த திண்மையோன்காண், அக்கரும்புபெரும்
புன்னை நெருங்குசோலையாரூர்க்கதிபதிகாணந்தண்டென்றல், திக்க
லைந்துவருமருங்கிற்றிருப்புத்தூரிற் றிருத்தளியானகாணவனென்சிந்
தையானே. (அ)

பற்றவனகாணேனோர்க்கும் வானோருக்கும் பராபரன்காண்டக்க
ன்றன்வேள்விசெற்ற, கொற்றவன்காண்கொடுஞ்சினத்தை யடங்கச்
செற்று ஞானத்தைமேன்மிகுத்தல்கோளாகக்கொண்ட, பெற்றியன்கா
ண்பிறங்கருவிக்கழுக்குன்றத்தெம் பிஞ்ஞகன்காண்பேரொழிலார்க்கம

வேலைச், செற்றவன்காண்சீர்மருவு திருப்பூந்துருத்தித் திருத்தளியான்
காணவனென் சிந்தையானே. (௯)

796 ஊரமிர்த்த சலந்தரன்றனுடல் கீண்ட வோராழிப்படைத்தவன்காணுல
குசூழும், வரமிக்க கதிரவனைப் பற்கொண்டான்காண் வானவர்கோன
புயநெரித்த வல்லாளன்காண், அரமிக்க செம்பொன்னினாரம்பூணா
அணிந்தவன்காண் அலைகடல்சூழிலங்கைவேந்தன், சிரநெரித்த சேவடிகா
ண்டிருப்பூந்துருத்தித் திருத்தளியான்காணவனென்சிந்தையானே. (௰)

திருச்சிற்றம்பலம்

இது பாண்டிநாட்டிலுள்ளது. சுவாமிபெயர் - புத்தூரீசர். தேவியார் - சிவகாமியம்மை.

ஆகப்பதிகம் - ௭௬.

திருவாய்மூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்

797 பாடவடியார் பரவக்கண்டேன் பத்தர்கணங்கண்டேன் மொய்த்த
பூதம், ஆடன்முழவமதிரக்கண்டேனங்கையனல்கண்டேன் கங்கையாளை
க், கோடலரவார்சடையிற்கண்டேன் கொக்கினிதழ்கண்டேன் கொன்
றைகண்டேன், வாடற்றலையொன்றுகையிற்கண்டேன் வாய்மூரடிக
ளைநான்கண்டவாறே. (க)

798 பாலின்மொழியாளோர்பாகங்கண்டேன் பதினெண்கணமும்பயி
லக்கண்டே, னீலநிறமுண்டகண்டங்கண்டே னெற்றிநுதல்கண்டேன்
பெற்றங்கண்டேன், காலைக்கதிர்செய்மதியங்கண்டேன் கரந்தைதிருமு
டிமேற்றோன்றக்கண்டேன், மாலைச்சடையுமுடியுங்கண்டேன் வாய்மூ
ரடிகளைநான்கண்டவாறே. (உ)

799 மண்ணைத்திகழநடமதாடும்வரைசிலம்பார்க்கின்றபாதங் கண்டேன்
விண்ணிற்றிகழுமுடியுங்கண்டேன் வேடம்பலவாஞ்சரிதைகண்டே
னண்ணிப்பிரியாமழுவுங்கண்டே னான்மறையங்கமோதக்கண்டேன்,வ
ண்ணப்பொலிந்திலங்குகோலங்கண்டேன் வாய்மூரடிகளைநான்கண்
டவாறே. (௩)

800 விளைத்தபெரும்பத்திகூரநின்று மெய்யடியார்தம்மை விரும்பக்க
ண்டேன், இளைக்குங்கதநாகமேனிகண்டே னென்பின்கலன்றிகழ்ந்து
தோன்றக்கண்டேன், திளைக்குந்திருமார்பி னீறுகண்டேன் சேணார்ம
தின்மூன்றும்பொன்றவன்று, வளைத்தவரிசிலையுங்கையிற்கண்டேன்வா
ய்மூரடிகளைநான்கண்டவாறே. (௪)

நான்மறையும்போதகத்தினுரிவைகண்டேன் காலிற்கழல்கண்டேன்கரியின்றோல்கொண், டேன்மறையப்போர்த்தவடிவுங்கண்டே னுள்ளமனம்வைத்தவுணர்வுங்கண்டே, னுன்மறையாரேறுகொடியமாலு நன்னிவரக்கண்டேன் றிண்ணமாக, மான்மறிதங்கையின்மருவக்கண்டேன் வாய்மூரடிகளைநான்கண்டவாறே. (௫)

அடியார்சிலம்பொலிகளாரப்பக்கண்டே னவ்வவர்க்கேயீந்தகருணைகண்டேன், முடியார்சடைமேலரவமூழ்கி மூரியபிறைபோயமறைபக்கண்டேன், கொடியாரதன்மேலிடவங்கண்டேன் கோவணமுங்கீளுங்குலாவக்கண்டேன், வடியாருமூவிலைவேல்கையிற்கண்டேன் வாயமூரடிகளை நான்கண்டவாறே. (௬)

குழையார்திருத்தோடு காதிற்கண்டேன் கொக்கரையுஞ் சச்சரியுங்கொள்கைகண்டே, னிழையார்புரிநூல்வலத்தேகண்டே னேழிசையாழவீணை முரலக்கண்டேன், றழையார்சடைகண்டேன் றன்மைகண்டேன்றக்கையொடுதாளங்கறங்கக்கண்டேன், மழையார்திருமிடறுமற்றுங்கண்டேன் வாய்மூரடிகளைநான்கண்டவாறே. (௭)

பொருந்தாதசெய்கை பொலியக்கண்டேன் போற்றிசைத்துவிண்ணோர்புகழக்கண்டேன், பரிந்தார்க்கருளும்பரிசுங்கண்டேன் பாராகிப்புனலாகிநிற்கைகண்டேன், விருந்தாயப்பரந்த தொகுதிகண்டேன் மெல்லியலுமவிநாயகனுந்தோன்றக்கண்டேன், மருந்தாயப்பிணிதீர்க்குமாறுகண்டேன், வாய்மூரடிகளைநான்கண்டவாறே. (௮)

மெய்யன்பரானார்க்கருளுங்கண்டேன் வேடுவனாய்நின்றநிலையுங்கண்டேன், கையம்பரனெரித்தகாட்சிகண்டேன் கங்கணமுமங்கைக்களனுங்கண்டே, னையம்பலவூர்திரியக்கண்டே னற்றவன்றன் வேள்வியழித்துகந்து, வையம்பரவவிருந்ததலகண்டேன்வாய்மூரடிகளைநான்கண்டவாறே. (௯)

இலங்கைவிருவாகக்கழலாய்நீண்டகாரணமுங்கண்டேன் கருவாயின்று, பலங்கடரித்துகந்தபண்புங்கண்டேன் பாடலொலியெலாங்கூடக்கண்டே, னிலங்கைத்தலைவன்சிரங்களபத்து மிறுத்தவனுக் கீந்தபெருமைகண்டேன், வலங்கைத்தலத்துள்ளனலுங்கண்டேன்வாய்மூரடிகளைநான்கண்டவாறே. (௰)

திருச்சிற்றம்பலம்.

திருவாலங்காடு - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒன்றாவுலகனைத்துமானார்தாமே யூழிதோறூழியுயர்ந்தார்தாமே, நின்றாகியெங்குநிமிர்ந்தார்தாமேநீர்வளிதீயாகாசமானார்தாமே, கொன்றுடுங்கூற்றையுதைத்தார்தாமேகோலப்பழனையுடையார்தாமே, சென்றுதீர்த்தங்களானார்தாமேதிருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே. ()

மலைமகளைப்பாகமமர்ந்தார்தாமே வானோர்வணங்கப்படுவார்தாமே, சலமகளைச்செஞ்சடைமேல்வைத்தார்தாமேசரணென்றிருப்பார்கட்கன்பர்தாமே, பலபலவுமவேடங்களானார்தாமேபழனைபதியாவுடையார்தாமே, சிலைமலையாமூவெயிலுமட்டார்தாமேதிருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே. (௨)

ஆவுற்றவைந்துமுகந்தார்தாமே யளவில்பெருமையுடையார்தாமே பூவுற்றநாற்றமாய்நின்றார்தாமேபுனிதப்பொருளாகிநின்றார்தாமே, பாவுற்றபாடலுகப்பார்தாமேபழனைபதியாவுடையார்தாமே, தேவுற்றடிபரவநின்றார்தாமே திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே (௩)

நாறுபூங்கொன்றை முடியார்தாமே நான்மறையோடாறங்கஞ்சொன்னார்தாமே, மாறிலாமேனி யுடையார்தாமே மாமதியஞ்செஞ்சடைமேல் வைத்தார்தாமே, பாறினார்வெண்டலையிலுண்டார்தாமே பழனைபதியாவுடையார்தாமே, தேறினார்சித்தத்திருந்தார்தாமேதிருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே. (௪)

அல்லும்பகலுமாய்நின்றார்தாமேயாதியுஞ்சாதியுமானார்தாமே, சொல்லும்பொருளெலாமானார்தாமேதோத்திரமுஞ்சாத்திரமுமானார்தாமே பல்லுயிர்க்கும்பாவெலாமானார்தாமே பழனைபதியாவுடையார்தாமே செல்லுநெறிகாட்டவல்லார்தாமே திருவாலங்காடுறையுஞ் செல்வர்தாமே. (௫)

தொண்டாய்ப்பணிவார்க்கணியார்தாமேதூநீறணியுஞ் சுவண்டர்தாமே, தண்டாமரையானுமாலுந்தேடத்தழலுருவாயோங்கிநிமிர்ந்தார்தாமே, பண்டானிசைபாடநின்றார்தாமேபழனைபதி யாவுடையார்தாமே, திண்டோள்களெட்டுமுடையார்தாமே திருவாலங்காடுறையுஞ் செல்வர்தாமே. (௬)

மைபாருங்கண்டமிடற்றார்தாமேமயானத்திலாடல் மகிழ்ந்தார்தாமே, பையாருமரவுமாலைக்காவுமம்பலமுங்கோயிலாக் கொண்டார்

தாமே,பையாடரவமசைத்தார்தாமேபழனைபதியாவுடையார்தாமேசெய்யாள்வழிபடவுநின்றார்தாமே திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே.

விண்முழுதுமண்முழுதுமானார்தாமே மிகசோர்களேத்துங்குணந் தார்தாமே, கண்விழியாற்காமனையுங்காய்ந்தார்தாமேகாலங்களூழிகடந்தார்தாமே, பண்ணியலும்பாடலுகப்பார்தாமேபழனைபதியாவுடையார்தாமே, திண்மழுவாளேந்துகரத்தார்தாமேதிருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே. ௮ (அ)

காரார்கடனஞ்சை யுண்டார்தாமே கயிலைமலையையுடையார்தாமே, யூராவேகம்ப முகந்தார்தாமே யொற்றியூர்பற்றி யிருந்தார்தாமே, பாரார்புகழப் படுவார்தாமே பழனைபதியா வுடையார்தாமே, தீராதவல்வினைநோய் தீர்ப்பார்தாமே திருவாலங்காடுறையுஞ் செல்வர்தாமே. (௯)

மாலைப்பிறைசென்னி வைத்தார்தாமே வண்கயிலைமாமலையை வந்தியாத, நீலக்கடல்சூழிலங்கைக்கோனை நெரியவிரலாலடர்த்தார்தாமே, பாலொத்தமேனி நிறத்தார்தாமே பழனைபதியா வுடையார்தாமே, சீலத்தார்தொழுதேத்துஞ் சிறத்தார்தாமே திருவாலங்காடுறையுஞ் செல்வர்தாமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வடாரண்யேசுவரர் - தேவியார் - வண்டார்குழலியம்மை.

ஆகபதிகம் - ௭அ.

திருத்தலையாலங்காடு - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

தொண்டர்க்குத்தூநெறியாய்நின்றான்றன்னைச் சூழ்நரகில்வீழாமே காப்பான்றன்னை, யண்டத்துக்கப்பாலைக் கப்பாலானை யாதிரைநாளாதரித்த வம்மான்றன்னை, முண்டத்தின் முளைத்தெழுந்த தீயாளனை மூவுருவத்தோருருவாயமுதலாய்நின்ற, தண்டத்திற்றலையாலங்காடன்றன்னைச் சாராதேசாலநாள்போக்கினேனே. (௧)

அகத்திருந்தவனையானை யம்மான்றன்னை யவுணர்புரமொருநொடியிலெரிசெய்தானைச், சொக்கிருந்தமகுடத்தெங் கூத்தன்றன்னைக் குண்டலஞ்சேர்காதானைக்குழைவார்சிந்தை, புக்கிருந்துபோகாதபுனிதன்றன்னைப் புண்ணியனையெண்ணருஞ்சீர்ப்போகமெல்லாந், தக்கிருந்தலையாலங்காடன்றன்னைச் சாராதேசாலநாள் போக்கினேனே. (௨)

19 மெய்த்தவத்தைவேதத்தைவேதவித்தை விளங்கிளமாமதிசூடும்விகிர்தன்றன்னை, யெய்த்தவமே யுழிதந்த வேழையேனை யிடர்க்கடலில் வீழாமே யேறவாங்கிப், பொய்த்தவத்தாரறியாதநெறிநின்றானைப் புனல்கரந்திட்டுமையொடொருபாகநின்ற, தத்துவனைத்தலையாலங்காடன்றன்னைச் சாராதேசாலநாள்போக்கினேனே. (௩)

1020 சிவனாகித்திசைமுகனாய்த்திருமாலாகிச் செழுஞ்சுடராயத்தீயாகிநீருமாகிப், புவனாகிப் புவனங்களனைத்துமாகிப் பொன்னாகிமணியாகிமுத்துமாகிப், பவனாகிப்பவனங்களனைத்துமாகிப் பசுவேறித்திரிவானோர்பவனாய்நின்ற தவனாயதலையாலங்காடன்றன்னைச் சாராதேசாலநாள் போக்கினேனே. (௪)

1021 கங்கையெனுங்கடும்புனலைக் கரந்தான்றன்னைக் காமருபூம் பொழிற்கச்சிக்கம்பன்றன்னை, யங்கையினின் மான்மறியொன்றேந்தினானை யையாறுமேயானை யாரூரானைப், பங்கமிலாவடியார்க்குப் பரிந்தான்றன்னைப் பருதிநியமத்தானைப் பாசூரானைச், சங்கரனைத்தலையாலங்காடன்றன்னைச் சாராதேசாலநாள்போக்கினேனே. (௫)

1022 விடந்திகழுமரவரைமேல்வீக்கினானை விண்ணவர்க்கு மெண்ணரியவளவிலானை, யடைந்தவரையமருலகமாள்விப்பானை யம்பொன்னைக்கம்பமாகளிறட்டானை, மடந்தையொருபாகனை மகுடந்தன்மேல் வார்புனலும்வாளரவுமதியும்வைத்த, தடங்கடலைத்தலையாலங்காடன்றன்னைச் சாராதேசாலநாள்போக்கினேனே. (௬)

1023 விடையேறிக்கடைதோறும் பலிகொள்வானை வீரட்டமேயானை வெண்ணீற்றானை, முடைநாறுமுதுகாட்டி லாடலானை மூன்றனையபின்றனையாநாளானை, யுடையாடையுரிதோலே யுகந்தான்றன்னை யுமையிருந்தபாகத்து ளொருவன்றன்னைச், சடையானைத் தலையாலங்காடன்றன்னைச் சாராதேசாலநாள் போக்கினேனே. (௭)

1024 கரும்பிருந்த கட்டிதனைக் கனியைத்தேனைக் கன்றாப்பினடுதறியைக் காறையானை, யிரும்பார்ந்த மூவிலைவேலேந்தினானை யென்னனைத்தென்னனைக் காவான்றன்னைச், சுரும்பமருமலர்க்கொன்றை சூடினானைத் தூயானைத்தாயாகி யுலகுக்கெல்லாந், தரும்பொருளைத் தலையாலங்காடன்றன்னைச் சாராதேசாலநாள் போக்கினேனே. (௮)

1025 பண்டளவுநரம்போசைப் பயனைப்பாலைப் படுபயனைக் கடுவெளியைக் கனலைக்காற்றைக் கண்டளவிற்களிகூர்வார்க்கெளியான்றன்னைக்

காரணனை நாரணனைக் கமலத்தோனை, யெண்டளவிலென்னெஞ்சத்
துள்ளேநின்ற வெம்மானைக் கைம்மாவினுரிவைபேணுந், தண்டரனைத்
தலையாலங் காடன்றன்னைச் சாராதே சாலநாள் போக்கினேனே. (௯)

கைத்தலங்களிருபதுடை யரக்கர்கோமான் கயிலைமலையதுதன்
னைக்கருதாதோடி, முத்தலங்கு முடிதுளங்கவளைகளெற்றி முடிகுத
லுந்திருவிரலொன்றவன்மேல்வைப்பப், பத்திலங்குவாயாலும் பாடல்
கேட்டுப் பரிந்தவனுக் கிராவணனென்றீந்தநாம, தத்துவனைத் தலை
யாலங் காடன்றன்னைச் சாராதே சாலநாள் போக்கினேனே. (௰)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது சுவாமிபெயர் - ஆடவல்லவீசுவரர் - தேவியார்-திருமடந்தையம்மை.

ஆகப்பதிகம் - ௭௬

திருமாற்பேறு - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பாரானைப் பாரில்பயனானைப் படைப்பாகிப் பல்லுயிர்க்கும் பரி
வோன்றன்னை, யாராதவின்னமுதையடியார்தங்கட் கனைத்துலகுமானா
னையமரர்கோனைக், காராருங்கண்டனைக் கயிலைவேந்தைக் கருதுவார்
மனத்தானைக் காலற்செற்ற, சீரானைச் செல்வனைத் திருமாற்பேற்றெ
ஞ்செம்பவளக்குன்றினைச் சென்றடைந்தேனே. (௧)

விளக்கின்றீயாகி வித்துமாகி விண்ணோடுமண்ணாகி விளங்குசெம்
பொன், றுளக்கின்றதுளையாகிச்சோதியாகித் தூண்டரியசுடராகித்து
ளக்கிலவானமேலே, மூளக்கின்றகதிர்மதிய மரவுமொன்றி முழங்
கொலிநீர்க்கங்கையொடுமூவாதென்று, திளைக்கின்றசடையானைத்தி
ருமாற்பேற்றெஞ்செம்பவளக்குன்றினைச்சென்றடைந்தேனே. (௨)

மலைமகடங்கோனவனைமாநீர்முத்தைமரகதத்தைமாமணியைமல்கு
செல்வக், கலைநிலவுங்கையானைக் கம்பன்றன்னைக் காண்பினியசெழுஞ்
சுடரைக்கனகக்குன்றை, விலைபெரியவெண்ணீற்றுமேனியானைமெய்
யடியார்வேண்டியதேவேண்டுவானைச், சிலைநிலவுகரத்தானைத் திருமா
ற்பேற்றெஞ் செம்பவளக்குன்றினைச்சென்றடைந்தேனே. (௩)

உற்றானையுடற்றனக்கோருயிரானானையோங்காரத்தொருவனையங்கு
மையோர்பாகம்,பெற்றானைப்பிஞ்ஞகனைப்பிறவாதானைப்பெரியனவும
ரியனவுமெல்லாமுன்னே, கற்றானைக்கற்பனவுந்தானேயாய கச்சியேகம்
பனைக்காலன்வீழச், செற்றானைத்திகழொளியைத் திருமாற்பேற்றெஞ்
செம்பவளக்குன்றினைச்சென்றடைந்தேனே. (௪)

31 நீறாகி நீறுமிழுநெருப்புமாகி நினைவாகி நினைவினிய மலையான்மங்கை, கூறாகிக்கூற்றாகிக்கோளுமாகிக் குணமாகிக்குறையாதவுவகைக் கண்ணீ, ராறாதவானந்தத்தடியார்செய்தவனாசாரம்பொறுத்தருளியவர் மேலென்றுஞ், சீறாதபெருமானைத்திருமாற்பேற்றெஞ் செம்பவளக்குன்றினைச்சென்றடைந்தேனே. (௫)

32 மருவினியமறைப்பொருளை மறைக்காட்டானை மறப்பிலியைமதியேந்துசடையான்றன்னை, யுருநிலவுமொண்சுடரையும்பரானை யுரைப்பினியதவத்தானையுலகில்வித்தைக், கருநிலவுகண்டனைக்காளத்தியைக் கருதுவாரமனத்தானைக்கலவிதன்னைச், செருநிலவு படையானைத் திருமாற்பேற்றெஞ்செம்பவளக்குன்றினைச்சென்றடைந்தேனே. (௬)

33 பிறப்பானைப் பிறவாதபெருமையானைப் பெரியானையரியானைப் பெண்ணாணாய, நிறத்தானைநின்மலனைநினையாதாரை நினையானைநினைவோரைநினைவோன்றன்னை, யறத்தானையறவோனையையன்றன்னைய ண்ணானைநண்ணரியவமரரேத்துந், திறத்தானைத்திகழொளியைத்திருமாற்பேற்றெஞ் செம்பவளக்குன்றினைச்சென்றடைந்தேனே. (௭)

34 வானகத்தில்வளர்முகிலைமதியந்தன்னை வணங்குவார்மனத்தானைவடிவார்பொன்னை, யூனகத்திலுறுதுணையையுலவாதானை யொற்றியூருத்தமனையூழிக்கன்றைக், கானகத்துக்கருங்களிற்றைக் காளத்தியைக் கருதுவார்கருத்தானைக்கருவைமூலத், தேனகத்திலின்சுவையைத்திருமாற்பேற்றெஞ்செம்பவளக்குன்றினைச்சென் றடைந்தேனே. (௮)

35 முற்றாதமுழுமுதலை முளையைமொட்டை முழுமலரின் மூர்த்தியைமுனியாதென்றும், பற்றாகிப்பல்லுயிர்க்கும் பரிவோன்றன்னைப் பராபரனைப் பரஞ்சுடரைப் பரிவார்நெஞ்சி, லுற்றானையுயர்கருப்புச் சிலையோனீறா யொள்ளழல்வாய்வேவவொரு நோக்கத்தானைச், செற்றானைத்திரிபுரங்கடிருமாற்பேற்றெஞ் செம்பவளக்குன்றினைச் சென்றடைந்தேனே. (௯)

36 விரித்தானைநான்மறையோடங்கமாறும் வெற்பெடுத்தவிராவணனைவிரலாலூன்றி, நெரித்தானைநின்மலனை யம்மான்றன்னை நிலாநிலவுசெஞ்சடைமேனிறைநீர்க்கங்கை, தரித்தானைச்சங்கரனைச் சம்புதன்னைத் தரியலர்கள்புரமூன்றுந் தழல்வாய்வேவச், சிரித்தானைத்திகழொளியைத்திருமாற்பேற்றெஞ்செம்பவளக்குன்றினைச் சென்றடைந்தேனே. (௰)

திருச்சிற்றம்பலம்.

[illegible].

திருக்கோடிகா. திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கண்டலஞ்சேர் நெற்றியிளங் காளைகண்டாய் கன்மதில்சூழ்கந் 703
தமாதனத்தான்கண்டாய், மண்டலஞ்சேர் மயக்கறுக்கு மருந்துகண்டா
ய் மதிட்கச்சியேகம்பமேயான்கண்டாய், விண்டலஞ்சேர் விளக்கொ
ளியாய் நின்றான்கண்டாய் மீயச்சூர்பிரியாத விகிர்தன்கண்டாய், கொ
ண்டலஞ்சேர்கண்டத்தெங்கூத்தன்கண்டாய் கோடிகாவமர்ந்துறை
யுங் குழகன்றானே. (௧)

வண்டாடுபூங்குழலாள் பாகன்கண்டாய் மறைக்காட்டுறையு 704
மணாளன்கண்டாய், பண்டாடுமபழவினைநோய் தீர்ப்பான்கண்டாய்
பரலோகநெறிகாட்டும் பரமன்கண்டாய், செண்டாடியவுணர்புரஞ்
செற்றான்கண்டாய் திருவாரூர்த்திருமூலத்தானன்கண்டாய், கொ
ண்டாடுமடியவர்தம் மனத்தான்கண்டாய் கோடிகாவமர்ந்துறையுங்
குழகன்றானே. (௨)

அலையார்ந்தபுனற்கங்கைச் சடையான்கண்டா யடியார்கட்கார 705
முதமானான்கண்டாய், மலையார்ந்தமடமங்கை பங்கன்கண்டாய் வா
னோர்கண்முடிக்கணியாய்நின்றான்கண்டா, யிலையார்ந்ததிரிசூலப் ப
டையான்கண்டா யேழுலகுமாய்நின்றவெந்தைகண்டாய், கொலை
யார்ந்தகுஞ்சரத்தோல்போர்த்தான்கண்டாய் கோடிகாவமர்ந்துறை
யுங் குழகன்றானே. (௩)

மற்றாருந்தன்னொப்பா ரில்லான்கண்டாய் மயிலாடுதுறையிடமா 706
மகிழ்ந்தான்கண்டாய், புற்றாடரவணிந்த புனிதன்கண்டாய் பூந்துருத்
திப் பொய்யிலியாய் நின்றான்கண்டாய், யறவோர்கட்கற்றுணையாய்நின்றான்
கண்டாயையாறகலாதவையன்கண்டாய், குற்றாலத்தமர்ந்துறையுங்கூ
த்தன்கண்டாயகோடிகாவமர்ந்துறையுங்குழகன்றானே. (௪)

வாரார்ந்தவனமுலையாள் பங்கன்கண்டாய் மாற்பேறுகாப்பாம 707
ழ்ந்தான்கண்டாய், போரார்ந்தமால்விடையொன் றூர்வான்கண்டாய்
புகலூரையகலாத புனிதன்கண்டாய், நீரார்ந்தநிமிர்சடையொன் றுடை
யான்கண்டாய் நினைப்பார்தம்வினைப்பாரமிழிப்பான்கண்டாய், கூரா
ர்ந்தமூவிலைவேற்படையான்கண்டாய், கோடிகாவமர்ந்துறையுங்குழ
கன்றானே. (௫)

கடிமலிந்தமலர்க்கொன்றைச் சடையான்கண்டாய் கண்ணப்புவி 708
ண்ணப்புக்கொடுத்தான்கண்டாய், படிமலிந்தபல்பிறவியறுப்பான்கண்

டாய்பற்றற்றார்பற்றவனாய்நின்றான்கண்டா, யடிமலிந்தசிலம்பலம்பத்
திரிவான்கண்டா யமரர்கணந்தொழுதேத்துமம்மான்கண்டாய், கொ
டிமலிந்தமதிட்டில்லைக்கூத்தன்கண்டாய, கோடிகாவமர்ந்துறையுங்கு
ழகன்றானே. (௯)

43 உழையாடுகரதலமொன்றுடையான்கண்டா யொற்றியூரொற்றி
யாவுடையான்கண்டாய், கழையாடுகழுகுன்றமமர்ந்தான்கண்டாய்கா
ளத்திக்கற்பகமாய் நின்றான்கண்டா, யிழையாடுமெண்புயத்த விறைவ
ன்கண்டாயென்னெஞ்சத்துண்ணீங்காவெம்மானகண்டாய, குழையா
டநடமாடுங்கூத்தன்கண்டாய்கோடிகாவமர்ந்துறையுங குழகன்றானே.

44 படமாடுபன்னகக்கச்சசைத்தான்கண்டாயபராய்த்துறையும்பாசூரு
மேயான்கண்டாய், நடமாடியேழுலகுந்திரிவான்கண்டாய நான்மறை
யின்பொருள்கண்டாய் நாதன்கண்டாய, கடமாடுகளிறுரித்தகண்டன்க
